கல்கி

குடும்பத்துடன் படிக்க...


KALKI 24.2.2008
ரூ.8.00 80 பக்கங்கள்



காங்கிரஸ் -
தே.மு.தி.க.
நிச்சயதார்த்தம்?



கவர்ச்சியை
எதிர்க்கும்
காஸ்ட்யூம்
டிசைனர்!



கற்பனை :
சுவரொட்டிகள், கட்-அவுட்,
விளம்பரங்கள் செய்யக்
கூடாதென அறிவித்த
எளிமை நாயகரே
எங்கள் தலைவரே!
கலைஞர்
அவர்களே!
உங்கள் கட்டளையைப் பின்பற்றுவோம்
என உறுதி கூறுகிறோம்.
இங்ஙனம்...
குமாரசாமி
(வட்டச் செயலாளர்)
பாருங்கள்...
கலைஞர் தொலைக்காட்சி
உங்கள் உடன்பிறப்புகள்...
மணி
முருகன்
அறிவு
தமிழ்மகன்
சுடரொளி

வட்டமேஜை

படிப்பவர் எண்ணிக்கை குறைந்து வரும் நாளில், முடிதிருத்தும் நிலையத்தை நூலகமாகவும் செயல்படச் செய்த திருவைகுமாரனுக்கு சல்யூட்!

முத்துப்பட்டி பா.பாலசுப்பிரமணியன்

தி.மு.க.வில் கனிமொழி ஒரு துளி தான். அவருக்காக கழகக் கண்மணிகள் தங்கள் குணாதிசயத்தை மாற்றிக்கொள்ள மாட்டார்கள்!

திருவாரூர், பரதன்

வெற்றிக்கு உழைப்பின் வழியே 'உத்தரவாதம்' கூறிய கிரேஸி பதில் மெய் சிலிர்க்க வைத்தது!

நாகர்கோவில், ஏ.பி.எஸ்.ரவீந்திரன்

ஏதேது, விட்டால் கமலுக்கும் மற்ற திரை டெக்னீஷியன்களுக்கும் புது யுக்தியைக் கையாள அருமையான ஐடியா சப்ளை செய்வாரோ குசும்புராஜ்!

திருச்சி - 17, சி.மகேஷ்

கேட்கப்பட்ட கேள்விகளுக்கெல்லாம் 'பளீர்' என்றுதான் பதில் சொல்லியிருக்கிறார் சரத்குமார். ஆனால் இந்த வேகமும், உறுதியும் காலப்போக்கில் மாறாமல் கடைசிவரை இருக்குமா?

மதுரை, என்.பாலகிருஷ்ணன்

கமல் Vs கமல் ரசிகர்கள் ஜாலி ஸ்டோர்ஸ் காமெடி, இடி சிரிப்பையும் மிஞ்சிவிட்டது.

ஈரோடு - 102, எஸ்.ராமசாமி

கடைசி வரை



தான் சாதிக்க இருப்பது இன்னும் நிறைய இருக்கிறது; சினிமாவில் முதலீடு செய்வதில் சுயநலமும் இருக்கிறது என்று கூறிய யதார்த்தவாதி பிரகாஷ்ராஜ்!

திருச்சி -17, எஸ்.ராஜேஸ்வரி

'பெண்மையை மதிக்காத சமுதாயம் விரைந்து பாழாகும்' என்ற கல்கியின் தலையங்க வரிகள், பொன்னேடுகளில் பொறிக்கப்பட வேண்டியவை.

மதுரை, வஸந்தா பரமசிவம்

புலிகளுக்கு ஆதரவாகப் பேசும் விடுதலைச் சிறுத்தைகளால், தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள சிக்கல்களைக் காட்டும் கார்ட்டூன், தூள்!

கோ.புதூர், இரா.சக்கரபாணி

பார்த்திபன் கனவு தொடரின் ஓவியங்கள் கண்களில் ஒற்றிக்கொள்ளலாம் போல அற்புதமாக இருக்கின்றன!

சென்னை - 75, எஸ்.ராதிகா

ஸ்வீட் போஸ்ட்

'ஏரிக்கரை மேலே போறவளே பெண்மயிலே' பாடல், கேமரா கதையினை வாசித்த பின்னரும் காதுகளில் ரீங்கரித்துக் கொண்டேயிருந்தது!

நெய்வேலி, சு.இந்துமதி

அரசாங்க முத்திரை பெற்றால், அதில் 'அனுபவ' முத்திரை குறைவாக இருக்கும் என்பதற்கு மற்றுமொரு உதாரணம், சரிந்து விழும் சமத்துவபுரம் கட்டுரை.

திருச்சி - 17, எம்.காயத்ரி

விடுதலைப்புலிகள் விவகாரத்தில், முதல்வர் கருணாநிதி மிகவும் குழம்பிப்போயிருக்கும் கார்ட்டூன் அருமை!

வேலூர் - 6, வி.என். கதிர்வேல்

இருக்குமா?

சீமானைப் போலவே 'வாழ்த்துகள்' திரை விமர்சனத்தில் ஆங்கிலச் சொற்களைப் பிரயோகப்படுத்தாமைக்கு நன்றி!

நெய்வேலி, சு.இந்துமதி

சக்கரவர்த்தி திருமகனையும், வியாசர் விருந்தையும் படைத்த மூதறிஞர் ராஜாஜி, சமைப்பதில் நளமகராஜா என்பதை உணர்ந்ததும் அறுசுவை உண்ட உணர்வு!

ஸ்ரீரங்கம், எஸ்.முரளி

ஸ்ரீ லலிதாவில் வந்த ஸ்ரீ ராஜராஜேஸ்வரி படத்தை ஃப்ரேம் போட்டு அப்படியே பூஜை அலமாரியில் வைக்கலாம்!

திண்டுக்கல் -1, எம்.விஸ்வநாதா

கல்கி ராஜேந்திரனின் 70 முதல் 7 வரை தொடர் மலரும் நினைவுகளின் மலர்ச் செண்டாக மணக்கிறது. படிக்கப் படிக்க புதுப் புது சுவைகளை உணர்கிறோம்!

பொள்ளாச்சி கமலா ராஜசேகரன்

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

தலைமை உதவி ஆசிரியர் :
மு.மாறன்

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
ச.கார்த்திகேயன்

தொலைபேசி :
2225 1522, 2225 0623,
2225 1324

தொலைநகல் :
044 - 22251021

மின்னஞ்சல் - ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com

சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com

பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் - உள்நாடு :
ஒரு வருடம் : ரூ. 440/-
ஆறு மாதம் : ரூ. 220/-

வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 65 யு.எஸ்.டாலர்


Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

புலிகள் பிரச்னையில் கலைஞரை சங்கடப்படுத்தியதைத் தொடர்ந்து காங்கிரஸ் மேலிடப் பார்வையாளர் அருண்குமார் - விஜயகாந்த் சந்திப்பு, கலைஞரின் டென்ஷனை ஏகத்துக்குக் கூட்டியிருக்கிறது. காங்கிரஸ் தரப்பிலிருந்து - குறிப்பாக தமிழ்நாடு காங்கிரஸிலிருந்து வரும் சிக்னல்கள், மிகுந்த மன உளைச்சலை உண்டு பண்ணியதன் காரணமாக, திட்டக் குழு விவாதத்துக்கு டெல்லி செல்லவிருந்த கலைஞர், தமது விஸிட்டையே கேன்சல் செய்துவிட்டார் என்கிறார்கள்.

தமிழக காங்கிரஸில் எல்லா கோஷ்டியினரும் ஒற்றுமையாக இருப்பது ஒரு விஷயத்தில்தானாம். வரும் பாராளுமன்றத் தேர்தலில் முடியாவிட்டாலும் 2011 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க.வை வெட்டிவிட்டு, விஜயகாந்துடன் மூன்றாவது அணி அமைத்துப் போட்டியிட வேண்டும் என்பதுதான் அது. தங்கள் தயவுடன் ஆட்சியிலிருக்கும் கலைஞர், காங்கிரஸ்காரர்கள் மீது கொஞ்சம்கூட கரிசனம் காட்டாமல் நடந்துகொள்வதுதான் இதற்குக் காரணம் என்கிறார்கள்.

''சாதாரண அரசு வழக்கறிஞரை நியமிப்பதற்குக்கூட எங்கள் சிபாரிசு எடுபடுவதில்லை'' என்று வருத்தப்படுகிறார் ஒரு

காங்கிரஸ் -



கோஷ்டித் தலைவர்! தலைமைச் செயலகம் முதற்கொண்டு, டிரான்ஸ்ஃபர், டெண்டர் வரை காங்கிரஸ்காரர்களின் விருப்பங்கள் புறக்கணிக்கப்பட்டு வருவதாக காங்கிரஸில் புலம்பல்கள் இருக்கின்றன. ஆனால், வாசன் தரப்பு பிரமுகர்கள் மட்டும் தங்கள் காரியங்களைச் சாமர்த்தியமாக நடத்திக்கொள்கிறார்கள் என்ற பேச்சும் இருக்கிறது.

''தமிழ்நாட்டு காங்கிரஸ்காரர்களை அறவே புறக்கணித்துவிட்டு, டெல்லியில் சோனியாவுடன் நல்லுறவு வைத்துக்கொண்டால் போதும் என்று நினைக்கிறது தி.மு.க. சோனியா தலைமைப் பொறுப்பிலிருக்கும் வரை ஜெயலலிதாவுடன் கூட்டு இல்லை என்பதை உறுதியாகப் புரிந்துகொண்டு

செயல்படுகிறார்கள். இந்த நிலையில் தனக்கென ஓர் ஆதரவு இருப்பதை நிரூபித்துவிட்ட விஜயகாந்துடன் கூட்டணி சேர்ந்து தி.மு.க., அ.தி.மு.க. இரண்டையும் நாங்கள் வீழ்த்த முயற்சிப்பதில் என்ன தவறு?'' என்று ஆவேசமாகவே நம்மிடம் கேட்டார் மூத்த காங்கிரஸ் பிரமுகர் ஒருவர். ஒரு பக்கம் தி.மு.க. தலைமையுடன் நல்லுறவை நீடித்துக்கொள்வதை யுக்தியாகக் கையாளும் காங்கிரஸ் தலைமை, மறுபுறம் தி.மு.க. - அ.தி.மு.க.வுக்கு மாற்று அணி அமைப்பதற்கும் பச்சைக் கொடி காட்டிவிட்டதாகப் பேச்சு இருக்கிறது.

'விஜயகாந்த் ரொம்ப நல்லா பேசுகிறாரே' என்று வியந்து போனாராம் அருண்குமார்...

தே.மு.தி.க. நிச்சயதார்த்தம்?



● அருண்குமார்

காங்கிரஸார் விஜயகாந்தோடு கூட்டணி வைத்துக்கொள்ள ஆசையாக இருந்தாலும், விஜயகாந்த் அவசரப்பட்டு எதையும் கமிட் செய்துகொள்வதில் ஆர்வமாக இல்லை என்கிறது தே.மு.தி.க. வட்டாரம். சிவகங்கையில் நடந்த ஒரு நிகழ்ச்சிக்கு செல்வதற்காக மதுரைக்கு விமானத்தில் சென்றார் அருண்குமார். அதே விமானத்தில் கோவில்பட்டி திருமணம் ஒன்றிற்குச் செல்வதற்காக விஜயகாந்தும் சென்றார். விமானத்தில் இருவருக்கும் அருகருகே ஸீட் என்றாலும், முதல் சில நிமிடங்கள் இருவரும் பேசிக்கொள்ளவில்லை. பின்பு காங்கிரஸ் பிரமுகர் ஒருவர் அறிமுகப்படுத்த, பேசத் துவங்கியிருக்கிறார்கள். முழுக்க, முழுக்க தமிழிலேயே விஜயகாந்த் பேசியதை தெலுங்கில் மொழிபெயர்த்து அருண்குமாருக்குக் கூறியிருக்கிறார் காங்கிரஸ் பிரமுகர். தமது குடும்பம் காங்கிரஸ் குடும்பம் என்றும், தமது தந்தை காங்கிரஸ் கவுன்சிலராக இருந்தவர் என்றும், இந்திராகாந்தி தங்கள் வீட்டிற்கு வந்திருப்பதாகவும் விஜயகாந்த் சொல்லியிருக்கிறார். அதன் பிறகு தி.மு.க. ஆட்சியில் தான் பாதிக்கப்பட்டதாகவும் விளக்கிச் சொல்லியிருக்கிறார்! கலைஞரின் ஆட்சி குறித்து கடும் விமர்சனங்களை முன் வைத்ததோடு, மேல்மட்டத்தில் வாரிசுகள் எந்த அளவுக்கு அரசின் மீது தாக்கத்தை ஏற்படுத்தி முறைகேடுகளில் ஈடுபடுகிறார்கள் என்பதையும் விஜயகாந்த் விவரித்துப் பேசியதாகச் சொல்லப்படுகிறது. அதற்குள் மதுரை வந்துவிடவே 'மற்றொரு சந்தர்ப்பத்தில் மீண்டும் பார்க்கலாம்' என்று விடைபெற்றுக் கொண்டார்களாம். 'விஜயகாந்த் ரொம்ப நல்லா பேசுகிறாரே'



மாறும் காட்சிகளை உன்னிப்பாக கவனித்து வருகிறது தி.மு.க.

என்று வியந்து போனாராம் அருண்குமார். தேர்தல் பற்றியோ, கூட்டணி பற்றியோ அன்று எதுவும் பேசப்படவில்லை என்று உறுதியாகச் சொல்லப்பட்டாலும், மூன்றாவது அணி அமைக்கும் வாய்ப்பை பரிசீலிக்குமாறு சிதம்பரம் உட்பட சில தலைவர்களுக்கு சோனியா சொல்லி யிருப்பதாக பலமாக பேச்சு அடிபடுகிறது.

விஜயகாந்த் சென்னை திரும்பிய போது அவருடன் அதே விமானத்தில் ப.சிதம்பரமும், கார்த்தி சிதம்பரமும் வந்திருக்கிறார்கள். இந்த இருவரும்கூட காங்கிரஸோடனான தே.மு.தி.க. கூட்டணி குறித்து விஜயகாந்துடன் தொடர்ந்து விவாதித்ததாகச் சொல்லப்படுகிறது. சிதம்பரத்துக்கும் அருண்குமாருக்கும் நல்ல நட்பு நீடித்து வரும் நிலையில் எல்லாமே சுமுகமாக நடந்திருக்கிறது என்கிறார்கள்.

மேலிடப் பார்வையாளர் அருண்குமார் ஆந்திர முதல்வர் ராஜசேகர ரெட்டிக்கு மிகவும் வேண்டியவர். இந்திரா, ராஜீவ் ஆகியோர் ஆந்திர மாநிலத்தில் டூர் செல்லும்போது அவர்தான் மொழி

அசோகா

விமர்சனம்

இந்தியாவுக்குத் துரோகமிழைக்கும் தீவிரவாதிகளை துவம்சம் செய்யும் விஜயகாந்த் பாணி கதை. பாதுகாப்புப் படை அதிகாரியாக வரும் பிரேம், சதியை எப்படி முறியடித்து நாட்டையும் பிரதமரையும் காப்பாற்றுகிறார் என்பது க்ளைமாக்ஸ். துடிப்பாக இருக்கிறார் பிரேம். செய்யும் அதிரடிகள் ஒவ்வொன்றும் அனலடிகள்! மருத்துவமனையில் புலனாய்வு செய்யும்போது செம க்யூட் நாயகி அனுஸ்ரீ ஊறுகாய். அவரது சி.ஐ.டி. சஸ்பென்ஸ சபாஷ்.



வில்லனாக ரகுவரன். அலுத்துப் போன ரோல் என்றாலும் உளுத்துப் போகாமல செய்திருக்கிறார். சபேஷ் - முரளி இசை சுமார் ரகம். திரைக்கதை டல்லடிக்கிறது. காமெடி இல்லாத குறையை வில்லன் குரூப் ஈடு செய்கிறது. ஆக்ஷன் காட்சிகளை மட்டும் அழகாய் பதிவு செய்திருக் கிறது ஒளிப்பதிவு. அழுத்தமாக இல்லாத கதை அந்தரத்தில் தொங்குகிறது. ஹீரோவுக்குத் தந்த முக்கியத்துவத்தை இயக்கத்திலும் காட்டியிருக்கலாம் பிரேம்.

- கனிகா

பெயர்ப்பாளர். வீரப்ப மொய்லிக்கு கலைஞரிடம் இருந்த 'ரேப்போ' அருண் குமாருக்கு இல்லை. 'நான் சாதாரண நபர். தேவையென்றால் கலைஞரைச் சந்திப் பேன்' என்று அருண்குமார் சொல்கிறாராம்.

இது ஒருபக்கமிருக்க, விஜயகாந்தின் உண்மையான பலம் குறித்தும் காங்கிரஸ் ஆராய்ந்து வருகிறது. 'ஒரு புது சக்தியாக வந்த அவருக்கு மக்கள் எட்டு சதவிகித வாக்குகளை அளித்தார்கள் என்பது உண் மைதான். ஆனால், கடந்த சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகு, அவர் கட்சி சார்பாகப் போட்டியிட்ட வேட்பாளர்கள் உட்பட பலர் விலகிவிட்டார்கள். அவரது கூட்டங் களுக்கு வரும் கூட்டம், இனி வரும் தேர் தல்களில் எந்த அளவுக்கு வாக்குகளாக மாறும் என்பது யூகத்துக்குரிய விஷயம். தி.மு.க.வுடன் கூட்டணி என்பது, பலமான அரசியல் சக்தி என்பதில் சந்தேகமில்லை'' என்கிறார் ஒரு காங்கிரஸ் பிரமுகர்.

விமானத்தில் அரங்கேறியிருக்கு மென்று பலராலும் நம்பப்படுகிற காங்கிரஸ் - தே.மு.தி.க. நிச்சயதார்த்தம், விரைவில் திருமணத்தில்



முடியுமென்று இரு கட்சித் தொண்டர்களும் சிலாகித்துக் கொண்டி ருக்க, மாறும் காட்சிகளை உன்னிப்பாக கவனித்து வருகிறது தி.மு.க.

- ப்ரியன்

**இங்கதான்
உங்க அலம்பல்
தாங்கலைன்னா
நிலாவுக்குப் போனாலும்
இதே கூத்துதானா!**

● **மு.ரா.பாலாஜி, கோலார் தங்கவயல்**

தெருவில் செல்லும்போது உங்களை 'ஜொள்' விடத் தூண்டுவது கொலுசுச் சத்தமா? வளையல் சத்தமா..?

கொலுசு - வளையல் சத்தக்காரிகளின் இடுப்பில் குந்தியிருக்கும் 'குவா குவா' சத்தம்!

● **வி.ஸ்ரீதரன், நாட்டரசன் கோட்டை**

'முழுமையான நித்திரை' என்பது என்ன?

நாலு பேர் தூக்கிப் போகும்போது வரும் தூக்கம்...! பின்ன என்ன சார்... சங்கு, தாரை, தப்பட்டை, ஒப்பாரி இப்படி இத்தனை சத்தத்தையும் மீறித் தூங்குகிறோம் என்றால், இதைவிட ஒரு 'முழுமையான நித்திரை' இருக்க முடியுமா...!

யார் மீது

★ **என்.சண்முகம், திருவண்ணாமலை**

மனிதன் மிருகம் ஆவது எப்போது? மிருகம் மனிதன் ஆவது எப்போது?

மிருகத்தை வேட்டை ஆடும்போது மனிதன் மிருகமாகிறான். மனிதனிடம் வாலைக் குழைக்கும்போது, மிருகம் மனிதனாகிறது. மிருகமாகும் மனிதனுக்கு விடுதலை அளிக்க, தூணைப் பிளந்து வரும் தெய்வம், மனித - மிருகமாகிறது (நரசிம்மம்).

● **கே.துரைசாமி, சென்னை**

'காமமில்லாக் காதல்' உண்டா? நேர் பதில் கூறவும்...

சுற்றி வளைத்துச் சொல்லப் பார்க்கிறேன்.... காமமாய் ஸாரி, calmமாய்க் கேளுங்கள். மொதல்ல தமிழ் மேல் காதல், தாய் - சேய் காதல் போன்ற காமமில்லாக் காதல்களை choiceல விட்டுருவோம். காதலைத் தூண்டும் மன்மதனுக்கு காமன் என்றுதான் பெயர். சரியா வரலை. இதையும் choiceல



விட்டுருவோம். காதல், கல்யாணத்தில் முடிந்து, காதலித்தவள் உண்டானால் காமம் உண்டு என்றுதானே அர்த்தமாகிறது. அவ்வளவு திருப்தியாக இல்லை. வழக்கம் போல choiceலே விட்டுருவோம். இட்லிக்கு மிளகாய்ப் பொடி தொட்டுக்கொள்கிறோம். பசிக்குத் தேவையான இட்லி காதல். ருசிக்குத் தேவையான மிளகாய்ப் பொடி காமம். உயிரோடு இருக்க இட்லி மட்டுமே சாப்பிட்டால் போதும். வெறும் உயிரோடு இருப்பது ஒரு வாழ்க்கையா என்றால், மிளகாய்ப் பொடி ருசி தேவையென்றா கிறது. அதற்காக மிளகாய்ப் பொடியையே சாப்பிட்டுக் கொண்டிருந்தால் என்னாவது? வயிறு கிழிந்து உயிரு போய்விடும்.

உங்க லுக்?

புருவத்தால் நமக்கு எந்த உபயோகமு மில்லை. இருந்தாலும் புருவமில்லாத நெற்றியை நினைத்துக்கூடப் பார்க்க முடிய வில்லை. காமமில்லாக் காதலுக்கு, புருவ மில்லா நெற்றியை ஓரளவு உவமையாகச் சொல்லலாம். புருவத்தை மறைக்கும் அளவுக்கு நெற்றியில் திருநீறு பூசி, ஈசனி டம் காதலாகிக் கசிந்திட, அழுக்காறு, அவா, வெகுளி, இன்னா சொல் போன்ற காமங்கள் விலகிடும்.

● லலிதா, மதுரை

Non-Vegetarianஐ அசைவம் என்று கூறுவது ஏன்?

அசைவதெல்லாம் அசைவம். என்றும் அசையாது இருக்கும் 'சிவமே' அசல் சைவம்.

● ஜே.வி.ஜே.கண்ணன், திருச்சி

இந்தியா, நிலாவுக்கு ராக்கெட் அனுப்பும்போது, அதில் உங்களையும் சேர்த்து அனுப்பினால் என்ன செய்வீர்கள்?

ஒரு பக்கெட் தண்ணீரும் டிடெர்ஜென்ட் சோப்பும் எடுத்துச் சென்று, நிலாவில் படிந்த கறையை நீக்குவேன். பிறகு, வட்டமான நிலாவில் பிரஷ்ஷால் இரண்டு கண்களும், சிரிக்கும் போஸில் வாயையும் வரைவேன். பூமியிலிருந்து பார்க்கும் குழந்தைகளுக்கு, வெண்ணிலா விழுந்து விழுந்து சிரிக்கும் fun நிலாவாகக் காட்சியளிக்கும்.

● கா.சங்கர், சாலை அகரம்

ஹைக்கூ மாதிரி ஒரு ஜோக்கூ சொல்லுங்களேன்?

'ஆடுவதற்கு
அழைப்பு வந்தது -
ஆல் இந்தியா ரேடியோவில்...

● எம்.அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி

பக்தி புரிகிறது. அது என்ன பய பக்தி?

'42 C பஸ்ஸுல உக்கார எடம் கிடைக்கணும். அதுவும் வெற்றிலை சீவல் துப்ப வசதியா ஓர சீட் கிடைக்க அருள்புரி ஆண்டவா... மொட்டை மாடில உன்னை நம்பி வத்தல், வடாம் உலத்தியிருக்கேன். மழை வராமப் பாத்துக்கம்மா மகமாயி...' என்று அல்ப விஷயங்களுக்கெல்லாம் நாமும் பயந்து, கடவுளையும் டிஸ்டர்ப் செய்து பயமுறுத்துவது, பய பக்தி.

● நீ.முத்துக்குமார், திருச்சி

கல்லூரி காலத்தில் உங்கள் காதல் ஒன்-வேயா... இல்லை, ரன் - வேயா...?

ஒன்வே, ரன்வேன்னு வெறுப்பேத்தாதவே. நான் படித்த கல்லூரியில் பாதைதான் உண்டு. பெண்கள் கிடையாது. கல்லும் முள்ளும் தான் காலுக்கு மெத்தை.



●

சந்தானகிருஷ்ணனின் எல்லா ஓவியங்களிலுமே மிக முக்கியமாக இடம் பெறுகிறது கதவு. ஒரு கதவு சாத்தியிருக்க, திறந்துள்ள கதவின் வழியாக வீட்டின் உட்புறம் தெரிகிறது.

வழியில் இருந்த பல அக்ரஹார வீடுகள் என் கவனத்தைக் கவர்ந்தன. காலை ஒன்பதரை மணிக்கு சைக்கிளில் செல்லும் போதும், மாலை நான்கரை மணிக்குத் திரும்பும்போதும் அந்த வீடுகளில் உள்ளே நிலவிய லேசான சூரிய ஒளியில் தெரிந்த முற்றம், அண்டா, பாய்லர், துளசி மாடம் போன்ற சின்னச் சின்ன விவரங்கள் என் மனத்தில் பதிந்தன.

கதவுகளையே கருப்பொருளாகக் கொண்டு ஸ்பெஷலைஸ் செய்தால் என்னவென்று தோன்றியது. மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த சஞ்சய் பட்டாச்சார்யா என்பவரின் ஓவியங்களும் இந்த விதத்தில் எனக்கு ஊக்கம் அளித்தன.

சில ஓவியங்களில் நிஜமான மரக்கதவை முப்பரிமாண உணர்வுக்காகப் பொருத்தியிருக்கிறேன்.



கதவுகளின்

பெரும்பாலும் பழங்கால வீடுகள். பாசி பிடித்த சுவர், சுவரில் அந்தக்கால விளம்பரம், மின்சார வாரியத்தின் எண்கள், வீட்டில் உள்ள குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து அளிக்கப்பட்டதன் அடையாள எண்கள், அந்தக் காலப் பூட்டுகள்... இப்படிச் சின்னச் சின்ன விவரங்களால் ஓவியங்களில் நகாசு செய்திருக்கிறார். தவிர, சில ஓவியங்களில் நிஜமான மரக்கதவு (உள்ளே தெரியும் வீடு மட்டும் கான்வாஸில்)!

''என் சொந்த ஊர் சேலத்தில் உள்ள எடப்பாடி என்ற கிராமம். நான் கும்பகோணத்தில் என் ஓவியப் பட்டப் படிப்பை முடித்தேன். பின், பட்ட மேற்படிப்பை சென்னை நுண்கலைக் கல்லூரியில் படித்தேன்.

கும்பகோணத்தில் படித்தபோது, அங்கிருந்து சுவாமி மலைக்குச் செல்லும்

அவற்றை கும்பகோணத்தில் உள்ள தச்சர்களிடம் ஆர்டர் செய்து வாங்குவது வழக்கம். சில நுண்ணிய மரவேலைப்பாடுகளை திருக்கோவிலூரில் உள்ள கலைஞர்கள் மூலம் செய்துகொள்வேன். ஆனால், அவற்றுக்கு வண்ணம் தீட்டுவது மட்டும் நான்தான்'' என்று விளக்குகிறார் சந்தானகிருஷ்ணன்.

இவரது ஓவியங்களைப் பார்க்க லலித் கலா அகாடமியில் பலரும் கூடினார்கள் என்றால், அதற்குக் காரணம், அந்த ஓவியங்களோடு பலரால் தங்களை இணைத்துப் பார்க்க முடிந்ததுதான்.

''டெக்ஸாஸிலிருந்து கண்காட்சிக்கு வந்திருந்த ஸ்ரீனிவாஸ் என்பவர், என்னுடைய ஓர் ஓவியத்தை வாங்கினார். என்னைப் பார்த்தே ஆகவேண்டும் என்று விருப்பப்பட்டு அடுத்த நாள் சந்தித்தார். 'எந்த வீட்டை அடிப்படையாகக்கொண்டு இதை வரைந்தீர்கள்?' என்று கேட்டார்.

'கும்பகோணம் கிருஷ்ணா ஸ்கூலுக்கு அடுத்ததாக இருந்த வீடு' என்றேன். கண் கலங்க, 'அது சிறு வயதில் நான் வளர்ந்த வீடு. இப்போது இடிக்கப்பட்டுவிட்டது. நான் பணம் சம்பாதித்து என்ன பயன்? நான் வளர்ந்த வீடு இதுதான் என்று என் குழந்தைகளுக்குக் காட்ட முடியாமல் போனதே என்று பல நாட்கள் வருத்தப்பட்டிருக்கிறேன். இப்போது அந்த பாரம் நீங்கியது' என்றார். பிறகு தன் குழந்தைகளிடம் 'இதோ இந்தத் துளசி மாடத்தில் தான் என் அம்மா பூஜை செய்வாள். இந்தப் பெரிய தூணைத்தான் நான் சின்ன வயதில் சுற்றிச் சுற்றி வருவேன்' என்றபடி மலரும் நினைவுகளில் ஆழ்ந்தார். அமெரிக்கா சென்ற பிறகும், 'காலை எழுந்ததும் உங்கள் ஓவியத்தில்தான் கண் விழிக்கிறேன்' என்று தொலைபேசியில் நெகிழ்ந்தார். ஓவியங்களுக்காக மாநில விருதுகளெல்லாம் வாங்கியதுண்டு. ஆனால்,

கதை!




இதுபோன்ற நெகிழ்ச்சியான பாராட்டுகளைத்தான் நான் மிக அதிகமாக மதிக்கிறேன். வெளிநாடுகளில் வாழும் இந்தியர்கள் பலரும் என் ஓவியங்களை வாங்கிச் செல்கிறார்கள். 'கதவு சந்தானம்' என்றே என்னைக் குறிப்பிடுகிறார்கள்.



● சந்தானகிருஷ்ணன்

சமீபத்தில் என் ஓவியங்களைப் பார்த்த ஒரு முதிய பெண்மணி, 'உன் கையிலே ஏதோ ஒரு பெரிய சக்தி ஆட்டிப்படைக்குது' என்றபடி ஆசிர்வதித்தார்.

எந்த ஊருக்குப் போனாலும் பழைய பூட்டுகளை வாங்குவதும், பழைய விளம்பரங்கள் உள்ள சுவர்களை நின்று கவனிப்ப



தும் என் வழக்கம். மாவட்ட ரீதியாகக் கூட கதவுகளுக்குத் தனித்தன்மை இருக்கின்றன. அவற்றையும் ஓவியமாக வடிக்கும் எண்ணம் இருக்கிறது. மற்றபடி, நம் நாட்டின் பல இடங்களுக்கும் பயணம் செய்தால், கதவு ஓவியங்களுக்கு நிறைய ஸ்கோப் இருக்கிறது'' என்றார்.


கூடவே, ''என் பாட்டி வாரத்துக்கு ஒரு முறையாவது, முழுசாக அரைநாள் செலவழித்து கதவைச் சுத்தப்படுத்துவார். அந்தக் கால வீடுகளின் கதவுகளுக்கு அவ்வளவு தனித்தன்மை. கண்ணுக்கு இமைபோலத்தான் வீடுகளுக்குக் கதவும்'' என்று பரவசப்படுகிறார்.

- ஆதர்ஷ்


'வள்ளலாரின் ஜீவகாருண்ய ஒழுக்கக் கொள்கையை ஏற்று, இனி புலால் உணவு உண்ணப் போவதில்லை' என்று டாக்டர் ராமதாஸ் அதிரடியாக அறிவித்து ஒரு மாதம் ஆகிவிட்ட நிலையில், அவரைச் சந்தித்து, 'அசைவமில்லா உணவு அனுபவம் எப்படியிருக்கிறது?' என்று கேட்டோம்.

“நான் இப்ப

''சிறு வயதில் கிராமத்தில் இருந்த போது காலையில் கூழ் அல்லது பழைய சாதம்தான். எப்போதாவது மீன் சமைப்பார்கள். மாதத்துக்கு ஒருமுறை மட்டன் உண்டு. அப்புறம் மருத்துவப் படிப்புப் படிக்க ஹாஸ்டலில் தங்கியிருந்தபோது, தினசரி கறி, மீன் என்று வெளுத்துக் கட்டுவேன். 40 வயதைக் கடந்தவர்கள் புலால் உணவை ஒதுக்க வேண்டியது அவசியம் - அதில் தீமை செய்யும் கொழுப்பும் இருப்பதால். அந்தத் தீய கொழுப்பு, நமது ரத்த நாளங்களில் சேர்ந்து ரத்த ஓட்டத்தைத் தடை செய்யும் வாய்ப்பு உண்டு. பொதுவாகவே டென்ஷன் மிகுந்த, உடலுழைப்பு குறைந்த இந்தக் கால கட்டத்தில், பெரும்பாலோர் ரத்தக் கொதிப்பு, சர்க்கரை நோயால் அவதிப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் கொழுப்பு நிறைந்த மட்டன் வகைகளைக் குறைக்கும் என் முயற்சி, பத்து வருடங்களுக்கு முன்பே துவங்கியது. முதலில் ஆட்டுக் கறி சாப்பிடுவதை அறவே தவிர்த்தேன். கெடுதல் இல்லாத கொழுப்புச் சத்துள்ள கோழிக் கறியை வாரத்துக்கு ஒருமுறை சாப்பிடுவதை வழக்கமாகக் கொண்டேன். புரதம் நிறைந்த மீன், வாரத்துக்கு இரண்டு நாள் என் உணவில் இடம்பெற்றது. இந்தப் பழக்கம் சில காலம் தொடர்ந்தது. ஆனால், சமீப காலத்தில் அசைவ உணவு சாப்பிடுவதில் கொஞ்சம்கூட விருப்பமில்லாமல் போனது. குடும்பத்தில் மற்ற உறுப்பினர்கள் சாப்பிடுகிறார்களே என்று, நானும் அவர்களுடன் சேர்ந்து சாப்பிட்டு வந்தேனே தவிர, சிறிதும் அதில் நாட்டம் இல்லை. இந்நிலையில்தான் கடந்த ஜனவரி மாதம் வள்ளலார் விழாவுக்குச் சென்றேன். அன்று நிகழ்ச்சியில் பேசியவர்கள் வள்ளலாரின் ஜீவகாருண்யம், புலால் மறுப்பு உபதேசங்



களை எடுத்துக் காட்ட, எனக்குள்ளேயே என்னை யறியாமலேயே ஒரு மன மாற்றம் ஏற்பட்டுப் பேசும் போது, 'இனி அசைவத் தைத் தொடப்போவ தில்லை' என்று மிக இயல் பாகவே அறிவித்துவிட் டேன். மற்றபடி, இதுபோல அறிவிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு நான் அந்த விழாவுக்குச் செல்லவில்லை'' என்று தமது அறிவிப்புக்குக் காரணமாக அமைந்த சூழலை விவரித்தார் டாக்டர்.



சைவதாஸ்!”

“கடந்த சில வருடங்களாகவே என் உணவில் தினசரி, நவதானியங்களும் காய் கறிகளும் அடங்கிய சரிவிகித உணவு இடம்பெற்றிருக்கிறது. வழக்கமான உடற் பயிற்சி, யோகா போன்றவற்றால் உடலும் உள்ளமும் உற்சாகமாகவே இருக்கின்றன. வீட்டில் எனக்கென்று தனியாகச் சமைக்கத் துவங்கிவிட்டார்கள். ஆனால், என் முடிவை யார் மீதும் திணிக்க மாட்டேன். அவரவர்கள் உணர்ந்து எடுக்க வேண்டிய முடிவு இது'' என்ற டாக்டர், தமது தந்தை யார் 96 வயது வரை வாழ்ந்ததாகவும் அவர் கண், பல் குறைபாடு என்று எந்த மருத்து வரிடமும் சென்றதில்லை என்றும் பெரு மையுடன் குறிப்பிட்டார்.

''உலகில் தற்போது சைவ உணவின் மகத்துவம் குறித்து மிகத் தீவிரமான பிரசாரம் நடைபெற்று வருகிறது. உணவில் காய்கறிகளும் பழங்களும் அதிக அளவில் இடம்பெற்றால், உடல் எடை கூடாது; கொழுப்புச் சத்து சேராது; புற்று நோய் வருவதற்கான வாய்ப்பும் மிகக் குறைவு. இன்று பலர் சைவத்துக்கு மாறி வருகிறார்கள். இத்துடன், நாற்பது வயதுக்கு மேற்பட்ட வர்கள், நடைப் பயிற்சி, தியானம், யோகா என்று ஈடுபட்டால், வள்ளலார்போல மரணமில்லா பெருவாழ்வு அமையாவிட் டாலும், குறைந்தபட்சம் இருக்கும்வரை நோயின்றி வாழலாம்'' என்று டிப்ஸ் கொடுக்கிறார்.

தாம் உடல் பேணுவதோடு நில்லாமல், பா.ம.க. தொண்டர்களும் நல்ல ஆரோக்கி யத்தோடு விளங்க வேண்டுமென்பதற்காக, அரசியல் பயிற்சிக்கு தைலாபுரம் வருபவர் களுக்கு யோகா, தியானத்தைச் சொல்லித் தருகிறார் ராமதாஸ்.

விடைபெறும்போது, ''புலாலை விட்டு விட்டீர்கள்; முட்டை, உணவில் தொடர் கிறதா?'' என்று சந்தேகத்தோடு கேட் டோம்.


''முட்டைக்கும் சேர்த்தே குட்பை! அசைவத்திலிருந்து விடுபடுவது ஒன்றும் பெரிய விஷயமல்ல. மனக் கட்டுப்பாட்டு டன் செயலாற்றினால் மகத்தான மாற்றங் களை எல்லாவிதத்திலும் காண முடியும்'' என்றார் புன்சிரிப்போடு.

- கௌசி

படம் : **ஸ்ரீஹரி**



கல்கி



2008 பிப்ரவரி 24
சர்வஜித் மாசி 12
மலர் : 66
இதழ் : 30

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - *பாரதியார்.*


ராஜ் தாக்கரேவை எதிர்த்துக் கூட்டறிக்கை!

மிகுந்த யோசனைக்குப் பிறகு ராஜ் தாக்கரேவைக் கண்டித்துப் பேசியிருக்கிறார் அத்வானி. "இந்தியா முழுதும் ஒரு நாடு. அதில் யாரும் எங்கும் போய் வாழ்ந்து பணியாற்றி, பொருளீட்ட உரிமை உண்டு" என்கிற உண்மையை அவர் எடுத்துச் சொல்வதற்குள் மும்பையில் ரகளை, கலாட்டா, வன்முறை, கடையடைப்பு - எல்லாம் நடந்துவிட்டன! அத்தனைக்கும் பிறகு தயங்கித் தயங்கி ராஜ் தாக்கரேவைக் கைது செய்திருக்கிறது மும்பை போலீஸ்.

குறுகிய நோக்கில் பேசி, பிரிவினை வளர்த்து, மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு, வோட்டுகளைப் பெற முயற்சி செய்வதுதான் மிகச் சுலபமான குறுக்கு வழி அரசியல். ராஜ் தாக்கரே செய்தது போலவே இந்தக் காரியத்தைத்தான் பல்வேறு மாநிலங்களில், பல்வேறு மாநில கட்சிகளின் தலைவர்களும் செய்து வருகிறார்கள். இந்தத் தவறைச் சுட்டிக்காட்டி கண்டனம் செய்து, இக்கட்சிகளைப் புறக்கணிப்பதற்குப் பதிலாக, தேசியக் கட்சிகளும் அவற்றின் மாநில கிளைகளும் இவற்றுடன் கைகோத்து கூட்டணி அமைத்துக்கொண்டு, அரசியல் ஆதாயம் காண்பதற்குத்தான் முற்படுகின்றன. மொத்தத்தில், தேசிய பார்வையை தேர்தல் பார்வை எரித்து அழித்துவிட்டது!

ஒரு சில வோட்டுகளுக்காக தேச ஒருமைப்பாட்டை அடகு வைக்கத் துணியும் கட்சிகள், தேர்தலில் போட்டியிட முடியாத படி செய்ய வேண்டும். சட்டத் திருத்தம் கொண்டு வந்தோ அல்லது ஏற்கெனவே உள்ள சட்டங்களை உறுதியாகவும்





கடுமையாகவும் அனுசரித்தோ இதனைச் செய்யலாம். தற்போது மத்தியில் ஆளும் முக்கிய கட்சியான காங்கிரஸும் முக்கிய எதிர்க்கட்சியான பா.ஜ.க.வும் இணைந்து செயல்பட்டால், இதற்கான சட்டத்தைப் பலப்படுத்துவதும் சாத்தியமே.

ஆனால், அரசியல் ரீதியான, நிர்வாக ரீதியான இந்தச் சீர்திருத்தம் மட்டுமே பிரச்னையைத் தீர்த்துவிடாது. நடைமுறையில், பிற மாநில மக்கள் குடியேறி, ஒரு மாநிலத்தின் வளத்தையும் வேலைவாய்ப்புகளையும் ஆக்கிரமிக்க ஆரம்பிக்கிறபோது, அதற்கு எதிரான உணர்வுகள் தோன்றுவது இயல்புதான். இந்த எதிர்ப்புணர்வைத் தவிர்க்க வேண்டுமானால், மாநில தலைவர்களிடையே ஒருமித்த சிந்தனை வேண்டும். தொழில், வர்த்தக, விவசாய முயற்சிகளை ஒருங்கிணைக்கலாம். மாநிலங்களை இணைக்கும் பொருளாதார மண்டலங்களை உருவாக்கி, எல்லோருக்கும் வேலைவாய்ப்புகள் பெருக்கலாம். ஐரோப்பிய நாடுகளேகூட இன்று ஒரே பொருளாதார மண்டலமாக இயங்குகின்றன.

கல்வித் திட்டத்தையும் பரந்ததாக்கி, பள்ளிக் கல்வி பெற்ற யாருமே தன் தேவைக்குச் சம்பாதித்துக்கொள்ளும் அளவுக்கு ஒரு தொழில் அறிவையும் அதற்கான முனைப்பையும் ஊட்டலாம்.

ஆனால், இங்கே நடப்பவை எல்லாம் நேர் மாறாகத்தான் இருக்கின்றன! நதி நீர் பகிர்வில் தகராறு தொடங்கி, மொழி வெறி, ஜாதி கண்ணோட்டம், மதப் பிரிவினை வரை அனைத்து வேற்றுமைகளையும்தான் தலைவர்கள் சிந்திக்கிறார்கள், பேசுகிறார்கள், வளர்க்கிறார்கள். இதை இப்படியே தொடர அனுமதித்தால், மாநிலத்துக்கு இரண்டு ராஜ் தாக்கரேக்கள் உருவாகி, இந்தியாவை இருபதே ஆண்டுகளில் இருக்கும் இடம் தெரியாமல் அழித்துவிடுவார்கள்!

ஆகவே, தேசிய உணர்வும் பொறுப்புணர்வும் படைத்த மன்மோகன் சிங், அத்வானி போன்ற தலைவர்கள் உடனடியாக இணைந்து இந்த வீழ்ச்சியைத் தடுத்து நிறுத்தியாக வேண்டும். ராஜ் தாக்கரேவுக்கு எதிராக இருவரும் சேர்ந்து ஒரு கூட்டறிக்கை விட்டாலே அதன் வலிமை அசாத்தியமானதாக இருக்கும்! ●



கலைஞனைப் புரியாத கருத்து!

''வீரியமுள்ள கலைஞனையும், படைப்பையும் வாய்ப்பு ஏற்படும்போதெல்லாம் என்னுடைய படங்களில் பயன்படுத்திக் கொள்வதை ஒரு கடமையாகவே செய்து வருகிறேன். ஒரு கலைஞன் என்கிற முறையில், நான் அவர்களுக்குச் செய்யும் மரியாதையாக அதைப் பார்க்கிறேன். அதனால்தான் 'ஹேராம்' படத்தில் கவிஞர் ஞானக்கூத்தன் சொல்லி, ஓவியர் ஆதிமூலத்தின் காந்திஜி ஓவியத்தைப் பயன்படுத்தினேன். அந்த ஓவியம், காந்திஜி கோபமாக இருப்பதுபோல வரையப்பட்டிருக்கும். காந்திஜியும் ரௌத்ரம் பழகியிருக்கக் கூடும் என்ற அனுமானத்தில் தான் அந்த ஓவியத்தைப் பயன்படுத்தினோம்'' என்று கமலஹாசன், ஓவியர் ஆதிமூலத்தைப் பற்றி எழுத்தாளர் மணா எழுதிய 'ஆதிமூலம் - அழியாக் கோடுகள்' புத்தக வெளியீட்டு விழாவில் பேச ஆரம்பித்ததும், சபையில் கனத்த மௌனம்.

''பெங்களூருவில் பணிக்கர் என்ற ஓவியரிடம் ஐந்து நாட்கள் ஓவியம் கற்றுக்கொண்டேன். அப்போது அவர், 'நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?' என்றார். 'திரைப்படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறேன்' என்றேன். 'அதெல்லாம் ஒழுங்கா வருமா?' என்றார். அப்போது எனக்குப் புரியவில்லை. இரண்டு நாள் கழித்து யோசிக்கும் போதுதான் புரிந்தது, அவ்வளவு இலட்சணமாக ஓவியம் கற்றிருக்கிறேன் என்பது. இதுதான் ஓவியத்துக்கும் எனக்குமான தொடர்பு. மற்றபடி, எனக்கு ஓவியம் குறித்து விளக்குவதெல்லாம் நடிகர் சிவகுமார்தான். அந்த வகையில் சிவகுமார் எனக்கு ஓவிய வாத்தியார்'' என்று நெகிழ்வுடன் குறிப்பிட்டார் கமலஹாசன்.

விழாவில் பேசிய பிரபஞ்சன், ஆதிமூலம் தமது கோட்டோவியத்தில் காணப்படும் கோடுகள் என்பது கோடுகள் அல்ல; அவை தம் நரம்புகள் என்று பேட்டியில் கூறியதைச் சுட்டிக்காட்டிப் பேசினார்.

கி.ராஜநாராயணன், ஆதிமூலம் பற்றி 'உயிர்க்கோடுகள்' புத்தகத்தில் எழுதிய கட்டுரையை, நடிகர் நாசர் வாசித்தது வித்தியாசமான அனுபவம். சா.கந்தசாமி, ''ஆதிமூலம் மரபுக்கும் நவீனத்துக்கும் இடையே ஒரு பாலமாகச் செயல்பட்டார். அவருடைய ஓவியத்தை அட்டைப் படமாகப் போட்டுக்கொள்வதற்கு ஒவ்வோர் இலக்கியவாதியும் ஆசைப்பட்டோம்; படுகிறோம். அதுதான் ஆதிமூலத்தின் ஓவிய சாதனை'' என்றார்.

மூத்த எழுத்தாளர் ஜெயகாந்தன் தலைமையேற்று புத்தகத்தை வெளியிட, கமலஹாசன் பெற்றுக்கொண்டார். நூலாசிரியர் மணா ஏற்புரையாற்றினார்.

- கதிர்பாரதி



■ புகையிலை புறக்கணிப்பு - ராஜாஜியுடன் சதாசிவம்

வென்றுவிடுகிறது என்றும் சொல்கிறார். இன்று வன்முறை உலகெங்கும் தலை விரித்தாடுவதைச் சுட்டிக் காட்டுகிறார்.

இது குறித்து, பலமணி நேரம் நீடிக்கும் பட்டிமன்றமே நடத்த நிறைய வாய்ப்புண்டு. வன்முறையையும் அதன் விளைவுகளையும் ''டாம் அண்ட் ஜெர்ரி'' போன்ற கார்ட்டூன் சினிமாவாய்க்கூடக் காண்பிக்கக்கூடாது என்று அறிவுறுத்தும் மனநல நிபுணர்கள் இருக்கிறார்கள்.

'கல்கி' இறந்தவரின் உடலைப் படம் பிடித்து, தமது பத்திரிகையில் பிரசுரிக்கக் கூடாது என்பதில் மிகவும் கண்டிப்பாக இருந்தார். மிகப்பெரிய தலைவர்கள்

பத்திரிகை தர்மம் என்றால் என்ன?

ஹிந்து நாளிதழில் 'வாசகர் ஆசிரியர்' என்பதாக ஒருவர் இருக்கிறார். இவர் வாசகர்கள் சார்பில் அவர்களுடைய விமர்சனங்களை ஏற்று, தேவைப்படும்போது விளக்கங்களும் அளிக்கிறார். இன்றைய வாசகர் ஆசிரியர் திரு. கே. நாராயணனிடம் ஒரு வாசகர், ''இறந்து போனவர்களின் சடலங்களைப் புகைப்படமெடுத்துப் பிரசுரிக்கத்தான் வேண்டுமா? அதுவும் முதல் பக்கத்தில்?'' என்று கேட்டிருக்கிறார். ''பரபரப்புக்காகவே செய்யப்பட்ட காரியமாகத் தோன்றுகிறது. அருவருப்பை ஏற்படுத்துகிறது'' என்கிறார்.

திரு. நாராயணன் பதிலளிக்கையில், தமக்கு அதில் விருப்பமில்லை என்றும் ஆனால், செய்தியின் முக்கியத்துவம், தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகளை

காலமானால்கூட, அவர்கள் ஆரோக்கியமாக இருந்த நாட்களில் எடுக்கப்பட்ட புகைப்படத்தைப் பிரசுரித்துத்தான் அஞ்சலி செலுத்துவார். ஒரே ஒரு சமயம் இதற்கு விதிவிலக்கு செய்தார். அது, மகாத்மா காந்தி காலமானபோது. அவரது இறுதி யாத்திரை படங்கள், 'லாங்ஷாட்'டில் மக்கள் வெள்ளத்தையும் 'குளோஸ் அப்'பில் அண்ணல் மீளாத் துயில் கொண்டிருப்பதையும் காட்டின. ''இதை மட்டும் எப்படி அனுமதித்தீர்கள்?'' என்று கேட்டபோது, ''காந்தியடிகள் மானுடர் அல்ல; அவதார புருஷர். அவருக்கு ஜனனமும் இல்லை மரணமும் இல்லை'' என்றார் 'கல்கி'. 'மாந்தருக்குள் ஒரு தெய்வம்' என்று மகுடமிட்டு, காந்திஜியின் வாழ்க்கை வரலாற்றைத் தொடர்ந்து எழுதினார்.

70 முதல் 7 வரை....

16

கல்கி ராஜேந்திரன்

'கல்கி' அவர்களுக்கு வேறு சில உறுதியான கொள்கைகளும் இருந்தன. அவற்றை, இன்று வரை கல்கி பத்திரிகை மட்டுமின்றி, கல்கி குழுமப் பத்திரிகைகள் அனைத்துமே கடைபிடிக்க முயன்று வருகின்றன. மது விளம்பரங்களை கல்கி பத்திரிகை தொடக்க காலத்திலிருந்தே விலக்கிவிட்டது. மதுவிலக்கு பிரசாரத்துக்கென்றே திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்தில் ராஜாஜியால் நடத்தப்பட்ட 'விமோசனம்' பத்திரிகையில் பல சிறு கதைகளை, பிரசார நோக்கிலேயே எழுதியவர் 'கல்கி'. தமது பத்திரிகையில் மது விளம்பரங்கள் மட்டுமின்றி, மது அருந்துதல் பற்றிய வர்ணனையோ படமோ இடம்பெறக் கூடாது என்பதில் கண்டிப்பாக இருந்தார்.


ஆரம்ப காலத்தில் கல்கி, சிகரெட் விளம்பரங்களைப் பிரசுரித்து வந்தது. ஒரு கால கட்டத்தில் சிகரெட் பிடிப்பதால் புற்றுநோய் வரும் என்று தெரிய வந்த போது, சிகரெட் விளம்பரங்களை ஒதுக்கி விடும்படி சதாசிவம் அவர்களிடம் ராஜாஜி கேட்டுக்கொண்டார். அதை உடனே ஏற்றுக்கொண்ட சதாசிவம், வருமான இழப்பை லட்சியம் செய்யாமல், ஏற்கெனவே ஒப்புதல் அளித்திருந்த விளம்பரங்களைக்கூட ரத்து செய்து, சம்பந்தப்பட்டவர்களுக்கு விளக்கமும் வருத்தமும் தெரிவித்துக் கடிதங்களை எழுதினார்.

சில தினங்கள் சென்று பேச்சுவாக்கில் ராஜாஜியிடம், அவர் விருப்பம் நிறைவேற்றப்பட்டதை சதாசிவம் தெரிவித்தார். ''அது சரி, ஆனால், நமக்குப் பூரணமாக நம்பிக்கை இல்லாத ஒரு விஷயத்தில், சமுதாய நன்மைக்காக ஈடுபாடு காட்டுவதுகூட தர்மமாகாது'' என்றார் ராஜாஜி. அவர் என்ன நோக்கில் சொல்கிறார் என்பதை உடனே புரிந்து கொண்ட சதாசிவம், ''புகையிலை போடுவதை இந்த வினாடியிலிருந்து விட்டுவிட்டேன்'' என்று மின்னல் வேக சபதம் செய்தார். ராஜாஜிக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றுவது சதாசிவத்துக்கு ரொம்பச் சிரமமாகத்தான் இருந்தது. ஆனால், அவருடைய மனோதிடம் வென்றது. கிராம்பு அதற்குப் பெரிதும் உதவியது. சில மாதங்களில் கிராம்பு மெல்



... தெரிவித்த வருத்தம் - காமராஜர், ஆ.சீ.ரா.

✱ தலைப்புகளுக்குத்...



“

'ஹிக்கின் பாதம்'ஸில் நுழைந்து நவீன நாவலா சிரியர்கள் எழுதிய புத்தகங்கள் ஒன்றிரண்டு வாங்கி வா

”



● ஜெயபிரகாஷ் நாராயணுக்கு 'கல்கி' வீட்டில் வரவேற்பு. திருமதி ஜெயபிரகாஷ் நாராயண் அருகே ஆனந்தி. 'கல்கி'யின் பின்னால் கட்டுரையாசிரியர், பின்னணியில் கல்கியின் சகோதரி மகன் கோபாலன்.

வதையும் துறந்துவிட சதாசிவத்தால் முடிந் தது.

ஜனத்தொகை பெருக்கத்தைக் குறைக்க, குடும்பக் கட்டுப்பாடு விளம்பரங்களையும் ஆணுறை விளம்பரங்களையும் சமுதாய நலன் நோக்கில் பிரசுரிக்கலாமா என்பது குறித்து, கல்கி காரியாலயத்தில் பெரிய விவாதமே நடந்தது. கடைசியில் பிரச்னை ராஜாஜியின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. 'குடும்பக் கட்டுப்பாடு சாதனங்கள் மனிதனுக்குத் துணிவைத் தந்து, தவறான திசைகளில் செல்ல ஊக்கு விக்கும்; சமுதாய சீர்கேட்டுக்கே வழிவகுக் கும்' என்பது ராஜாஜியின் வாதமாக இருந் தது. 'மனக் கட்டுப்பாடே முக்கியம்' என்று ராஜாஜி உறுதிபட எழுதியும் இருக்கிறார். இதையொட்டி, ஆணுறை விளம்பரங்களை கல்கியில் ஏற்பதில்லை என்று முடிவா யிற்று. இன்று பத்திரிகைகளில் இடம் பெறும் ஆணுறை விளம்பரங்கள் ஆபா சத்தின் உச்சத்துக்கே சென்றிருப்பதைப் பார்த்தால், ராஜாஜி கூறியது எவ்வளவு உண்மை என்பது தெரியவரும். முறை கேடான வாழ்க்கையால் நிகழக்கூடிய பின் விளைவு பற்றிய பயம் அடியோடு போய் விட்டது.

'கல்கி', பகுத்தறிவுப் போட்டியின் (cross word) எதிரி அல்ல. ஆனால், பெருந் தொகைகளைப் பரிசாக வைத்து ஆசை காட்டி, கூப்பனுக்குக் கட்டணம் வசூலிப் பதைக் கடுமையாகக் கண்டித்தார். குதி ரைப் பந்தயம் போன்ற சூதாட்டங்களை எதிர்த்து, கதைகளும் கட்டுரைகளும் நிறைய எழுதினார்.

நேரடியாகவோ மறைமுகமாகவோ தனி நபர்களின் அந்தரங்க வாழ்க்கை பற்றி எழுதுவதும் வதந்திகளைப் பரப்புவதும் 'கல்கி' அவர்களுக்கு ஒவ்வாத விஷயங்கள். யாரையும் தனிப்பட்ட முறையில் அவர் தாக்கியது கிடையாது. கொள்கை அளவில் தான் அவருடைய பேனா யுத்தங்கள் எல் லாமே நிகழ்ந்தன. எனக்குத் தெரிந்து இரண்டே தடவைகளில் அவர் தமது கொள்கையிலிருந்து சற்றே சறுக்கி, தனி மனிதர்களைத் தாக்குவது போன்ற தலைப்

புகன் தந்துவிட்டார்!

பாரதி மணிமண்டபம் திறப்பு விழாவின்போது, அழைக்கப்பட்டு வந்தவர்களுக்குப் போதிய கவனிப்பு, உபசாரம் இல்லை என்று குறைப்பட்ட பேராசிரியர் அ.சீனிவாசராகவன் அவர்களுக்கு, பதிலளிக்கும் விதமாக எழுதிய கட்டுரைக்கு, 'அட, சீ! ராகவா!' என்று தலைப்பு தந்துவிட்டார். ('சாவி' நடத்தி வந்த 'வெள்ளி மணி' பத்திரிகையில் இடம்பெற்ற கட்டுரை). இதேபோல் ராஜாஜியிடம் கொண்டிருந்த அபரிமித பக்தி காரணமாக, காமராஜரை விமர்சித்து எழுதிய ஒரு கட்டுரைக்கு 'பெரிய மனிதரும் சின்ன புத்தியும்' என்று தலைப்பு கொடுத்துவிட்டார். கட்டுரைகளில் தனி நபர் தாக்குதல் இல்லை; கொள்கை அளவில் விவாதம் தான் என்றாலும், தலைப்புகள் இப்படி அமைந்துவிட்டதற்காக 'கல்கி' வருத்தப்பட்டதுண்டு; வெளிப்படையாக ஒப்புக் கொண்டதும் உண்மை.

நான் கல்லூரியில் சேர்ந்து படித்துக் கொண்டிருந்த காலத்தில், ''காலேஜிலிருந்து திரும்பி வரும்போது, 'ஹிக்கின் பாதம்'ஸில் நுழைந்து நவீன நாவலாசிரியர்கள் எழுதிய புத்தகங்கள் ஒன்றிரண்டு வாங்கி வா'' என்று உத்தரவு போடுவார். Scott, Hugo, Dumas போன்றவர்கள் எழுதிய நாவல்களைப் படித்த அதே ஆர்வத்துடன் அன்றைய சமகால நாவலாசிரியர்களின் நாவல்களையும் விரும்பிப் படிப்பார். Orczy, Kelland, Wheatley, Wodehouse, Nevil Shute போன்ற பல எழுத்தாளர்களின் நாவல்களை, அவருக்காக நான் வாங்கி வந்து தந்திருக்கிறேன். ஒரு சமயம், புதிய எழுத்தாளர் ஒருவரது புத்தகத்தைத் தேர்வு செய்தேன். பின் அட்டையில் அந்த நாவலைப் பற்றிய சிறு அறிமுகத்தைப் படித்தபோது, மிக நன்றாக இருக்கும் என்று தோன்றியது. வாங்கி வந்து கொடுத்தேன்.

மறுநாள் காலை கையில் காப்பியுடன் அப்பாவை எழுப்ப அவர் அறைக்குள் நுழைந்தபோது, அந்தப் புத்தகம் சுக்கு நூறாகக் கிழிக்கப்பட்டு, குப்பைத் தொட்டியில் போடப்பட்டிருப்பதைப் பார்த்துத் திடுக்கிட்டேன். காப்பியைக் கொடுத்துவிட்டு, ''என்னப்பா இது!'' என்று குப்பைத் தொட்டியைச் சுட்டிக்காட்டிக் கேட்டேன். ''வெறும் குப்பை'' என்றார். ''ஐயோ! ஐந்து ரூபாய் ஆயிற்றே!'' என்றேன். (அந்த நாளில் ஐந்து ரூபாய் மிகப் பெரிய தொகை.) ''தொலையட்டும்! ஐந்து ரூபாய் கெட்டுப் போனால் சம்பாதித்துக்கொள்ளலாம்; மனம் விகாரமடைந்தால் சரி பண்ண முடியாது'' என்றார். பத்தாவது பக்கத்திலேயே படிப்பதை நிறுத்தி, கிழிப்பதை ஆரம்பித்துவிட்டார் என்றும் தெரிய வந்தது. இந்தத் தண்டனையை, சில தமிழ்ப் பத்திரிகைகளும் 'கல்கி'யிடம் பெற்றிருக்கின்றன. ஒரு கதை ஆபாசத்தின் விளிம்பை நெருங்கினால் போதும்; கோபம் பொங்கும்; 'டர்ர், டர்ர்' தொடரும்! ஆபாச திரைப் படங்களைக் கிழிக்க முடியாததால், விமர்சனங்களில் அவற்றைக் கிழி கிழி என்று கிழித்தார்! நல்லனவற்றை வரவேற்கவும் எப்போதும் தயாராயிருந்தார்.

'பத்திரிகை தர்மம் என்றால் என்ன?' என்று கல்கி பத்திரிகை தொடங்கி இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, விரிவாக எழுதினார் அதன் ஆசிரியர். ஆனால், முதல் இதழிலேயே அவர் 'கல்கி பத்திரிகையின் நோக்கம்' என்று சொல்லி எழுதிய இரண்டு வார்த்தைகள், பத்திரிகை தர்மத்தைக் குறித்து பல பக்கங்கள் எழுதுவதற்குச் சமமானது. அந்த இரு சொற்கள்: 'தேச நலன்.'

(அடுத்த இதழில்:
கல்கி தோட்டத்தில் நேருஜி!)

ஒரு கதை ஆபாசத்தின்
விளிம்பை நெருங்கினால்
போதும்; கோபம் பொங்கும்
'கல்கி'க்கு.......

''சிரஞ்சீவிக்கு அரசியல் அனுபவம் கிடையாது. அவர் அரசியல் கட்சி ஆரம்பித்தாலும், அதில் நான் சேரமாட்டேன்'' என்று நடிகர் ராஜசேகர் சொல்ல, கொதித்து எழுந்துவிட்டார்கள் சிரஞ்சீவியின் ரசிகர்கள். ராஜசேகர் மற்றும் அவர் மனைவி ஜீவிதா மீது தாக்குதல் நடத்த, தம் ரசிகர்களுக்குக் கண்டனம் தெரிவித்ததோடு, ராஜசேகர் வீட்டுக்கே சென்று வருத்தம் தெரிவித்திருக்கிறார் சிரஞ்சீவி!

தமிழ்நாட்டைவிட, சினிமாத் துறையினர் நேரடியாக அரசியலில் ஈடுபடுவதும், தேர்தலில் போட்டியிடுவதும் ஆந்திராவில் அதிகம். 'தாசரி நாராயணராவ்', 'சுப்பிராமி ரெட்டி' போன்றவர்கள் ஏற்கெனவே மத்திய அமைச்சரவையில் இருக்கிறார்கள். 'ராமாநாயுடு', 'சாரதா' உள்ளிட்ட பலர் பாராளுமன்றத்துக்குச் சென்றிருக்கிறார்கள். தற்போது சிரஞ்சீவியும் அரசியலில் குதிப்பது உறுதியாகிவிட்டது. ஆனால், அவர் தனிக்கட்சி தொடங்குவாரா இல்லை காங்கிரஸ், தெலுங்கு தேசம் அல்லது தெலுங்கானா ராஷ்டிரிய சமிதி ஆகிய மூன்று கட்சிகளுள் ஏதாவது ஒன்றில் சேருவாரா என்பதுதான் மில்லியன் டாலர் கேள்வி!

தாம் ஒன்றும் என்.டி.ஆர். இல்லை என்பது சிரஞ்சீவிக்கு நன்றாகவே தெரியும். என்.டி.ஆர். ஆட்சியைப் பிடித்த சூழ்நிலையும் வேறு. ஆந்திர மக்களுக்கு காங்கிரஸ் கட்சி மீது உச்சகட்ட வெறுப்பு ஏற்பட்ட நிலையில், என்.டி.ஆர். அரசியலில் குதித்ததால் ஆட்சியைப் பிடிப்பது சுலபமாக இருந்தது. ஆனால், இப்போது காங்கிரஸ், தெலுங்கு தேசம் என்று இரண்டு பலமான சக்திகள் இருக்கும்போது, தனிக்கட்சி தொடங்கும் விஷப் பரீட்சையில் சிரஞ்சீவி இறங்க





• சந்திரசேகர ராவ்

மாட்டார் என்பது ஆந்திர அரசியல் நோக்கர்களின் கணிப்பு.

இது ஒரு பக்கமிருக்க, காங்கிரஸ் கட்சி இன்னொரு கணக்கைப் போடுகிறது. ஆந்திராவின் இரண்டு பெரிய ஜாதிகள் கப்பு; கம்மா. சந்திரபாபு நாயுடுவுக்கு கம்மா ஜாதியினரது ஆதரவு உண்டு. சிரஞ்சீவி ஆதரவாளர்களும் கம்மா ஜாதியினர்தான் என்பதால், காங்கிரஸ் கட்சியில் கப்பு ஜாதியினருக்கு சமீபகாலமாக அதிக

காங்கிரஸ் வலையில் சிரஞ்சீவி?



* அர்ஜுன் சிங்



* அகமது படேல்

முக்கியத்துவம் தரப்படுகிறது. இதன் பலனாக, கப்பு வோட்டுகள் முழுவதுமாக காங்கிரஸுக்குக் கிடைத்துவிடும். சிரஞ்சீவி தனிக்கட்சி ஆரம்பித்தாலும் கம்மா ஜாதி வோட்டுகளைப் பிரித்து, சந்திரபாபு நாயுடுவைப் பலவீனப் படுத்துவார். இது காங்கிரஸின் வெற்றி வாய்ப்புகளை அதிகப்படுத்தும் என்பது காங்கிரஸின் கணக்கு.

கடந்த தேர்தலில் தெலுங்கானா ராஷ்டிரிய சமிதியுடன் கூட்டணி அமைத்தது, காங்கிரஸ் ஆட்சியைப் பிடிக்க மிகவும் உதவியாக இருந்தது.

ஆனால், இப்போது தெலுங்கானாவை ஆந்திராவிலிருந்து தனி மாநிலமாகப் பிரித்துக் கொடுக்க சம்மதிக்காத நிலைப்பாட்டை காங்கிரஸ் கொண்டிருப்பதால், அந்தச் சரிவைச் சரிக்கட்ட சிரஞ்சீவியை காங்கிரஸுக்கு இழுக்கவும், அப்படி இல்லாது அவர் தனிக்கட்சி ஆரம்பிக்கும் பட்சத்தில், அவருடன் கூட்டணி அமைக்கவும் இன்னொரு வியூகம் வகுக்கிறது காங்கிரஸ்.

சமீபத்தில், மாநில உளவுத் துறை ஒரு சர்வே எடுத்திருக்கிறது. அதன்படி தனிக் கட்சி ஆரம்பித்தால் சிரஞ்சீவியால் ஆட்சியைப் பிடிக்க முடியாது என்றாலும், 30 முதல் 35 சீட்டுகள் வரை ஜெயிக்க முடியுமாம். இன்னொரு 30 தொகுதிகளில், கணிசமான அளவில் வோட்டுகளைப் பிரித்து, வெற்றி வாய்ப்பு உள்ள கட்சியைத் தோற்கடிக்கச் செய்ய முடியும் என்றும் தெரிய வந்துள்ளது. எனவே காங்கிரஸ் மேலிடம், சிரஞ்சீவி விஷயத்தில் வகுத்துள்ள வியூகத்தைச் செயல்படுத்தும் பொறுப்பினை அர்ஜுன் சிங், அகமது படேல் இருவரிடமும் ஒப்படைத்துள்ளது.

ஆக, ஆந்திராவின் அடுத்த தேர்தலில் இரண்டு விஷயங்கள் பரபரப்பை ஏற்படுத்தப்போவது உறுதியாகியுள்ளது. ஒன்று : தெலுங்கானா பிரச்னை. மற்றொன்று : மெகா ஸ்டார் சிரஞ்சீவியின் அரசியல் பிரவேசம்.

- *ஹைதராபாதிலிருந்து* **மௌலி**

கேமரா கதை 7

"வாங்க டீச்சரம்மா! எங்க ரொம்ப நாளா ஆளையே காணோம்?''

கடை கஜானாவின் முன்பு அமர்ந்துகொண்டு, வலது கையில் பேனா, இடது கையில் கண்ணாடி டீ டம்ளருடன் வரவேற்றாள் கல்யாணி.

''மும்பையில இருக்கற பெரிய பையன் வீட்டுக்குப் போயிருந்தேன்'' என்றார் பவானி டீச்சர். அவர் பார்வை கடைக்குள் ஒரு வலம் வந்து, மீண்டும் கல்யாணியிடம் நிலைத்தது.

''என்ன டீச்சரம்மா! உங்க சிஷ்யனைத் தேடறீங்களா?'' என்று கேட்டாள்.

''எங்கே அவன்?''

''முத்துசாமி வீட்டுக்கு மளிகைச் சாமான இறக்கிட்டு வரப் போயிருக்கு.''

''இப்பல்லாம் ரொம்ப ஒழுங்கா இருக்கான் போலிருக்கு...''

''இல்லன்னா கல்யாணி விட்டுடுமா? துவைச்சுக் காயப் போட்டுடாது?''

கடை வாசலின் ஓரமாய்க் குத்துக் காலிட்டு அமர்ந்து பீடியை இழுத்துக் கொண்டிருந்த பெருசு, காவிப் பற்கள் தெரியச் சிரித்தார்.

பவானி டீச்சர் இந்த காந்திபுரம் ஏரியாவுக்கு வந்து இருபது

குமரீன்



புது டீச்சர்!

ஆரணி யுவராஜ்

வருடங்கள் ஓடிவிட்டன. திருமணமான சில வருடங்களிலேயே கணவனை இழந்தவர். காந்திபுரம் மேல்நிலைப் பள்ளிக்கு மாற்றல் கிடைத்தபோது வீட்டையும் இங்கேயே மாற்றிக்கொண்டார்.

ஆரம்பத்தில் குடிசை மாற்று வாரியம் கட்டிக் கொடுத்த அடுக்கு வீடுகளும், பள்ளியும் மட்டுமே இருந்தன. சில வருடங்களிலேயே ரியல் எஸ்டேட் நிறுவனங்களின் கைவண்ணத்தில் 'காந்திபுரம்' விரிவடைந்துவிட்டது. ஆயினும் பள்ளியும், அடுக்கு வீடுகளும் இப்போதும் தனித்து, துண்டாக இருப்பது போல் தெரியும்.

கட்டட கூலி வேலை, தள்ளுவண்டி வியாபாரம், மார்க்கெட்டில் காய்கறி... இதுதான் இங்குள்ளவர்களில் பெரும்பாலானோர் வேலை. சில சிறைப் பறவைகளும் உண்டு. ஊரில் எது காணாமல் போனாலும் போலீஸ் முதலில் வருவது இங்குதான்.

''என்னடா மாரி, ராத்திரி எங்கே இருந்தே?''

''உடம்பு சரியில்ல சார். ராத்திரி எட்டு மணிக்கெல்லாம் படுத்துட்டேன்.''

''நடுவுல எத்தினி மணிக்கு எழுந்தே?''

''சத்தியமா இல்ல சார்.''

''எடுத்திருந்தா ஒழுங்கா கொடுத்துடுடா.''

''அம்மா சத்தியமா எடுக்கல சார்.''

''சரி ஸ்டேஷனுக்கு வா.''

''அதான் எடுக்கலேன்னு...''

''அங்கே வந்து இன்ஸ்பெக்டர் ஐயாகிட்ட சொல்லு. வாடா!''

போகிறவன், அநேகமாக ஆறு மாதங்களுக்குப் பிறகுதான் வருவான்.



காந்திபுரம் மேல்நிலைப் பள்ளியில்

மாரியின் பிள்ளையும் அடக்கம்!

''ஏன்டா குமாரை அடிச்சே!''

''பின்ன இன்னா டீச்சர். 'உங்கப்பா ஜெயில்ல ஒழுங்கா கம்பி எண்ணிட்டு இருக்காரா'ன்னு கிண்டலாக் கேட்கறான் டீச்சர்'' என்பான் அவன்.

''நாங்கதான் படிக்காமப் போய்ட்டோம். வெயில்லயும் மழையிலயும் கஷ்டப்படறோம். இவனாவது உருப்படணும். ரெண்டு கண்ணை உட்டுட்டு, எங்க வேணும்னாலும் அடிங்க'' என்று கூறி ஒப்படைக்கும் பெற்றோர்களும் உண்டு.

''பையன்களை அடிச்சதுக்காக வீடு தேடி வந்து மிரட்டும் பெற்றோரும் உண்டு.''

பத்து பையன்களில் ஆறு பேர் யாராவது ஒரு நடிகருக்கு ரசிகனாக இருப்பார்கள். எட்டாம் வகுப்பில் அடியெடுத்து வைக்கும்போதே ரசிகர் மன்றத்தின் உறுப்பினராகி இருப்பார்கள். அந்த நடிகரின் படம் ரிலீசான முதல் பத்து நாட்களுக்கு, பள்ளிக்கூடம் பக்கமே வர மாட்டார்கள். ரசிகர் மன்றத்தின் தலைவர், செயலாளருடன் சேர்ந்து தோரணம் கட்டுவது, நோட்டீஸ் ஒட்டுவதெனச் சுற்றுவார்கள். பதினெட்டு வயதில் அதே மன்றத்தின் தலைவராகி விடுவார்கள். அல்லது தனிக்குடித்தனம் போல் தனியாக இன்னொரு ரசிகர் மன்றத்தை ஆரம்பித்துவிடுவார்கள்.

குமாரும் அப்படித்தான். வகுப்பின் கடைசி வரிசையில் அமர்ந்துகொண்டு அவன் செய்யும் சேட்டைகள் தாங்க முடியாது. கணக்கு நோட்டுப் புத்தகம் முழுவதும் ஒரு நடிகரின் விதவிதமான படங்களை ஒட்டி வைத்திருப்பான்.

''ராஸ்கல்! என்னடா இது?'' என்று கூறி கிழிக்க முயன்றபோது -

''டீச்சர்! என்னை இன்னா வேணும்



னாலும் பண்ணுங்க. என் தலைவர் போட்டோவுல கை வைக்காதீங்க'' என்றான் மிரட்டலாய்.

''என்னடா மிரட்டறியா?'' என்ற பவானி டீச்சர், அந்த நோட்டுப் புத்தகத்தைத் துண்டு துண்டாகக் கிழித்துப் போட்டாள்.

''என்னடா முறைக்கிறே, உட்காரு. நாளைக்கு வர்றப்ப புது நோட்டு வாங்கிட்டு வரணும்'' என்றாள்.

அடுத்த நாள் வகுப்பில் நுழைந்தால், அதிர்ச்சி. கரும்பலகை முழுவதும் அந்த நடிகரின் பெரிய பெரிய போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருந்தன. விஷயம் தலைமை ஆசிரியர் வரை சென்று, குமாரின் அம்மா வந்து கெஞ்சிய பிறகு, பிரச்னை தீர்ந்தது. அவன் அம்மா, மார்க்கெட்டில் காய்கறி விற்கிறாள்.

அந்தச் சம்பவத்துக்குப் பிறகு டீச்சருக்கும் அந்த அம்மாவுக்கும் நட்பானது. குமாரை டியூஷனுக்கு அனுப்பி வைத்தாள். அப்படியும் அவன் அடங்கவில்லை. எட்டாம் வகுப்பில் ஃபெயிலான பிறகு, பள்ளிக்கும் போகாமல் ஒழுங்கான வேலைக்கும் போகாமல் சுற்றிக்கொண்டிருந்தான். யதேச்சையாக பவானி டீச்சரைப் பார்க்கும்போதெல்லாம் ஒரு வணக்கம் வைப்பான்.

ஒரு நாள் அவனது கல்யாணப் பத்திரிகையை அவன் அம்மா நீட்டியபோது, அதிர்ச்சியாகத்தான் இருந்தது. 'இவனிடம் மாட்டிக்கொண்டு அவஸ்தைபடப் போகும் அந்த அப்பாவி யாரோ?' என்று கவலைப்பட்டார் பவானி டீச்சர்.

''மாமன் பொண்ணுதான் டீச்சரம்மா. பேரு கல்யாணி. சின்ன வயசுல இருந்தே தெரியும். சின்னதா மளிகை சாமான் கடை வெச்சுத் தந்துடறேன். ஒரு வண்டி வாங்கித் தந்துடறேன்னு பொண்ணோட அப்பா சொல்லிட்டார். கல்யாணத்துக்கு அப்புறமாவது ஒழுங்கா இருக்கானான்னு பார்க்கலாம்'' என்றாள் அந்த அம்மா.

பெண் ரொம்ப லட்சணமாக இருந்தாள். வந்த சில நாட்களிலேயே அவனது லட்சணத்தைத் தெரிந்துகொண்டாள். அவன் போடும் அதட்டலில் கொஞ்ச நேரம் கடையில் உட்காருவான். அசந்த நேரமாகப் பார்த்து கம்பி நீட்டிவிடுவான்.

ஒருமுறை அப்படித்தான் தனது தலைவனின் பட ரிலீஸை முன்னிட்டு, கிளம்பிவிட்டான். விஷயம் தெரிந்து கல்யாணியும் நேராக தியேட்டர் வாசலுக்குப் போய்விட்டாள். அங்கே குமார் இருபதடி கட் - அவுட்டின் உச்சியில், தலைவனின் தோளில் அமர்ந்து மாலையைப் போட்டுக்கொண்டிருந்தான்.

''அண்ணே! அண்ணி வந்துக் கீது'' நாளைய செயலாளப் பொடியன், இன்றைய செயலாளருக்குக் கூவித் தகவல் கொடுத்தான்.

குமார் குனிந்து பார்த்தான். ''இன்னாம்மே?''

''யோவ்! நல்ல நாள் அதுவுமா கடையத் தெறக்கறத உட்டுட்டு இங்கே என்னய்யா பண்ணிட்டு இருக்கே? இறங்கி வாய்யா'' என்றாள்.

''வர்றேன், போம்மே''

''யோவ்! இப்ப நீ இறங்கலைன்னா நான் மேலே வந்துருவேன்''

''சும்மா கூவாதம்மே... மத்தியானம்

வரேன் போ''

''எதுக்கு? வடிச்சு வெச்ச சோத்தைத் திங்கறதுக்கா? உன்கிட்டப் பேசினா ஆவாது'' என்ற கல்யாணி, சேலையைத் தூக்கி இடுப்பில் சொருகினாள்.

'கிடுகிடு'வென கட் - அவுட்டின் மேலே ஏற ஆரம்பித்தாள்.

''ஏய் லூசு... இன்னாம்மே பண்றே? விழப் போறேம்மே...'' குமார் பதறினான்.

''மாட்டேன்'' என்றபடி உச்சிக்கே போய்விட்டாள். குமாருக்கு வியர்த்துவிட்டது.

''**அ**ப்புறம்?'' என்று கேட்டாள் பவானி டீச்சர்.

''மச்சான அடக்கற வழியை அங்கதான் கண்டுபுடிச்சேன் டீச்சரம்மா. ஒண்ண செய்யாத செய்யாதன்னு சொன்னாதான் புத்தி வீம்பா செய்யத் தோணும். அதனால நான் ரூட்டை மாத்தினேன். 'நீ உன் தலைவனுக்கு என்ன செய்ய நினைக்கற சொல்லு. நானும் உதவி பண்றேன். செய்யறத உருப்படியாச் செய்வோம். அதே போல, நான் சொல்றதை நீ செய்'னு சொன்னேன். 'பாலைக் கொண்டு போய் கட் - அவுட் மேலே ஊத்தாதே. அதை மோராக்கி மத்தியானம் தியேட்டர் வாசல்ல வெச்சு வர்ற ஜனங்களுக்குத் தரலாம்'னு சொன்னேன். இப்பல்லாம் மச்சானோட தலைவன் படம் ரிலீசானா நானும் கூடவே போறேன். தோரணம் கட்டறதுக்குப் பதிலா, பலூன் வாங்கி குழந்தைங்களுக்குத் தர்றோம். மச்சானுக்கு சந்தோஷம்.

'நீ சந்தோஷமா இருக்கறதுக்கு நான் என்னம்மே செய்யட்டும்?'னு கேட்டுச்சு. 'கடையில உட்காரு. வியாபாரத்தைக் கவனி. அதுதான் எனக்கு சந்தோஷம்'னு சொன்னேன். 'சரி'ன்னு சொல்லுச்சு'' என்றாள் கல்யாணி.

பவானி டீச்சர் புன்னகைத்தார். ''எப்படியோ... இப்பவாவது குமாருக்கு நல்ல டீச்சர் கிடைச்சிருக்காங்க. உன்னைத்தான் சொன்னேன்'' என்றார்.

வெட்கப்பட்டாள் கல்யாணி.

அடுத்த நாள் -

காலையில் பவானி டீச்சர் வாக்கிங் போகும்போது குமாரையும் கல்யாணியையும் பார்த்தார். மார்க்கெட்டில் வாங்கிய காய்கறி, பழங்களை டி.வி.எஸ்.ஸின் பின்னால் கட்டிக் கொண்டு குமார் வண்டியை ஓட்ட, கல்யாணி முன் பக்கம் சின்னக் குழந்தையைப் போல் அமர்ந்திருந்தாள்.

''டீச்சரம்மா! இன்னிக்கு சாயந்திரம் அஞ்சு மணிக்கு உதயம் தியேட்டர் பக்கம் வாங்க. நாங்க ரஸ்னா கொடுக்கறோம்'' என்று கத்தியவளிடம் குமார், ''ஏய்...ஏய்... கம்மா இரும்மே. முதல்ல பொழைப்பைப் பார்ப்போம். ரஸ்னா எல்லாம் அப்புறம்'' என்றான். ●





உறைந்து போன தமிழகம்!

‘கருணாநிதிக்குப் பாராட்டு விழாவாம்! அதற்காக நான்கு நாட்களுக்கு முன்பிருந்தே அலங்கார மின்விளக்குகளை எரிய வைத்திருக்கிறார்கள். தமிழகமே மின்வெட்டால் தத்தளிக்கும்போது, இப்படியெல்லாம் மின்சாரத்தை வீணடிப்பதா?'

சமீபத்தில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா எழுப்பிய ஆவேசக் கேள்வியைப் படித்ததும், சட்டென்று ஒரு ஃப்ளாஷ் பேக்.

1995, செப்டம்பர் 6, பிரம்மாண்டமான திருமண விழா ஒன்றுக்காக சென்னையே தயாராகிக் கொண்டிருந்தது. திருமணத்துக்கான அழைப்பிதழே ஆர்ப்பாட்டமாக இருந்தது. பத்திரிகையுடன் கூட புடவை, வேட்டி, சட்டை போன்ற பொருட்களும் தாம்பூலத்தில் வைத்துத் தரப்பட்டன.

திருமணத்தில் கலந்துகொள்ள வந்தவர்கள் அத்தனைபேரும் வி.வி.வி.ஐ.பி.க்கள் என்பதால், அவர்கள் தங்குவதற்கு நட்சத்திர ஹோட்டல்களில் அறைகள் எடுக்கப்பட்டிருந்தன. ஆறு கி.மீ. தூரத்துக்குத் தோரணங்கள் தொங்கின. சாலையெங்கும் டியூப் லைட்டுகள் சிரித்துக்கொண்டிருந்தன. செங்கோட்டை போன்ற நுழைவாயில் அமைக்கப்பட்டிருந்தது. அதனைக் கடந்தால்

ஆர். முத்துக்குமார்

அலங்காரப் பந்தல். சென்னையில் ஒரு சில பகுதிகளில் டிரான்ஸ்ஃபார்மர் திணறிப் போய் மக்கள் இருட்டுக்குள் உட்கார்ந் திருக்க, அலங்காரப் பந்தலில் மாத்திரம் ஆடம்பர மின் விளக்குகள் கண் சிமிட்டிக் கொண்டிருந்தன.

இப்படி பிரம்மாண்டத்தின் உச்சகட்ட மாக நடந்த ஜெயலலிதாவின் வளர்ப்பு மகன் திருமணம்தான், அவரை சர்ச்சையின் உச்சிக்கும் அழைத்துச் சென்றது. அந்தத் திருமணத்தையும் அதற்கான செலவுகளை யும் பற்றி விமர்சிக்காத பத்திரிகைகளே இல்லை. தலைவர்களே இல்லை. அதன் பிறகு வந்த சட்டமன்றத் தேர்தலில், அந்த ஆடம்பரத் திருமணம், தேர்தல் பிரச்னை யாக எடுத்து விவாதிக்கப்பட்டது.

இந்த நிகழ்வுக்குக் கொஞ்சமும் சளைத்ததில்லை கும்பகோண நிகழ்வு.

1993, மார்ச் 17. நண்பகல் மணி பன்னிரண்டை நெருங்கிக்கொண்டிருந்தது. கும்பகோணம் மகாமகக் குளத்தை மூன்று முறை வட்டமிட்டுவிட்டுத் தரையில் இறங்கியது ஒரு ஹெலிகாப்டர். அதி லிருந்து இறங்கினார் அப்போதைய முதல்வர் ஜெயலலிதா. கூடவே உடன் பிறவா சகோதரி சசிகலா.

பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறை நடக்கும் விழா மகாமகம். ஜெய லலிதா பிறந்த நட்சத்திரமும் மகம். ஆகவே, அதில் கலந்துகொள்வதற்காக வந் திருந்தார். முதல்வர் என்பதால் ஏகப்பட்ட பந்தோபஸ்துகள். கெடுபிடிகள். பாதுகாப்பு வளையங்கள். கும்பகோணமே குலுங்கிக் கொண்டிருந்தது.

மேற்குக் கரையில் குண்டு துளைக்காத கண்ணாடியாலான குளியல் அறை தயாராக இருந்தது. குளத்துக்கு வந்த ஜெயலலிதா, அந்த அறையைப் பயன்படுத்தாமல் குளக் கரையில் நாற்காலி போட்டு அமர்ந்தார். அங்கே தயாராக வைக்கப்பட்டிருந்த குளத்து நீரை, கோப்பையால் மொண்டு முதல்வர் மேல் ஊற்றினார் சசிகலா. அதற் குள் மகாமகக் குளம் மெகா நெரிசலில் சிக்கியது. அடுத்து, சசிகலாவின் தலையில் ஜெயலலிதா நீர் ஊற்றினார்.

வடக்குக் கரை வழி யாகக் குளத்துக்கு வந்துவிட்டு, மேற்குக் கரை வழியாக மக்கள் வெளியேறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஆனால், மேற்குக் கரையில் முதல்வருக்குப் பாதுகாப்பு கொடுப்பதற்காக ஏராள மான காவலர்கள் குழுமியிருந்ததால், மக்களால் அந்தப் பாதையைப் பயன் படுத்த முடியவில்லை. என்றாலும், வெளியேற வேண்டுமே. மக்கள் திமிறத் தொடங்கினர்.

இந்த நேரம் பார்த்து, வடக்குக் கரையி லிருந்த தர்மசாலா மதில்சுவர் உடைந்து விழுந்தது. அவ்வளவுதான்... பீதி மக் களைத் தொற்றிக்கொண்டது. எப்படியா வது வெளியேறினால் போதும் என்று அலறிப் புடைத்துக்கொண்டு ஓடத் தொடங்கினர். கால் தடுக்கி ஓரிருவர் கீழே விழ, அவர்கள்மீது மற்றவர்கள் விழ, நிலைமை விபரீதமானது. கீழே விழுந்தவர் களை மற்றவர்கள் மிதித்துக்கொண்டு ஓடினர். எங்கு பார்த்தாலும் மரண ஓலம். கூச்சல். களேபரம். பன்னிரண்டரை மணிக்குள் குளத்தில் 48 பிணங்கள்! உறைந்து போனது தமிழகம்!

முதல்வருக்காகச் செய்த பாது காப்பு ஏற்பாடுகளில் ஏற்பட்ட குளறுபடிகள்தான் இத் தனைக்கும் காரணம் என்று உள்ளூர் மக்கள் ஆத்திரப் பட்டனர். முதல்வரைப் பார்க்கும் ஆர்வத்தில், மக் கள் முண்டியடித்ததுதான் விபத்துக் குக் காரணம் என்றனர் சிலர். எப்படிப் பார்த்தாலும் ஜெயலலிதாவுக்கு அந்த மகாமகம் மகத்தான சோதனையாகவே அமைந்தது. அடுத்த மகாமகத்துக்கு அவர் போகவே இல்லை.

(படிக்கலாம்)



காலை நடையை முடித்துவிட்டு வந்த சரஸ்வதி முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்துக் கொண்டிருந்தன. படித்துக் கொண்டிருந்த பேப்பரைக் கீழே வைத்து விட்டு கதவைத் திறந்த கணவன் ரமேஷ், ''என்ன! ஏதாச்சும் பிரச்னையா?'' என்றான்.

உணர்வு!

''நாம எப்பவும் வாங்கற பால் கடைக்காரனோட கொழுப்பைப் பாருங்க! 'பர்ஸ் கொண்டு வரல, ஒரு பிரட் பாக்கெட் கொடு. அப்புறம் வந்து பணம் தரேன்'னு சொன்னேன். 'நீங்கதான் முதல் ஆள்! காலையில் கடன் தரமாட்டேன்'னு முகத்தில் அடிச்சாப்பல சொல்லிட்டான்!'' என்றாள் கோபமாய்.

''மாச ஆரம்பத்துல பால் கார்டுக்கு பைசா வாங்க ராத்திரியில வந்தா, 'வெளக்கு வெச்சப்புறம் பணம் தர்றதில்ல! காலையில வா'ன்னு நீ சொல்றதில்லையா? மத்தவங்க நம்பிக்கையையும் நாம் மதிக்கணும்'' என்றான் ரமேஷ் பொறுமையாக. அவளுக்கு ஏதோ புரிந்ததுபோல் இருந்தது.

– ஜி.குமார்

மின்னல் கதைகள்

அலுவலகத்துக்குப் போகும் அவசரத்தில், ஸ்கூட்டியில் அமர்ந்த படியே ஐந்து லிட்டர் பெட்ரோல் போட்டுக்கொண்டு சரியான பணத்தைக் கொடுத்தாள் லலிதா.

''நேத்து ராத்திரி முதல் பெட்ரோல் விலை லிட்டருக்கு நாலு ரூபாய் ஏறி விட்டது. இன்னும் இருபது ரூபா கொடுங்க'' என்றான் பெட்ரோல் பங்க் பையன். மறுபேச்சு பேச வழியில்லாத நிலையில் பணத்தைக் கொடுத்துவிட்டு ஸ்கூட்டரை ஸ்டார்ட் செய்த லலிதாவுக்கு, காலையில் கீரைக்கார கிழவியிடம் அடாவடித்தனம் செய்து கீரை வாங்கியது நினைவுக்கு வந்தது.

விலை!



'இன்னைலேர்ந்து கீரை கட்டுக்கு ஐம்பது பைசா ஏத்திட்டாங்க மொத்த வியாபாரிகள். கட்டு மூணு ரூபா' என்ற கிழவியிடம், 'என்ன இது அநியாயமா இருக்கு. நீ பாட்டுக்கு திடீர்னு விலையை ஏத்தினா எப்படி? இரண்டரை ரூபாய்க்கு மேலே பைசா கொடுக்க மாட்டேன். இல்லாட்டா கீரையே வேண்டாம்' என்று வம்படியாக இரண்டரை ரூபாய்க்கு கீரை வாங்கியதை நினைத்து வெட்கப் பட்டாள்.

மறுநாள். தெருவில் போனவளைக் கூப்பிட்டு, கட்டு மூன்று ரூபாய்க்குக் கீரை வாங்கிய லலிதாவை அதிசயமாய்ப் பார்த்தாள் கீரைக்கார கிழவி.

– லலிதா செல்லப்பா



"நான் டி.வி. பாக்கற மாதிரிதான் கனவு கண்டேன்னு உங்களுக்கு எப்படித் தெரியும்?"
"ராத்திரி தூக்கத்துல அழுதுக்கிட்டு இருந்தியே!"
- என்.உஷாதேவி
ஏழாவது ஜென்மம்!
"எங்கம்மாவை ரெண்டு மாசமா காணலை சார்!"
"அதை ஏன் இவ்வளவு தாமதமா சொல்றீங்க?"
"ஒரு ரெண்டு மாசமாவது என் மனைவியோட பிடுங்கலில்லாம நிம்மதியா இருந்துட்டுப் போகட்டுமேன்னுதான்!"
- வீலாஜி
"ஏழு ஜென்மத்துக்கும் நான்தான் உங்க மனைவியா இருக்கணும்னு கடவுள்கிட்டே வேண்டிக்கிட்டேங்க... நீங்க?"
"இது ஏழாவது ஜென்மமா இருக்கணும்னு வேண்டிக்கிட்டேன் விமலா..."
- கே.ஆனந்தன்
"வெங்காயம் உரிக்கும்போது வயிறு எரியுது டாக்டர்."
"வழக்கமா கண்தானே எரியும்?"
"நான் வெங்காயம் உரிக்கும்போது என் மனைவி கால் மேல கால் போட்டுக்கிட்டு டி.வி. பார்க்கிறாளே."
- க.கலைவாணன்

சாது மிரண்டா

பாச ஃபார்முலாவில் ஆக்ஷன், காமெடி என்று சகலத்தையும் கலந்துகட்டித் தந்து, மிரள வைத்திருக்கிறார் டைரக்டர் சித்திக். வில்லனைப் பழிவாங்கும் கதை தான் என்றாலும், சொல்லியிருக்கும் விதம் 'அட' போட வைக்கிறது.

தங்கையைக் கொன்றவனை சமயோஜிதமாக காலி பண்ணும் சாதுவாக பிரசன்னா. முதல் முறையாக ஆக்ஷனைக் கையிலெடுக்க, அருமையாக கைவந்திருக்கிறது. காவ்யாவுடனான காதல் நளினங்களில் சுவாரஸ்யங்கள் அதிகம். அப்பாவைக் கொல்லத் துடிக்கும் வேங்கையாக மிரட்டுகிறார். பல பரிமாணப் பாத்திரத்தைக் கவ்விப் பிடித்து, கச்சிதமாக நடித்ததற்குத் தரலாம் பொக்கே!

காவ்யா மாதவன் அழகாக வந்து இதமாகக் கதைக்கு உதவுகிறார். யாரையும் நம்ப முடியாமல் தவிக்கும் துடிப்பை நேர்த்தியாக வெளிப்படுத்துகிறார். நீண்ட இடைவெளிக்குப் பிறகு, வில்லனாக அப்பாஸ் என்ட்ரி. விஸ்வரூபமெடுத்து வில்லங்கம் செய்கிறார். வங்கிக் கொள்ளை காட்சி அட்ரா சக்கை!

படத்தின் மிகப்பெரிய பலம் காமெடி. முகம் சுளிக்காமல், எரிச்சல் படாமல், வஞ்சனையில்லாமல் சிரிக்க முடிகிறது. எம்.எஸ்.பாஸ்கர், கருணாஸ், சார்லி, வையாபுரி என்று நிறைத் நிறை மகிழ வைக்கின்றனர். அதிலும், பாஸ்கரின் நெல்லைத் தமிழ் நெஞ்சை அள்ளுகிறது. அவரிடம் கடன் வாங்கிவிட்டு கருணாஸ் படும்பாடு, ரவுசு ராக்கெட்.

பாஸ்கரின் வார்த்தைகளுக்கு எதிர்மறையாகச் செயல்பட்டு, நம்மை விலா நோக வைப்பது அக்மார்க் சார்லி பிராண்ட் காமெடி. கோட்டா சீனிவாசராவும் தன் பங்குக்குப் பின்னியிருக்கிறார்.

பிரதாப் வி.குமாரின் ஒளிப்பதிவில் காட்சிகள் கண்ணுக்குள்ளேயே நிற்கின்றன. இசை தீபக் தேவ். பின்னணி மிரட்டல் அத்தியாயம். பாடல்கள் ஒரு முறை கேட்கலாம். கோகுலகிருஷ்ணா வசனம் 'நறுக் சுருக்' என்று இருந்திருக்கலாம்.



பல கிளைகள் கொண்ட கதைக்கு, எந்தவிதக் குழப்பமுமில்லாமல் திரைக்கதை அமைத்துள்ளார் சித்திக். க்ளைமேக்ஸுக்கு முன்பு வரும் பாடலைத் தவிர்த்திருக்கலாம். எல்லாம் கலந்த கலவையான ஒரு படத்தைச் சரக்கோடு தந்து, சோர்ந்து கிடந்த சினிமா ரசிகர்களைச் சுறுசுறுப்பாக்கியிருக்கிறார் சித்திக்.

- ரேவதி

ஒரு பக்கத் தொடர்

படுதலம் சுகுமாரன்

புள்ளிகள்... கோலங்கள்...

7

குணசேகர், அண்ணியையும் ஃபோனையும் மாறி மாறிப் பார்த்தான். கட்டான ஃபோன் திரும்ப வரவில்லை. சிறிது நேரம் காத்திருந்துவிட்டு... ஆபீஸுக்கு ஃபோன் செய்தான்.

''கந்தசாமி... நான் குணசேகர் பேசறேன். அண்ணன் வந்துட்டாரா இல்லையா...



அப்படியா... அவரைப் பார்க்க அங்கே யாரும் வந்திருக்காங்களா...? சரி, கொஞ்ச நேரத்துல நான் அங்கே வர்றேன்...'' என்று தொடர்பைத் துண்டித்து, அண்ணனின் செல்லுக்கு முயற்சித்து ஏமாற்றத்துடன் ரிசீவர் வைத்தான்.

அண்ணியிடம் வந்தான்.

''பயப்படாதீங்க. அவருக்கு ஒண்ணும் ஆகாது... நான் ஆபீஸ் போய்ப் பார்க்கறேன். இதற்கிடையில் அவர் வீட்டுக்கு வந்துட்டா, எனக்கு ஃபோன் பண்ணுங்க'' என்று வாசல் நோக்கித் திரும்பும்போது,

''ஒரு நிமிஷம் உள்ளே வந்துட்டுப் போறீங்களா...?'' என்றாள் குணசேகரிடம் கோகிலா. ''என்னென்னு கேட்டுட்டுப் போங்க தம்பி...'' என்று பார்வதி சொன்னதும் தட்ட முடியாமல் அறை நோக்கி வந்தான்.

''என்ன...'' என்று கேட்டபடி உள்ளே நுழைந்ததும், கதவை அடித்துச் சாத்தினாள் கோகிலா!

அவன் கையிலிருந்த பைக் சாவியை வெடுக்கென்று பிடுங்கினாள்.

''காலைல வீட்டை விட்டுப் போய்ட்டு, நாயாய் அலைஞ்சிட்டு நடு ராத்திரி வீடு திரும்பியிருக்கீங்க. சாப்பிட்டீங்களான்னு கேட்க நாதியில்லை. நானும் குழந்தைகளும் என்ன ஆனோம்னு எட்டிப் பார்க்கவும் உங்களுக்குத் தோணலை... வந்ததும் வராததுமா அண்ணியோட உத்தரவைத் தலை மேல வாங்கிக்கிட்டு வெளியில ஓடப் பாக்கறீங்க... நீங்க மனுஷனா மாடா! மாட்டுக்குக்கூட ஓய்வு உண்டு. நேரா நேரத்துக்குத்



தீனி உண்டு. பராமரிக்க ஆளுண்டு. ஆனா, உங்களுக்கு...''

''நிறுத்து...! உன் வியாக்யானத்தைக் கேட்க எனக்கு நேரமில்லை. வந்து பேசறேன்...'' அவசரப்பட்டான் குணசேகர்.

''இப்ப வெளியில போனீங்க... திரும்பும்போது நான் பிணமாத்தான் இருப்பேன்...'' - சுட்டு விரலை உயர்த்திக் காட்டி கத்தினாள் அவள். ''செய்'' என்று சொல்லிவிட்டு, கோபத்துடன் வெளியேறினான் குணசேகர்.

(தொடரும்)

அம்மா...

சிற்சில நோங்களில்
சந்தேகிக்க நோவதுண்டு
இரும்பினால் ஆகியிருக்குமோ
அம்மாவுக்கு இதயம்

ஊரே வரிந்துகொண்டு
வம்புக்கு வந்திடினும்
ஒரே வார்த்தையில்
சமாளிப்பாள்

ஒரு மூட்டை நெல்லோ
களக்கூலிப் பயிரோ
கம்மாட்டுத் துணையோடு
தூக்கிச் சேர்த்திடுவாள்
வீட்டுக்கு

நஞ்சைக்குத் தண்ணீர்ப் பாய்ச்ச
நடுராத்திரி புறப்பட்டால்
பெண் சிங்கமோவெனப்
பேதலிக்கத் தோனும்


வயிற்றுப் பிள்ளையோடு
ஓங்கி ஓங்கி இடித்ததில்
உடைந்த உலக்கையில் தெரியும்
மன உறுதி

கடலைக்குக்
களை வெட்டும் வேகத்தைக்
கண்டீராயின்
டிராக்டருக்கே வேர்த்திடும்

பாத்தியப்பட்ட வீடு
பங்காளிச் சண்டையில்
பாதியான போதும்
பொம்பளச் சீக்குல
கட்டுன புருஷன்
போய்ச் சேர்ந்தபோதும்
அழுது பார்த்தேனில்லை
அவளை

கல்யாணச் சீராய் வந்த
கறவை மாடு செத்துப்போக
கதறி அழுததைத் தவிர...

கதிர்பாரதி



தீபங்கள் பேசும்!



லதா வில்சன்

வெள்ளிக்கிழமை. மாலை ஆறு மணி இருக்கும். மூன்றாவது தெருவில் உள்ள மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயிலுக்கு போய்க் கொண்டிருந்தார் பூங்காவனத்தம்மா. வழியில் ஒரு வீட்டு வாசலில், மேற்கு பார்க்க ஒரு தட்டின் மீது அகல் விளக்கு ஏற்றிவைக்கப்பட்டிருந்தது. 'திண்ணைப் பிறையில் ஏற்றுவார்கள் அந்தியில். இது என்ன வாசலில் கோலம் போட்டு ஏற்றி வைத்திருக்கிறார்கள்?' யோசனையோடு நடந்தார் பூங்காவனம். ஒவ்வொரு வீட்டிலும் இதேபோல் வாசல் கோலத்தின் மீது தீபம் எரிந்து கொண்டிருந்தது. 'கார்த்திகை தீபமும் கிடையாது. நடப்பதோ மாசி மாசம். எதற்காக இப்படி?' ஒரு வீட்டில் தீபம் ஏற்றத் தயாராகிக் கொண்டிருந்த பெண்மணியிடம் கேட்டார்:

''ஏம்மா, இன்னைக்கு என்ன விசேஷம்?''

''இந்த வருஷம் பிறந்ததிலேர்ந்து ஆம்பளைப் பிள்ளைகளுக்கு ஆகலையாம். நேரமும் சரியில்லை. கிரஹமும் கோணாம். நெய் தீபம் ஏற்றி மேற்கு முகமா வச்சா, பிள்ளைகளைப் பிடிச்ச தோஷம் நீங்கி, அவங்களுக்கு ஆபத்து ஏதும் வராம தீர்க்காயுசோட இருப்பாங்களாம். இப்பத்தான் டி.வி.ல சொன்னாங்க.''

இதைக் கேட்டதுதான் தாமதம், பூங்காவனம் கோயிலுக்குப் போகாமல் திரும்பி நடக்கத் தொடங்கினார்.

''என்ன பூங்காவனத்தம்மா, அதுக்குள்ள திரும்பிட்டீங்க? கோயிலுக்குப் போகலையா?'' என்றார் அமிர்தம்மாள். அவரிடம் விஷயத்தைச் சொல்லிவிட்டு சமையல் கட்டுக்குச் சென்றார். பெரிய பித்தளைத் தாம்பாளம் இருந்தது. அதில் பச்சரிசியும் தானியங்களும் எடுத்துப் பரத்தினார். கார்த்திகைக்கு ஏற்றிவிட்டு எடுத்து வைத்திருந்த அகல் விளக்குகள் பத்திரமாய் ஒரு பெட்டிக்குள் இருந்தன. எடுத்து நெய் விட்டார்.

அதற்குள் செய்தி கேள்விப்பட்டு அஞ்சுகம், கலோச்சனா, சீதம்மா, சுகவனம், நாகம்மாள் என்று ஆண்பிள்ளை உள்ள அனைவரும் வந்துவிட்டனர். அவர்கள் ஏற்றி வைத்த இருபது தீபங்களும் சுடர் விட்டு எரிந்தன. அனைவரும் மனமுருகி இறைவனைப் பிரார்த்தித்தனர்:

''கடவுளே! எங்களைத்தான் வயசான காலத்துல எங்க பிள்ளைகள் கவனிக்காம இப்படிக் கொண்டாந்து முதியோர் இல்லத்தில் விட்டுட்டாங்க. அவங்களாச்சும் நல்லா இருக்கட்டும். அவங்களுக்கு ஒரு குறையும் வரப்படாது. எந்த ஆபத்தும் வராம அவங்க பிள்ளைக் குட்டிகளோட சௌக்யமா இருக்கணும்.''



பொறுமைக்கு வெகுமதி !

ஆஸ்திரேலிய டெஸ்ட்டில் டிராவிடுக்கு இழைக்கப்பட்ட அநீதியைக் கண்டிக்கும் வகையில் ஆறுதல் கவிதை எழுதச் சொல்லி கேட்டாலும் கேட்டோம்... மலை போல் வந்து குவிந்துவிட்டன. பரிசு பெறும் நான்கு ஆறுதல் பாட்டுகள் :

போட்டி முடிவு

கங்காரு நாட்டில்
கலங்கிய மனதுடன்
பக்னரின் சதியால்
பாதியில் முடிந்த
தடுப்புச் சுவரே...!
களத்தில் நீ அவுட்
மனதில் அவுட் இல்லை நீ!

— என்.சண்முகம்,
திருவண்ணாமலை

இந்திய அணியின் தளபதி நீ
நடுவர்கள் செய்தது அநீதி
உலகத்தைப் பேச வைத்தாய் நீதி
பொறுமைக்கு உண்டு வெகுமதி!

- சுஜாதா, சென்னை-17

பவுலரின் ஐந்து விரல்கள் பந்து வீச
பக்னர் ஒற்றை விரலால் குண்டு வீச
இந்தியப் பெருஞ்சுவர் இடிந்தது;
கிரிக்கெட்டின் கௌரவம் மடிந்தது!
டியர் டிராவிட்... 'கோ அஹெட்!'
ஆடுவது டெஸ்ட்
அதிரட்டும் டிராவிட் உன் 'பெஸ்ட்!'

- என்.சிவன், சென்னை - 93

சிட்னி மோசடியை விட
துரதிருஷ்டவசமானது
சிட்னி மோசடி!
அதை ஏற்றுக்கொண்டது
உன் பெருந்தன்மை -
அதுவே
இந்தியனின் தனித்தன்மை!

- சிம்மம், திருநெல்வேலி

அருள்வாக்கு

வசதி மட்டும் போதுமா?

எல்லோரும் பணக்காரராகி விட்டால் நிம்மதியாக, சாந்தமாக, நிர்ப்பயமாக இருக்க முடியுமா? பணக்காரர்கள் நிறைந்த தேசங்களைப் பாருங்கள். அங்கே எத்தனை சச்சரவு; நிம்மதியின்மை? எல்லோருக்கும் நிறையப் பணம் வந்துவிட்டாலும், ஒவ்வொருவனுக்கும் மற்றவனைவிட அதிகம் இருக்க வேண்டும் என்கிற ஆசையும், அதனால் போட்டியும், சச்சரவும் இருந்து கொண்டேதான் இருக்கும். நமக்கு வேண்டிய சௌகரியம் இருந்தால் மட்டும் போதாது; இன்னொருத்தனைவிட அதிகமாக இருக்க வேண்டும் என்ற போட்டி மனப்பான்மையே மனித சுபாவம். எல்லோருக்கும் எல்லா சௌகரியங்களும் சமமாய் கிடைக்கும் என்றால்கூட, அது தனக்கே முதலில் கிடைக்க வேண்டும் என்று ஒவ்வொருத்தரும் போட்டி போடுவார்கள். உதாரணமாக ஒரு சின்ன விஷயம். இந்த மடத்திலேயே பாருங்கள்! நான் அத்தனை பேருக்கும் தீர்த்தம் தந்துவிட்டுத்தான் உள்ளே போவேன் என்று எல்லோருக்கும் தெரியும்.



இருந்தாலும் அமைதியாக, வரிசையாக நமக்குக் கிடைக்கிறபோது கிடைக்கட்டும் என்று இருக்க முடிகிறதா? கிடைத்தால் மட்டும் போதாது, முதலில் கிடைக்க வேண்டும் என்று ஒருவரையொருவர் இடித்துக் கொண்டு, விழுந்து வாரி, சண்டை போட்டுக்கொண்டுதானே வருகிறீர்கள்? இம்மாதிரி **போட்டி இருக்கிற வரையில், மனநிறைவு யாருக்கும் உண்டாகாது.** பொருளாதார 'வசதி' மட்டும் உண்டாவதால் இந்தப் போட்டி குறையாது.

போட்டி போக வேண்டுமானால், போட்டிபோட இன்னொரு வஸ்துவே இல்லை என்ற ஞானம் வர வேண்டும். அப்போதுதான் சாந்தியோடு நிறைந்து வாழலாம்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்

21.வசந்தத் தீவில்...



பார்த்திபன்

ஒரு வார காலமாக விக்கிரமன் நரகத்திலிருந்து சுவர்க்கத்துக்கும் சுவர்க்கத்திலிருந்து நரகத்துக்குமாக மாறிக் கொண்டிருந்தான்.

நாலாபுறமும் பயங்கரமாகத் தீ கொழுந்து விட்டெரிந்து கொண்டிருக்கிறது. பார்த்திப மகாராஜா விக்கிரமனுடைய கையைப் பிடித்துக்கொண்டு, ''குழந்தாய்! உன்னுடைய ஜன்ம தேசத்துக்காக நீ இந்தத் தீயில் இறங்குவாயா?'' என்று கேட்கிறார். அருகில் அருள்மொழி ராணி கண்ணுங் கண்ணீருமாய் நிற்கிறாள். ''இறங்குவேன், அப்பா!'' என்று விக்கிரமன் துணிந்து விடை சொல்கிறான். தந்தையின் கைப்பிடி தளர்கிறது. விக்கிரமன் நெருப்பில் இறங்கிச் செல்கிறான்; உடம்பெல்லாம் கொதிக்கிறது; சுடுகிறது; வேகிறது; எரிகிறது. ஆனால், உணர்வு மட்டும் அப்படியே இருக்கிறது. 'ஐயோ! இப்படி எத்தனை காலம் எரிந்துகொண்டிருப்பது? ஏன் உயிர் போகமாட்டேனென்கிறது? ஏன் உடம்பு அப்படியே இருக்கிறது?' என்று எண்ணி விக்கிரமன் துடிதுடிக்கிறான். திடீரென்று ஒரு குளிர்ந்த கை அவனுடைய எரியும் கரத்தைப் பற்றுகிறது; இன்னொரு குளிர்ந்த கை, அவனுடைய கொதிக்கும் மார்பைத் தொடுகிறது. எரிகிற அந்தத் தீயின் நடுவில் செந்தாமரையையொத்த குளிர்ந்த முகம் ஒன்று தோன்றி, அவனைக் கருணையுடன் நோக்குகிறது. சற்று நேரத்துக்கெல்லாம் அவன் அக்னியிலிருந்து வெளியே வருகிறான். தன்னை அவ்விதம் கையைப் பிடித்து அழைத்து வந்த தெய்வப் பெண்ணுக்கு நன்றி செலுத்த அவன் விரும்புகிறான். ஆனால், அத்தெய்வப் பெண்ணைக் காணவில்லை.

விக்கிரமன் புலிக்கொடி பறக்கும் பெரிய போர்க் கப்பலில் பிரயாணம் செய்கிறான். கப்பலில் நூற்றுக்கணக்கான சோழ நாட்டு வீரர்கள் அங்குமிங்கும் உலாவுகிறார்கள். கப்பல் துறைமுகத்தை விட்டுக் கிளம்பியபோது பார்த்திப மகாராஜாவும் அருள்மொழி ராணியும் விக்கிரமனை ஆசீர்வதித்து, ''வெற்றி வீரனாய்த் திரும்பி வா!'' என்று வாழ்த்தி அனுப்பிய காட்சி, அவன் மனக்கண் முன்னால் அடிக்கடி தோன்றிக் கொண்டிருக்கிறது. திடீரென்று பெரும்

அமரர் கல்கி

புயலும் மழையும் அடிக்கின்றன. கப்பல் கவிழ்கின்றது. விக்கிரமன் கடல் அலைகளுடன் தன்னந்தனியாகப் போராடுகிறான். உடம்பு ஜில்லிட்டுப் போய்விட்டது. கைகால்கள் மரத்துவிட்டன. 'இனித் தண்ணீரில் மூழ்கிச் சாக வேண்டியதுதான்' என்று தோன்றிய சமயத்தில், இந்திர ஜாலத்தைப் போல் ஒரு படகு எதிரே காணப்படுகிறது. படகில் பூரண சந்திரனை யொத்த முகமுடைய பெண் ஒருத்தி இருக்கிறாள். எங்கேயோ, எப்போதோ, எந்த ஜென்மத்திலோ பார்த்த முகம்தான் அது. அந்தப் பெண் அவனுக்குக் கைகொடுத்துத் தூக்கிப் படகில் விடுகிறாள். அவள் முகமெல்லாம் நனைந்திருக்கிறது. அலைத்துளிகள் தெறித்ததனாலா, கண்ணீர் பெருகியதனாலா என்று தெரியவில்லை. அவளுக்கு நன்றி செலுத்த வேண்டுமென்று விக்கிரமன் ஆசைப்படுகிறான். பேச முயற்சி செய்கிறான். ஆனால், பேச்சு வரவில்லை. தொண்டையை அடைத்துக் கொள்கிறது.

விக்கிரமன் ஒரு கொடிய பாலைவனத்தில் நடந்துகொண்டிருக்கிறான். வெயிலின் கொடுமை பொறுக்க முடியவில்லை. கால் ஒட்டிக்கொள்கிறது. உடம்பெல்லாம் பற்றி எரிகிறது. நா வறண்டு விட்டது. சொல்ல முடியாத தாகம். கண்ணுக்கெட்டிய தூரம் மரம், செடி, நிழல் என்கிற நாமதேயமே கிடையாது. எங்கேயோ வெகு தூரத்தில் தண்ணீர் நிறைந்த ஏரி மாதிரி தெரிகிறது. அதை நோக்கி விரைந்து செல்கிறான். எவ்வளவு விரைவாகச் சென்றாலும், ஏரி இன்னும் தொலை தூரத்திலேயே இருக்கிறது. 'ஐயோ! கானல் நீர் என்றும், பேய்த் தேர் என்றும் சொல்வது இதைத்தானா?' என்று நினைக்கிறான்; பிறகு அவனால்

கனவு





நடக்க முடியவில்லை. திடீரென்று கண் இருளுகிறது. சுருண்டு கீழே விழுகிறான். அந்தச் சமயத்தில், 'இவ்வளவு கஷ்டங்களையும் நமது பெற்றோரின் விருப்பத்தை நிறைவேற்றும் பொருட்டு, சோழ நாட்டின் மேன்மையை முன்னிட்டுத்தானே அனுபவிக்கிறோம்!' என்ற எண்ணம் உண்டாகிறது. கீழே கொதிக்கும் மணலில் விழுந்தவனை, யாரோ மிருதுவான கரங்களால் தொட்டுத் தூக்கும் உணர்ச்சி ஏற்படுகிறது. யார் என்று பார்ப்பதற்காகக் கண்களைத் திறக்க முயற்சி செய்கிறான். கண்கள் திறந்துதானிருக்கின்றன. ஆனால், பார்வை மட்டும் இல்லை. 'ஐயோ! இந்தக் கொடிய வெப்பத்தினால் பார்வை இழந்து விட்டோமோ?' என்று எண்ணி மனம் வெதும்புகிறான். தொட்டுத் தூக்கிய கரங்கள், அவனை மிருதுவான பஞ்சணை மெத்தையின் மேல் இடுகின்றன. வாயில் அமுதம் போன்ற இனிய நீரை விடுகின்றன.



'ஆகா! காவேரி நதியின் ஜலம்போல் அல்லவா இனிக்கின்றது!' என்று எண்ணுகிறான். அதே சமயத்தில், அவனுக்குச் சுற்றுப்புறமெல்லாம் குளிர்கிறது. காவேரி நதி தீரத்தில் குளிர்ந்த தோப்புகளினிடையே இருக்கும் உணர்ச்சி உண்டாகிறது. தன்னைத் தூக்கி எடுத்து வாயில் இன்னமுதை இட்டு உயிர் கொடுத்த தெய்வம், தன் முகத்துக்கருகிலே குனிந்து பார்ப்பதாகத் தோன்றுகிறது. முல்லை மலர்களின் திவ்ய பரிமள வாசனை அவனைச் சூழ்கிறது. சட்டென்று அவனுடைய கண்கள் ஒளி பெறுகின்றன. 'ஆகா! எதிரில் தன் முகத்தருகில் தெரியும் அந்த முகம், மாதுளை மொட்டைப் போன்ற செவ்விதழ்களில் புன்னகை தவழ, விரிந்த கருங்கண்களினால் தன்னைக் கனிந்து பார்க்கும் அந்த முகம், தான் ஏற்கெனவே பார்த்திருக்கும் அந்த முகம்தான். எவ்வளவோ ஆபத்துகளிலிருந்து தன்னைத் தப்புவித்த தெய்வப் பெண்ணின் முகம்தான். அந்த இனிய முகத்தைத் தொட வேண்டுமென்ற ஆசையுடன் விக்கிரமன் தன் கையைத் தூக்க முயன்றான்; முடியவில்லை. கை இரும்பைப் போல் கனக்கிறது. மறுபடியும் கண்கள் மூடுகின்றன, நினைவு தவறுகிறது.

இப்படியெல்லாம் சுவர்க்க இன்பத்தையும் நரகத் துன்பத்தையும் மாறி மாறி அனுபவித்து பிறகு கடைசியில் ஒரு நாள், விக்கிரமனுக்குப் பூரணமான அறிவுத் தெளிவு ஏற்பட்டது. கொஞ்சங் கொஞ்சமாகப் பழைய நினைவுகள் எல்லாம் வந்தன. காட்டாற்றங்கரையில் மகேந்திர மண்டபத்தில் அன்றிரவைத் தானும் பொன்னனும் கழித்தது வரையில் நினைவுபடுத்திக்கொண்டான். சுற்றும் முற்றும் பார்த்தான். ஏதோ ஏற்கெனவே தெரிந்த இடம்போல் தோன்றியது. நன்றாக ஞாபகப்படுத்திக்கொண்டு பார்த்தபோது, அவனுடைய ஆச்சரியத்துக்கு எல்லையில்லாமற் போயிற்று. ஆமாம்; உறையூரில் காவேரித் தீவிலுள்ள வசந்த மாளிகையின் ஒரு பகுதிதான் அவன் படுத்திருந்த இடம். 'இங்கே எப்படி வந்தோம்? யார் கொண்டு வந்து சேர்த்தார்கள்? இந்த மாளிகையில் இப்போது இன்னும் யார் இருக்கிறார்கள்?'

பொன்னனுடைய நினைவு வந்தது. அவன் எங்கே?

தாபஜ்வரத்தின் வேகத்தில் தான் கண்ட பயங்கர, இன்பக் கனவுகளெல்லாம் இலேசாக ஞாபகம் வந்தன. அந்த அதிசய மாயக் கனவுகளில் அடிக்கடி தோன்றிய பெண்ணின் முகம் மட்டும் கனவன்று, உண்மை என்று அவனுக்கு உறுதி ஏற்பட்டி



''நமது மன்னர் ஒரு பேக்கு என எப்படிக் கூறுகிறாய்?''
'' 'எதிரிப் படையைத் தாக்கு; தாக்கும் ஒவ்வொரு வீரருக்கும் ஊக்கப் பரிசாய் ஒரு கேக்கு' என்கிறாரே?''

– சென்னிமலை
கி.பி.செந்தில்குமா

"கொஞ்ச நாளா என் மனைவி யாரையும் திரும்பிப் பார்க்கறதில்ல."

"ஏன், என்னாச்சு?"

"அவளுக்குக் கழுத்துல சுளுக்கு."

- எல்.மூர்த்தி

ருந்தது. சற்று நேரத்துக்கெல்லாம் பாதச் சிலம்பின் ஒலி கேட்டபோது, அவள்தானா என்று ஆவலுடன் திரும்பிப் பார்த்தான். இல்லை; யாரோ பணிப்பெண்கள், முன்பின் பார்த்தறியாதவர்கள். இன்னும் வைத்தியர் ஒருவர் வந்து பார்த்தார். பணியாட்களும் பணிப்பெண்களும் அடிக்கடி வந்து, வேண்டிய சிசுருஷை செய்தார்கள். ஆனால், பொன்னன் வரவில்லை; அந்தப் பெண்ணையும் காணவில்லை.

பணியாட்களிடமும் பணிப் பெண்களிடமும் விவரம் எதுவும் கேட்பதற்கும் அவன் மனம் இசையவில்லை. அவர்களோ ஊமைகளைப் போல் வந்து அவரவர்களுடைய காரியங்களைச் செய்துவிட்டுத் திரும்பினார்கள். அவனுடன் ஒரு வார்த்தையும் பேசவில்லை.



இவ்விதம் ஒரு பகல் சென்றது. இரவு தூக்கத்தில் கழிந்தது. மறுநாள் பொழுது விடிந்ததிலிருந்து விக்கிரமனுக்கு அங்கே படுத்திருக்க மனம் கொள்ளவில்லை. உடம்பில் நல்ல பலம் ஏற்பட்டிருப்பதைக் கண்டான். எழுந்து நடமாடினான். ஒரு விதக் களைப்பும் உண்டாகவில்லை, திடமாகத்தான் இருந்தது. அறைக்கு வெளியே வந்து தோட்டத்தில் பிரவேசித்தான். அங்கிருந்த பணியாட்கள் யாரும் அவனைத் தடுக்கவில்லை. விக்கிரமன் மேலும் நடந்தான். நதிக்கரையை நோக்கி மெதுவாக நடந்து சென்றான். பல வருஷங்களுக்குப் பிறகு அந்தக் குளிர்ந்த காவேரித் தீவைப் பார்க்கப் பார்க்க, அவன் மனம் பரவசமடைந்தது. அந்த மாமரங்களின் நிழலில் நடப்பது அளவற்ற ஆனந்தத்தை அளித்தது. மெள்ள மெள்ள நடந்து போய் காவேரிக் கரையை அடைந்து, ஒரு மரத்தடியில் உட்கார்ந்தான். அவனுடைய மனதில் சாந்தியும் இன்ப உணர்ச்சியும் மேலிட்டிருந்தன.

காவேரி நதியின் இனிய நீர்ப்பிரவாகத்தை விக்கிரமன் உற்று நோக்கிக் கொண்டிருந்தான். தண்ணீரில் ஒரு முகம் பிரதிபலித்தது! அது அந்தப் பழைய தெய்வப் பெண்ணின் முகம்தான். காஞ்சியிலும் மாமல்லபுரத்திலும் தன்னைக் கருணையுடன் நோக்கிய முகம்தான். தாபஜ்வரக் கனவுகளில் தோன்றி, சாந்தியும் குளிர்ச்சியும் அளித்த முகமும் அதுதான். அந்தப் பெண்ணை மறுபடியும் காணப் போகிறோமா என்று விக்கிரமன் பெருமூச்சு விட்டான். அதே சமயத்தில், அவனுக்குப் பின்புறமாக வந்து ஒரு மரத்தடியில் சாய்ந்துகொண்டு குந்தவிதேவி நின்றாள்.

(தொடரும்)



இந்தக் குதூகலம் எப்பவும் நிலைச்சிருக்குமாங்க ஜோசியரே!

நடக்குமென்பார்; நடக்கும்

மேஷம்: தூர தேசப் பிரயாணம் வந்து சேரும். பூர்வீகச் சொத்துகள் பாகப் பிரிவினை ஆகும். திருமணம் கைகூடும். குழந்தைகள் இடம் மாறிப்போவார்கள். தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறுவீர்கள். குழந்தைகளால் மன மகிழ்ச்சி உண்டு. வீடு/மனை வாங்க உகந்த காலம். உத்தியோகத்தில் உயர்வு உண்டாகும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் உண்டாகும். ராகு/கேது/சனி வழிபாடு செய்துவர, நற்பலன் சித்திக்கும்.

ரிஷபம்: மேன்மையான வாரம். வேலையில் மாற்றம் ஏற்படும். வேலைப்பளு குறையும். கல்வி வளம் மேலோங்கும். புதிய தொழில் முயற்சி பலன் அளிக்கும். குடும்ப உறவு நன்றாக இருக்கும். வியாபாரத்தில் இருந்து வந்த மந்தமான போக்கு விலகும். கொடுக்கல், வாங்கல் சிக்கல் தீரும். ராகு/கேது/குரு/சனி வழிபாடு செய்துவர, நற்பலன் உண்டாகும்.

மிதுனம்: புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். வெளியூர்ப் பிரயாணம் வந்து சேரும். திருமணக் காரியம் கைகூடும். தொலைதூர நண்பர்கள் அறிமுகம் ஏற்படும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். வியாபாரத்தில் நல்ல வருவாய் உண்டு. மனைவி மூலம் ஆதாயம் கிட்டும். பரிகாரம் தேவையில்லை.

கடகம்: கடன் சுமை குறையும். குடும்ப வழியில் விட்டுக்கொடுத்து அனுசரணையுடன் நடந்துகொள்வது நல்லது. கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. படிப்பில் அதிக கவனமுடன் இருக்கவும். வாகனங்களில் செல்லும்போது கவனம் தேவை. கூட்டுத் தொழில் செய்பவர்கள் வரவு செலவு கணக்குகளை அவரவர் சரி பார்த்துக்கொள்வது நல்லது. வேலைப் பளு அதிகரிக்கும். வழக்கு, வியாபாரம் வெற்றி அளிக்கும். வராத நிலுவைகள் வந்து சேரும். ராகு/கேது/குரு/சனி வழிபாடு செய்துவர, நற்பலன் உண்டாகும்.

சிம்மம்: மனக் குழப்பம் நீங்கும். பூமி/

17.2.2008 முதல் 23.2.2008 வரை

வீடு வாங்க நல்ல தருணம். கல்வியில் நல்ல மதிப்பெண் கிடைக்கும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். நண்பர்கள் மூலம் நல்ல தகவல் வந்து சேரும். உத்தியோகத்தில் இடமாற்றம் ஏற்படும். நற்பெயர் ஏற்படும். சிலருக்கு மகப்பேறு பாக்கியம் ஏற்படும். பணக் கஷ்டம் இருக்காது. செலவுகள் கட்டுக்குள் இருக்கும். ராகு/கேது/சனி வழிபாடு செய்துவர, நற்பலன் உண்டாகும்.

கன்னி: மன சஞ்சலம் தீரும். வெளிநாடு செல்லும் யோகம் வரும். வாக்கு, கல்வி மேலோங்கும். நாணயம் காப்பாற்றப்படும். உடல்நிலை பாதிக்காது. பணக் கஷ்டம் இருக்கும். பொருளாதார வளர்ச்சி ஏற்படும். நண்பர், உறவினர்களால் ஆதாயம் கிட்டும். தொழில் துறையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். திருமணக் காரியம் கைகூடும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். சனி/குரு வழிபாடு செய்துவர, நற்பலன் உண்டாகும்.

துலாம்: பூர்வீகச் சொத்துப் பிரச்னை முடிவுக்கு வரும். நீண்ட நாள் முடிவு பெறாத வழக்கு வெற்றி அளிக்கும். கொடுக்கல் வாங்கல் சிக்கல் தீரும். உடல் நிலை பாதிக்காது. வீடு/பூமி மூலம் ஆதாயம் உண்டாகும். பணக் கஷ்டம் இருக்கும். இல்லற வாழ்வு நன்றாக இருக்கும். வாக்கு வன்மை மேலோங்கும். குரு/ராகு/கேது வழிபாடு செய்து வர, நற்பலன் உண்டாகும்.

விருச்சிகம்: மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் நடக்கும். கொடுக்கல், வாங்கல் சிக்கல் தீரும். பணக்கஷ்டம் இருக்காது. உத்தியோகத்தில் வேலைப் பளு அதிகரிக்கும். எதிர்பார்க்கும் காரியம் நடக்கும். வியாபாரத்தில் நல்ல லாபம் கிட்டும். ராகு/கேது/சனி வழிபாடு செய்து வர, நற்பலன் உண்டாகும்.

தனுசு: உல்லாசமான வாரம். நீண்ட தூரப் பிரயாணம் வந்து சேரும். தெய்வ தரிசனம் கிட்டும். மனத்தில் நினைத்தது நடக்கும். சுப நிகழ்ச்சி கைகூடும். உடல் நிலை நன்றாக இருக்கும். கல்வி வளம் மேலோங்கும். புதிய வேலை கிடைக்கும். கடன் சுமை தீரும். நீண்டகால முடிவு பெறாத வழக்கு வெற்றி பெறும். குரு வழிபாடு செய்துவர, நற்பலன் உண்டாகும்.

மகரம்: எதிலும் யோசித்து முடிவு எடுப்பது நற்பயனை அளிக்கும். கொடுக்கல், வாங்கலில் அதிக கவனம் தேவை. யாரிடமும் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும். புதிய முயற்சிகளைச் சற்றுத் தள்ளிப் போடவும். நண்பர்களுடன் சகவாசம் வைத்துக்கொள்ள வேண்டாம். ராகு/கேது/சனி/குரு வழிபாடு செய்துவர, நற்பலன் உண்டாகும்.

கும்பம்: மன சந்தோஷம் நிறைந்த வாரம். வராத நிலுவைகள் வந்து சேரும். கடன் சுமை தீரும். சத்ரு தொல்லை நீங்கும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். புதிய ஆடை, ஆபரணங்கள் வந்து சேரும். வாக்கு நாணயம் காப்பாற்றப்படும். வழக்கு வெற்றி அளிக்கும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். சிலருக்கு வேலையில் மாற்றம் ஏற்படும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் உண்டு. ராகு/கேது/சனி வழிபாடு செய்துவர, நற்பலன் உண்டாகும்.

மீனம்: ஏற்றத் தாழ்வுகள் நிறைந்த வாரம். வீண் விரயங்கள் ஏற்படலாம். டென்ஷன் அதிகரிக்கும். குழந்தைகள் பற்றின கவலை ஏற்படும். திருமண முயற்சி பலன் அளிக்கும். வேலைப்பளு அதிகரிக்கும். வேலை மாற்றம் ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் விலகும். பொறுப்பான பதவி வந்து சேரும். குரு வழிபாடு செய்துவர, நற்பலன் உண்டாகும். ●

தஞ்சை பரத்வாஜ்



அழகா சிரிக்கற
ஜெனி மாதிரிதான்
என் ஃபேமிலியும்.
குதூகலத்துக்குக்
குறைச்சலே இல்லை.

காதல் ஒரு கலைடாஸ்கோப்.
பல வானவில்லைக் காட்டும்.
ஆனா, எனக்கு மட்டும்
இன்னும் நேரம் வரலன்னு
நினைக்கிறேன்.



பேசுவது : ஜெயம் ரவி
போஸ் : ஜெனிலியா
ஸ்டில்ஸ் : சந்தோஷ் சுப்ரமணியம்
தொகுப்பு : மதுமிதா

'ஹாய்' சொல்லிட்டு
ஸ்பாட்ல உட்கார முடியாது.
டைரக்டர் ராஜா அண்ணன்
டெரர். பெண்டு நிமித்திடுவார்.







பொண்ணு பார்த்துட்டிருக்காங்க.
கல்லைக் காட்டி தாலியக்
கட்டுன்னா கட்ட மாட்டேன்.
ஆயுளுக்கும் வாழப்போறோம்.
ஒரு ரசனையான பொண்ணு
வேணாமா?

உட்கார்ந்து யோசிச்சாகூட
'பொம்மரிலு' சித்தார்த்
ஞாபகம் வரமாட்டார்.
அந்தளவுக்கு என்
ஒரிஜினாலிட்டி மெயின்டெய்ன்
பண்ணியிருக்கேன்.





சந்தோஷ் சுப்ரமணியம்
சர்வ நிச்சயமா ஹிட்.
அப்பா - மகன் உறவை
இவ்ளோ நெகிழ்வா
எந்தப் படத்திலும் நான்
பார்த்ததில்லை.

சொன்னா நம்புங்க ஜெனி!
என் கூட நடிச்சவங்கள்ல...
இனி நீங்களும் ஸ்ரேயா மாதிரி
நம்பர் ஒன் ஆயிடுவீங்க!




''இருக்கற கட்சி போதாதுன்னு தலைவர் எதுக்குப் புதுசா இன்னொரு கட்சி ஆரம்பிச்சிருக்காரு?''
''எதிர்காலத்துல அவரோட ரெண்டு மகன்களுக்குள்ள தகராறு வந்தாலும் சமாளிச்சிடத்தான்''
- ச.தமிழ்ச்செல்வி
ராமர் பாலமா, இராமர் பாலமா... எது சரி..?
''அரசியலுக்கு வந்து வீடு, நிலம், சொத்து எல்லாத்தையும் அடகு வெச்சுட்டேன்.''
''அதனாலதான் சொன்னேன், கொள்கையை மட்டும் அடகு வெச்சிருந்தா, கூட்டணி பலமாவது கிடைச்சிருக்கும்னு.''
- சிக்ஸ்முகம்
டேய்... டேய்... நீ வேற புதுப் பிரச்னையைக் கிளப்பாதேடா!
''எந்த விதிக்குக் கீழே என்னைக் கைது பண்றீங்க?''
''எல்லாம் உங்க தலைவிதிதான் சார்; வண்டில ஏறுங்க!''
- சீர்காழி வி.ரேவதி

தெள்ளிய சிங்கப் பெருமாள்

சுஜாதா

திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலில் துளசிங்கப் பெருமாள் சந்நிதி உண்டு. துளசிங்கப் பெருமாள் வீதியும் இருக்கிறது. இந்தப் பெருமாளின் சரியான பெயர், தெள்ளிய சிங்கப் பெருமாள். தெள்ளிய என்றால், தெளிந்திருந்துள்ள. அவர் தான் நாக்குக்குச் சௌகரியமாக துளசிங்கப் பெருமாளாகிவிட்டார்.

திருமங்கை ஆழ்வார் இந்தப் பெருமாளைத் தரிசிக்க, திருவல்லிக் கேணிக்கு வந்திருக்கிறார்.

'பள்ளியிலோதிவந்ததன் சிறுவன்
வாயிலோராயிரநாமம்
ஒள்ளியவாகிப்போதஆங்கு
அதனுக்கு ஒன்றுமோர்
பொறுப்பிலனாகி
பிள்ளையைச்சீறிவெகுண்டு
தூண்புடைப்பப்
பிறையெயிற்றனல்விழிபேழ்வாய்
தெள்ளியசிங்கமாகியதேவைத்
திருவல்லிக்கேணிக்கண்டேனே.'

பள்ளிக்கூடத்தில் படித்து வந்த தன் மகன், வாயில் எப்போதும் நாராயணன் நாமத்தை ஓராயிரம் தடவை சொல்ல, அதைப் பொறுக்க மாட்டாமல் பிள்ளையைக் கோபித்து இரணியன் தூணை உடைக்க, பிறை சந்திரன்போல பற்களும், நெருப்பு விழி, பெரிய வாய் கொண்டு நரசிம்ம வடிவத்தில் திருவல்லிக்கேணியில் தரிசித்தேனே என்று பாடியிருக்கிறார்.

இந்த திருவல்லிக்கேணிப் பாசுரங்களில், திருமாலின் சகல குணங்களையும் அவதாரங்களையும் ஒவ்வொன்றாக உரைக்கிறார். சிற்றவையின் பணியால் முடிதுறந்தோன், பூதனையைக் கொன்றவன், ஆநிரை காத்தவன், நப்பின்னைக்கு அருள் செய்தவன், பாண்டவர்க்குத் தூது சென்றவன், இராவணனை வென்றவன், கஜேந்திரன் என்னும் யானையின் துயரத்தை நீக்கினவன். இவ்வாறு எல்லா அவதாரங்களையும் சொல்லும்போது இந்த தெள்ளிய சிங்கனும் குறிப்பிடப்படுகிறார்.

(படிக்கலாம்)



வாரம் ஒரு பாசுரம் 10

பாகம் – 2

லீவுக்கு வந்த

இன்றைக்கு என்ன சொல்லப் போகிறாளோ மனைவி ருக்மணி என்ற பயத்துடன் வீட்டுக்குள் நுழைந்தேன்.

''மாமா...மாமா'' கோஷ்டி கானத்துடன் அருமை அக்காவின் வானர சேனைகள் சூழ்ந்துகொண்டன. ஜன்னலை உடைக்கும், அடுத்தவர் மூக்கை உடைக்கும், மரம் விட்டு மரம் தாவும், மாடி விட்டு மாடி குதிக்கும். அசந்தால் அடுத்தவர் தலையில் குதிக்கும். தட்டிக் கேட்டு அடித்தால் கையைக் கடித்து விட்டுப் பறக்கும்.

அரை பரீட்சை லீவை இன்பகரமாக கழிக்க வந்து மூன்று நாட்கள்தான் தொலைந்திருக்கின்றன. அதற்குள் வீட்டிலிருந்த உடையும் பொருட்கள் குப்பைக்கு இடம் மாறிவிட்டன.

ஆபீஸிலிருந்து வீட்டுக்கு வந்த முதல் நாள் ஜாங்கிரி, மறுநாள் லட்டு, இன்றைக்கு தெருக்கடை கை முறுக்கு. வீட்டுக்குள் நுழைந்ததும் கையிலிருந்த முறுக்கு மூட்டையைப் பிடுங்கிக்கொண்டு பெரிச ஓட, மற்ற இரண்டும் அவனைத் துரத்திக்கொண்டு ஓடின. அக்கா சமாதானப்படுத்தத் தயாரானாள் - கையில் வெள்ளைக் கொடியில்லாமல்.

இந்தக் கலவரத்தை ரூமுக்குள்ளிருந்த என் சகதர்மிணி ருக்மணி அதிர்ந்து நோக்க, என்னைக் கண்டதும் கைதேர்ந்த நடிகை மாதிரி கண்ணீரைக் கொட்டினாள்.

கண்ணீரைக் கக்குவது ஒன்றும் என்னவளுக்குக் கடும் காரியமல்ல, கடுகு காரியம்தான். இருந்தாலும் நான் ஆபீசுக்குப் போன பிறகு வீட்டில் எதுவோ அபகாரியம் நடந்திருக்கிறது என்பதை மட்டும் உணர முடிந்தது. பதறி ஓடினேன்.

''ருக்கு, எதுக்கு இப்படி அசடாட்டம்... என்ன நடந்தது?'' கண்ணீரைத் துடைத்தேன்.

''பீரோ கண்ணாடியை உடைச்சுட்டானுங்க.''

''அப்பாடா, உன்னைக் கடிச்சிருட்டானுங்களோன்னு ஆடிப்போயிட்டேன். யாரு உடைத்தது? உன் அருமை நாத்தனார் புதல்வர்கள்தானே. போனாப் போவுது விடு.''

''என் பயமெல்லாம் மூன்று நாள் கூத்தே இப்படி இருந்தால், பாக்கி பத்து நாள் எப்படி கழியப்போகுதோன்னு தாங்க.''

''நாள் கழியுதோ இல்லையோ, நீயும் நானும் பயத்தில் கழியப்போவது நிச்சயம். அதற்கு நான் ஓர் உபாயம் பண்றேன். நீ கண்ணீரைத் துடைச்சுக்கோ.''

லுங்கிக்கு மாறி, ஹாலுக்கு வந்தேன். சோகமாக அக்காவை நெருங்கியபோது, ''மாமா, முறுக்கை கடிக்கக் கஷ்டமா இருக்கு. நாளைக்கு ஜாங்கிரியே வாங்கிட்டு வாங்க'' என்று இளையவன் உரிமையோடு சொன்னான்.

''அக்கா, என் மச்சான் மகாலிங்கம் அவன் பசங்களை இங்கு லீவைக் கழிக்க அனுப்புவதாக போன் பண்ணான்.''

''என்னடா தம்பி, குண்டைத் தூக்கிப் போடறே! நானும் என் சிசுக்களும் நிம்மதியா இருக்கிறோம் என்பதற்காக உன் இல்லத்தரசி செய்த சூழ்ச்சியா இது?''

''அம்மா, நீ ஏன் பயப்படறே? போன வருஷ லீவின்போது என்னை 'பெட்'டுக்கு அனுப்பியவனை, இந்த வருஷம் நான் 'பெட்'டுக்கு அனுப்பலை... என் பேர் சிகாமணி இல்லை'' சிங்கம்போல் கர்ஜித்தான் அக்காவின் மூத்த புதல்வன்.

''தம்பி, இதுகளும் சும்மா இருக்காது.



குட்டீஸ்!

எஸ்.சீதாராமன்

அதுகளும் சும்மா இருக்காது. நீ இப்பவே போன் போட்டு, இங்கு அக்காவும், குழந்தைகளும் இருக்காங்க. இப்போ வர வேண்டாம். அடுத்த லீவுக்கு அனுப்புன்னு சொல்லிடு.''

''அக்கா, அவர் போன் பண்ணப்போ இதைச் சொன்னேன். 'அத்தை வீட்டுக்குப் போயே தீருவோம்'னு அடம் பிடிக்குதுங்களாம். 'உங்க அக்கா பிள்ளைகளை ஒரு மூலையிலும், நான் பெத்ததுங்களை மறு மூலையிலும் நீங்க ஒரு பத்து நாட்களுக்கு லீவு போட்டுட்டு மடக்கி வைங்க மச்சான்'னு உரிமையுடன் சொல்லிட்டார்.''

''எந்தக் கபாலம் எப்ப உடையப் போகுதோன்னு ஒவ்வொரு மணித்துளியும் பயந்துகொண்டு, வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கிட்டுச் சாக என்னால் முடியாதுப்பா. என் தம்பி நீ நல்லா இருக்கணும். விடிந்ததும் எங்களை பஸ் ஏற்றி விடுப்பா'' என்றாள் தன் செல்வங்களை காக்கும் பொருட்டு அக்கா.

''லீவுக்கு வந்த என் மகளையும், பேரனுங்களையும் மூணே நாளில் துரத்திட்டியேன்னு அம்மா என் மண்டையை உருட்டுவாங்க. இன்னும் பத்து நாள் இருந்துட்டே போக்கா'' மேலுக்கு செப்பினேன்.

''அம்மாவை நான் பார்த்துக்கிறேன். ஆளை விடுடா சாமி'' அக்கா கும்பிட்டாள்.

நிம்மதியுடன் இல்லாளிடம் சென்றேன். ''அக்காவையும், அவள் புதல்வர்களையும் வெளியேற்ற நான் போட்ட நாடகம் சக்ஸஸ்'' என்றேன்.

சந்தோஷமாய்ச் சிரித்தாள்.

மறுநாள். காலையில் அக்காவையும் குழந்தைகளையும் பஸ் ஏற்றி அனுப்பி விட்டு வீட்டுக்குத் திரும்பினேன் மகிழ்ச்சியாக. வீட்டில், மச்சான் மகாலிங்கமும் அவர் படைகளும் என்னை பரமானந்தமாக வரவேற்க, மூர்ச்சையாகிச் சரிந்தேன். ○



'பில்லா' படத்தின் காஸ்ட்யூம் டிசைனர் அனுவர்தன், அதிசயமான கவனமும் பாராட்டு களும் பெற்றிருக்கிறார். இயக்குநர் விஷ்ணுவர் தனின் மனைவியான அனு, தம் அனுபவங்கள் குறித்து நம்மிடம் விரிவாகப் பேசினார்...

உதவி இயக்குநர் எப்படி ஆடை வடிவமைப் பாளராக மாறினார்?

''பொதுவாக இந்தியில், ஆண்கள்தான் காஸ்ட்யூம் டிசைனர்களாக இருப்பார்கள். ஆனால், தமிழில் பெண் கள் ராஜ்ஜியம்தான். நான் இந்தத் துறையைத் தேர்ந் தெடுக்கக் காரணம், இயக்குநர் சந்தோஷ் சிவன். நானும் விஷ்ணுவர்தனும் ஒன்றாக லயோலாவில் படித்தோம். சந்தோஷ் சிவனிடம் ஒன்றாக வேலை பார்த்தோம். உதவி

கவர்ச்சியை எதிர்க்கும்

இயக்குநராக இருந்தாலும், நான் ஆடை சம்பந்தமான வேலை களுக்குப் பொறுப்பாக இருப்பேன். அதில் என்னுடைய தனித் திறமையைக் கவனித்த சந்தோஷ் சிவன்தான், அவர் இயக்கிய 'அசோகா' படத்தின் ஆடை வடிவமைப்பாளராக என்னை நியமித்தார். முதல் படமே இப்படி அமைய நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும். பிறகு விஷ்ணு இயக்கிய நான்கு படங்களுக்கும் நான்தான் காஸ்ட்யூம் டிசைனர். எனக்குக் குழந்தை பிறந்ததால், அதிகமான படங்களை ஒப்புக்கொள்ளவில்லை. விஷ்ணு படங்களில் எனக்குச் சவாலான வேலைகளும் சுதந்திரமும் கிடைக்கும்.''

'நான் அழகான உடைகள் அணிந்தது பில்லாவில்தான்' என்று அஜீத் சொன்னது பற்றி?

'' 'என்னை ரொம்ப அழகா காமிச்ச படம் பில்லா. இந்த மாதிரி நவநாகரிக உடைகளை சமீப படங்கள்ல நான் அணிந்ததே இல்லை' என்றுகூடச் சொன்னார் அஜீத். அவருக்கு என் நன்றி. பழைய பில்லாவுக்கும் புது பில்லாவுக்கும் உள்ள வித்தியாசத்தை உடைகளில் காண்பிக்க வேண்டும் என்று முன்பே முடிவெடுக்கப்பட்டது. அஜீத் அழகுக்கு, அவரை இன்னும் அழகாக காண்பிக்கலாமே என்றுதான் நான் எப்போதும் நினைப்பேன். பில்லாவில் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி, அவரை ஸ்டைலாக மாற்றிவிட்டேன்.''

'பில்லா'வின் கூலிங்கிளாஸ் விமர்சனம் பற்றி?

''வெளிநாடுகளில் கூலிங்கிளாஸ் போடுவதென்பது இயல்பான ஒரு விஷயம். வீட் டுக்குள் இருக்கும்போதுகூட ஊதா கதிர்களால் பாதிப்புகள் ஏற்படலாம் என்பதால் அப்படி அணிவது ஒன்றும் பெரிய குற்றம் இல்லை. நான் அதிகமாக வெளிநாடுகளுக்குப் போயிருக்கிறேன் என்பதால், எல்லோரும் கூலிங்கிளாஸ் போடுவது எனக்கு வியப்பாக இல்லை. எதுவும் புதிதாகச் செய்ய நினைக்கும்போது விமர்சனங்கள் வருவது உறுதி. அதில் நான் மட்டும் விதிவிலக்கா என்ன!''

எப்படி ஆடை வடிவமைப்பைத் தீர்மானம் செய்கிறீர்கள்?

''கடையில் ஓர் அழகான உடையைப் பார்த்துவிட்டால், உடனே அதை என் ஹீரோ வுக்கும் ஹீரோயினுக்கும் அணிவித்து அழகு பார்க்க மாட்டேன். கதாபாத்திரத்துக்கு

காஸ்ட்யூம் டிசைனர்!

ஏற்ற மாதிரிதான் ஆடைகள் வடிவமைப்பேன். கதாபாத்திரத்துக்குப் பொருந்தாத உடைகளை நான் ஒருபோதும் கொடுப்பதில்லை. இதில் எப்போதும் பிடிவாதமாக இருப்பேன். ஆடைத் தேர்வு என்பது இயக்குநரின் கதாபாத்திரச் சூழலுக்கும் கேமராமேனின் எண்ணங்களுக்கும் ஈடு கொடுக்கும்படியாகவும் இருக்க வேண்டும். பல சமயங்களில் நடிகரின் இமேஜ், ரசிகர்களின் எதிர்பார்ப்பு இவையும் ஆடை வடிவமைப்பைத் தீர்மானிக்கும். நாம் இங்கு ஆர்ட் ஃபிலிம் ஒன்றும் எடுக்கவில்லையே... பாடல் காட்சிகளில் ஹீரோ, ஹீரோயினை அழகாகக் காண்பிக்க, பளபளப்பான உடைகள் வழங்கப்படும். பாடல் காட்சிகளுக்கும் கதைக்கும் பொருத்தம் பார்க்கக்கூடாது. கூடவே, கேட்டதைக் கொடுக்கும் தயாரிப்பாளரும் அமைய வேண்டும்.''

அன்று நதியா உடைகளுக்கு இருந்த க்ரேஸ்போல இன்று அப்படியெதுவும் இல்லையே?

''இப்போது பில்லா உடைகள் பத்தி எல்லோரும் பாராட்டிப் பேசறாங்க. பில்லா உடைகள், ஷூ, கூலிங்கிளாஸ் போன்றவற்றுக்கு ரசிகர்களிடையே பெரிய ஆதரவு கிடைத்தது. இவற்றை எங்கு வாங்குவது என்று நிறைய பேர் என்னிடம் விசாரித்தார்கள். ஒரே காரணம், அந்த உடைகளை எல்லோராலும் வாங்க முடியும் என்பதுதான்.''

இதற்கென படிப்பு தனியாகத் தேவைப்படுகிறதா?

''படிப்பு மட்டுமே உங்களைத் தகுதிக்குரியதாக்கி விடாது. நான் ஒன்றும் ஃபேஷன் டிசைனிங் படிக்கவில்லை. விஸ்காம்தான் படித்தேன். ஆனால், உங்கள் ரசனையும் பார்வையும் நன்றாக இருக்க வேண்டும். கதாபாத்திரத்தைச் சிதைத்த எத்தனையோ ஆடை வடிவமைப்புகளை நாம் பார்த்திருக்கிறோம். அதுபோல் ஆகிவிடக் கூடாது என்பதில் எல்லா சந்தர்ப்பங்களிலும் கவனமாக இருக்க வேண்டும். பட்ஜெட், நேரக்கெடு, சூழல், ஏன் சில சமயங்களில் வானிலைகூட ஆடை வடிவமைப்பைத் தீர்மானிக்கும். இங்கு எதுவுமே ரெடிமேட் ஃபார்முலா கிடையாது. எல்லாமே முயற்சி செய்து பார்த்துத்தான் கற்றுக்கொள்ள முடியும். டிரெண்ட் பற்றிய விவரம் எப்போதும் விரல் நுனியில் இருக்க வேண்



• அனு வடிவமைப்பில் 'பில்லா' அஜித்...



டும். சரோஜாதேவி காலத்தில் குட்டை ரவிக்கைகளுக்கு நல்ல மவுசு இருந்தது. அதன்பிறகு, பெல் பாட்டம் பேண்ட் களுக்கு இளைஞர் கள் அடிமையா னார்கள். வட இந்தியாவிலுள்ள காக்ரா சோலி, இங்கு திடீர் புகழ் அடைந்தது. டிசைனர் புடைவைகளும் ஜீன்ஸ் பேண்ட் களும்தான் இன்றைய நவீன ஆடைகள்.''

தமிழ் சினிமாவில் ஆடை வடி வமைப்புப் பற்றிய விழிப்புணர்வு எப்படி யிருக்கிறது?

''மும்பையில் ஒரு காஸ்ட்யூம் டிசை னரால் செலிபிரிட்டி ஆக முடியும். ஆனால், தமிழ் சினிமாவில் இப்போதுதான் இது பற்றிய விழிப்புணர்வு வந்திருக்கிறது. ஹாலிவுட், பாலிவுட் போல தமிழ் சினிமாவில் ஆடை வடிவமைப்பு பற்றிய முழுமையான விழிப்புணர்ச்சி கிடையாது. தனியாக ஆடை வடிவமைப்பாளரை வைத்துக்கொள்வதை வீண் செலவாக நினைப்பவர்கள் இருக்கிறார்கள். ஆனால், இந்தப் போக்கு மாறிக்கொண்டிருக்கிறது. இப்போது உடை வடிவமைப்பு பத்தி எல் லோருக்கும் அக்கறை இருக்கிறது. கறுப்பு வெள்ளைப் படங்களில் உடைகள், நகை கள் மீது நிறைய கவனம் இருந்தது. நடுவில் இந்த ரசனை குறைந்துபோனது. இப்போது மீண்டும் உடைகளில் கவ னமும் ஆர்வமும் அதிகரித்திருக்கிறது.''

பில்லாவில் நயன்தாராவும் நமீதாவும் இவ்வளவு கவர்ச்சிகரமாக உடைகள் அணிந்திருக்கத்தான் வேண்டுமா?

''இயக்குநர் தன் கதாபாத்திரம் எப்படி அமைய வேண்டும் என்று விரும்பு கிறாரோ, அதற்கேற்றவாறுதான் சினி மாவில் உள்ள எல்லா தொழில்நுட்பக் கலைஞர்களும் பாடுபடுகிறார்கள். பில் லாவில் இருவரும் கவர்ச்சிகரமாக இருப் பார்களே தவிர, முகம் சுளிக்கும் விதமாக ஆடைகள் அணிந்திருக்க மாட்டார்கள். மலேசியாவில் இதுபோன்ற உடைகள் மிகவும் சகஜம். மற்றபடி, நடிகையைக் கவர்ச்சிகரமாகக் காண்பிக்கும்படி உடை வடிவமைக்கச் சொன்னால், நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். ஆடைகள் விஷ யத்தில் ஆடை வடிவமைப்பாளருக்குத் தான் எல்லா உரிமைகளும் வழங்கப்படும். இல்லாவிட்டால், அதற்கென்று தனியாக நாங்கள் எதற்கு?''

இவ்வளவு தூரம் முன்னேறுவோம் என்று நீங்களும் விஷ்ணுவும் நினைத்துப் பார்த்ததுண்டா?

''இருவருக்குமே கனவு காண்பது பிடிக்காது. தொடர்ந்து வேலை செய்து கொண்டிருந்தால், அதுவே உங்களுக்கு எல்லாவற்றையும் சாத்தியமாக்கிவிடும்.''

சினிமாவைப் பார்த்து மக்கள் ஆடை உடுத்துவது சரியா?

''சினிமாவில் கனவுக் காட்சிகளில் மட்டுமே பளபளப்பாகவும் கிளாமராகவும் உடை அணிகிறார்கள். இதிலிருந்தே தெரியவில்லையா, இது யதார்த்தம் இல்லை என்று.''

பொது விழாக்களில் கவர்ச்சியாக உடை உடுத்தும் நடிகைகள் பற்றி?

''எல்லாவற்றுக்கும் வரைமுறை இருக் கிறது. எந்த உடை உடுத்தினாலும் அது நமக்கு மரியாதை கொடுப்பதாக இருக்க வேண்டும். பிரச்னை என்னவென்றால், நம் ஊரில் பெரும்பாலான நடிகைகள் மும்பை யிலிருந்து வந்தவர்கள். கவர்ச்சி உடை என்று நாம் சொல்வது அவர்களுக்கு மாலை நேர பார்ட்டிகளுக்கு உகந்த உடை யாகும். அதே உடையை அவர்கள் இங்கு உடுத்தும்போது நமக்கு அதிர்ச்சியாக இருக் கிறது. கவர்ச்சி உடைகளுக்கு எதிர்ப்புகள் கிளம்பும்போது, அவர்களும் இங்குள்ள நடைமுறை, கலாசாரங்களை நன்கு புரிந்து கொள்வார்கள். தன்னை இன்னொருவர் தவறான கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும் என்று யாரும் விரும்ப மாட் டார்கள்!''

- சநகன்

அட்டை, படங்கள் : ஸ்ரீனி

அமைதியான அமேதியில் மிகப் பிரமாண்டமான கிரிக்கெட் விழா விரைவில் அரங்கேறப்போகிறது. 1,200 அணிகள் புகுந்து கலக்கப் போகும் இந்தக் கலக்கல் கோலாகலம். பிப்ரவரி மாத இறுதியில் தொடங்கி மூன்று மாத காலம் வரை நீடிக்கப் போகிறதாம். 'ராஜீவ் காந்தி க்ராமின் க்ரிக்கெட் டோர்னமென்ட்' என்று அழைக்கப்படும் இந்த அசத்தலான போட்டி, அமேதியின் எம்.பி.யான ராகுலின் நீண்ட நாள் கனவாம்.

கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெறும் அணிக்கு மூன்று லட்ச ரூபாய் பரிசு வழங்கப்படும் என்ற அறிவிப்பு வந்ததிலிருந்து, அமேதி இளைஞர்கள், நம் ஊர் 'சென்னை 600028' ஹீரோக்கள் மாதிரி கிரிக்கெட் ஜுரத்தில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

புதுசு புதுசா எவ்வளவோ ரயில்களைப் பார்த்திருக்கலாம். ஆனா, 'புற்று நோயாளிகளின் ரயில்' பத்தித் தெரியுமா? பஞ்சாபின் படிண்டாவிலிருந்து ராஜஸ்தானின் பிகானேர் ரயில் நிலையத்துக்கு வரும் 'ஜோத்பூர் படிண்டா' பாஸஞ்சரின் இன்னொரு பெயர்தான் 'புற்று நோயாளிகளின் ரயில்'.

நூற்றுக்கணக்கான புற்றுநோயாளிகள், பஞ்சாபிலிருந்து பிகானேரின் 'ஆச்சார்யா துளசி ரீஜினல் கேன்சர் அண்ட் ட்ரீட்மென்ட்' மருத்துவமனைக்கு, புற்று நோய்க்கான சிகிச்சை எடுத்துக்கொள்ள அனுதினமும் வந்து குவிகின்றனர்.

"எங்கள் ஊரில் புற்றுநோய்க்கு சிகிச்சை அளிக்க ஏராளமான மருத்துவமனைகள் உண்டு. ஆனால், எங்களிடம்தான் அங்கு சென்று சிகிச்சை எடுத்துக்கொள்ளப் பணம் தாராளமாக இல்லை. எங்களைப் போன்ற ஏழைகளுக்கு மனிதாபிமானத்தோடு சிகிச்சையளிக்க, எங்கள் ஊர் மருத்துவர்கள் யாரும் முன்வருவதில்லை. அதனாலேயே நீண்ட தூர ரயில் பயணம் செய்து இங்கு வருகிறோம். நோயாளிகள் என்பதால், நாங்கள் தனியாக ரயில் கட்டணம் எதுவும் கட்ட வேண்டியதில்லை. நல்வாழ்வு பிறக்கும் என்ற நம்பிக்கை, இந்த ரயிலில் ஏறிய உடனேயே எங்களுக்குக் கிடைத்துவிடுகிறது'' என்று கண்களில் நம்பிக்கையோடு கூறுகிறார்கள் இந்த ரயில் பயணிகள்.

– நளினி சம்பத்குமார்

ராகுலின் கனவு!



ச.ந.கண்ணன்



இந்தியாவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையே டெஸ்ட் தொடர் சமீபத்தில் நடந்தது. எங்கு பார்த்தாலும் இஷாந்த் சர்மா, இஷாந்த் சர்மா! ஒருநாள் தொடர் ஆரம்பித்தது. இங்கும் இஷாந்த் சர்மா, இஷாந்த் சர்மா! பாண்டிங்கிடம் வாஸிம் அக்ரமிடம் பேச ஆரம்பித்தால், அட, அவர்களும் இஷாந்த் சர்மா, இஷாந்த் சர்மா என்று ஒரே பல்லவி பாடுகிறார்கள்.

19 வயதில் இது எத்தனை பெரிய கௌரவம். 1989ம் வருடம், சச்சின் டெண்டுல்கர் முதன்முதலாக இந்திய அணிக்குத் தேர்வாகி பாகிஸ்தானுக்குச் சென்றபோது, இஷாந்த் சர்மா ஒரு வயதுக் கைக்குழந்தை. இன்று சச்சினும் இஷாந்த் சர்மாவும் ஒரே அணியில். பேட்டிங்கில் சச்சினையும் பந்துவீச்சில் இஷாந்த் சர்மாவையும் ஆஸ்திரேலியர்கள் புகழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இத்தனைக்கும் ஸ்ரீசாந்துக்கும் முனாப் பட்டேலுக்கும் காயம் என்பதால் தான் இஷாந்த் ஆஸ்திரேலியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டார். முதல் டெஸ்டில் வாய்ப்புக் கொடுக்கப்படவில்லை. இரண்டாவது டெஸ்டில் ஜாகீர் கான் காயம் அடைந்ததால் ஆட இடம் கிடைத்தது இஷாந்துக்கு. ஆனால் இன்று" இஷாந்த் சர்மா, இஷாந்த் சர்மா!

2006ம் ஆண்டே டெல்லியைச் சேர்ந்த இஷாந்தின் பெயர், இந்திய கிரிக்கெட் வட்டாரத்தில் பலமாக அடிபடத் தொடங்கியது. அப்போது வெறும் நான்கு ரஞ்சி ஆட்டங்கள் மட்டுமே ஆடியிருந்தார் இஷாந்த். ஆனால், உயரமும் பந்தை பேட்ஸ்மேன் தோள்பட்டை வரை எழச் செய்யும் வாகவும்ம் இஷாந்தைக் கவனிக்கச் செய்தன. 2006ல் இந்திய அணி தென் ஆப்பிரிக்கா சென்றபோது, மோசமான பந்துவீச்சினால் இர்ஃபான் பதான் இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பப்பட்டார். அப்போது இஷாந்தை தென் ஆப்பிரிக்கா அனுப்ப எல்லா ஜாம்பவான்களும் நடைபெற்றன. இறுதியில், இந்திய அணி உலகக் கோப்பையில் அடி வாங்கிய பிறகு, பங்களாதேஷ் சென்ற அணியில் இஷாந்த்துக்கு இடம் கிடைத்தது.

பனை மர உயரம். ஆறடி நான்கு அங்குலம். இந்திய வேகப்பந்து வீச்சாளர்களில் இதற்கு முன்பு யாரும் இவ்வளவு உயரம் இருந்தது கிடையாது. பொதுவாக வேகப்பந்து வீச்சாளர்கள், இருபது வயதுக்குப் பிறகுதான் வேகப்பந்து வீசுவதற்குத் தேவையான ஒழுங்குகளை முழுமையாகக் கற்றுக் கொள்வார்கள். ஆனால், இஷாந்த் பத்தொன்பது வயதில் ஆட்டம் காண்பிப்பது, எல்லோருக்கும் பெரிய ஆச்சர்யத்தைக் கொடுத்திருக்கிறது.

இன்றைய தேதியில் உலகில் இருவர்தான் முதல் தர பேட்ஸ்மேன்கள். ஒருவர், சச்சின்; இன்னொருவர், பாண்டிங். பெர்த் டெஸ்டில் இரண்டு முறை பாண்டிங்கை ஒரே மாதிரியான பந்து வீச்சில் வீழ்த்தினார் இஷாந்த். ஒரு நாள் தொடரிலும் அதை விடாமல் கடைபிடிக்கிறார். இத்தனை வருட அனுபவத்தில்

இனி எல்லாம் இஷாந்த்!

பாண்டிங்குக்கு இதுபோன்றதோர் அனுபவம் ஏற்பட்டதே கிடையாது. 'ஒரு மாதிரி பந்து வீசுகிறார். எதிர்கொள்ளவே முடியவில்லை. இடது கை பந்துவீச்சாளர் போல பந்தை உள்ளே இழுக்கிறார்' என்று பாண்டிங்கூட இஷாந்த்தைக் காலட்போக்கில் பாராட்ட ஆரம்பித்துவிட்டார்.

தேச கிரிக்கெட்டின் அதிக பளு தாங்காமல், இன்று தாற்காலிக ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கிறார். இது சமீபத்திய கிரிக்கெட் உலகின் அதிர்ச்சி. இஷாந்த் மீதும் அதிக பாரங்கள் ஏற்றாமலிருப்பது பவுலிங் கோச் வெங்கடேஷ் பிரசாத்தின் கடமை.

80களில் பார்த்த மேற்கு இந்திய அணியின் சாயல் இப்போதே இந்திய அணியிடம் தென்படுகிறது. ஜகீர்கான் - இஷாந்த் சர்மா - ஆர்.பி.சிங் - ஸ்ரீசாந்த் - இந்த நான்கு பேரும் இதுவரைக்கும் ஒன்றாக எந்த ஆட்டத்திலும் ஆடியது கிடையாது. அப்படியொரு சந்தர்ப்பம் வரும் நாள் நீண்ட தொலைவில் இல்லை.

ஆஸ்திரேலியாவின் வேகப்பந்து வீச்சாளர் டேமின் ஃப்ளெமிங், மெல்போர்ன் ஒருநாள் போட்டிக்குப் பிறகு இஷாந்துக்கு ஜோசியம் பார்க்க ஆரம்பித்துவிட்டார். 'இன்னும் சில மாதங்கள் கழித்துப் பார்த்தால் இஷாந்த் உலகின் முதல்தர வீராக இருப்பார். ப்ரெட் லீ, தென் ஆப்பிரிக்காவின் ஸ்டெயின் ஆகிய வீரர்களை இவர் தூக்கிச் சாப்பிடப் போகிறார்.'



புகழ் வந்தால் கூடவே விளம்பர வாய்ப்பும் வராதா என்ன? இப்போதே இஷாந்துக்கு நாற்பது லட்சம் சம்பளம் தர விளம்பர நிறுவனங்கள் தயாராகி விட்டன. ஆஸ்திரேலியாவிலிருந்து இறங்கும்போது தொகை மேலும் கூடலாம். பேட்ஸ்மேன்கள் ஆதிக்கம் செலுத்தும் விளம்பர உலகில் இஷாந்த் சர்மா இப்போது சர்ப்புவிசையாக இருக்கிறார்.

இஷாந்தைப் பார்க்கும்போது ஆஸ்திரேலியாவின் ஷான் டைட் ஞாபகம் வருகிறது. 2007ஆம் ஆண்டின் சிறந்த புதுமுகமாக ஐ.சி.சி.யால் தேர்ந்தெடுக்கப்பட்டார் டைட். ஆனால், சர்வ



“திட்டினவங்களே

இயற்கை விவசாயத்துக்கு மாறிய செட்டியூர் கிராமத்துப் பெண்மணியான தெய்வா சந்தித்த இடர்ப்பாடுகள் கொஞ்ச நஞ்சமல்ல. இருந்தாலும் உறுதியோடு நின்று சாதித்துக் காட்டிய அவரின் கதையைக் கேளுங்கள் :

“நான் எட்டாம் வகுப்புப் படிச்சிருக்கேன். பதினாலு வயசுலேர்ந்து விவசாய வேலை செய்யறேன். பதினெட்டு வயசுல என்னோட தாய் மாமனையே கட்டிக்கிட்டேன். அவரும் ஒரு விவசாயி. எங்களுக்குப் பத்து ஏக்கர் காடு இருக்கு. தண்ணிக்குப் பஞ்சமில்ல. இருந்தாலும் உரமூட்டை, பூச்சிக்கொல்லி மருந்துன்னு வாங்கிப் போட்டே ரொம்பக் கடனாளி ஆயிட்டோம்.

படிச்சிட்டு இருந்தப்பவே ரேடியோவுல இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வாரோட பேச்சை விரும்பிக் கேட்பேன். நிறைய விஷயங்களை அற்புதமா சொல்லுவாரு. அவரு பேசினது அந்த வயசுலயே என்னோட மனசுல பதிஞ்சு போச்சு.

ஏன் இன்னும் எல்லோரும் இயற்கை விவசாயத்துக்கு மாறலைன்னு அப்பவே யோசிப்பேன்.

எனக்குக் கல்யாணமாகி, கொஞ்ச நாள் விவசாயத்தை நானே பொறுப்பாப் பார்த்தாலும் நாங்களும் இயற்கை விவசாயத்துக்கு மாறலை. ரெண்டு வருஷத்துக்கு முன்னால நம்மாழ்வாரை கொளத்தூர்ல நேர்ல சந்திச்சுப் பேசினேன். அப்பத்தான் நான் தெளிவடைஞ்சேன். ரசாயன உர சாகுபடியைவிட இயற்கை உர சாகுபடி செலவு ரொம்பக் குறைவு. மனுஷாளுக்குக் கெடுதல் இல்லாத உணவுப் பொருட்களை இயற்கை விவசாயத்தால மட்டும்தான் விளைவிக்க முடியும்ங்கறதைப் புரிஞ்சிக்கிட்டேன்.

புரிஞ்சிக்கிட்டாப் போதுமா? அதச் செயல்படுத்த வேணாமா! என்னோட கணவர்ட்ட பேசினேன். ‘ரொம்ப நல்ல விஷயம். உடனே செயல்படு’ன்னு என்னை உற்சாகப்படுத்தினாரு.

அமுதக் கரைசல், பஞ்ச கவ்யம் எல்லாம் எப்படித் தயாரிக்கறதுன்னு தெரிஞ்சுக்கிட்டேன். பஞ்ச கவ்யத்துக்கு பால், தயிர், இளநி, கரும்புச் சாறு, பசு மாட்டுக் கோமியம், மாட்டுச் சாணம், வாழைப்பழம், நெய், பழக் கழிவுகள் இதெல்லாம் வேணும்.

கொளத்தூர்ல வெள்ளிக்கிழமை வாரச் சந்தை. அங்கன போயி பழக் கழிவுகளை வெலைக்கி வாங்கிட்டு வருவேன். மேட்டூர்ல பழ ஜூஸ் கடைகள்ல பத்து கிலோ,



★ தனது வாழைத் தோட்டத்தில் தெய்வா...

வந்து தித்திக்கிறாங்க!”

பதினஞ்சு கிலோன்னு பெரிய பையில பழக் கழிவுகளை ரொப்பிக்கிட்டு டவுன் பஸ்கல வருவேன். பஸ்கல வர்றவுக என்னையக் கிண்டல் பண்ணுவாங்க. பஸ்சை விட்டு ஊருக்குள்ளாற நடந்து வருவேன். 'பஸ்சு ஏறிப் போயி குப்பையில கிடாகுற பழங்களையெல்லாம் பணம் கொடுத்து பையில தூக்கிட்டு வர்றா பாரு'ன்னு ஊரு பொம்பளைங்க நக்கலடிப்பாங்க.

இதெல்லாம் பத்தாதுன்னு என் புருஷன்கிட்டே வந்து, 'ஏன் இந்தப் பைத்தியக்கார வேலை?'ன்னு பக்கத்து காட்டுக்காரங்க பத்த வெச்சிட்டுப் போவாங்க. எதையும் நான் காதுல வாங்கிக்க மாட்டேன். அமுதக் கரைசல், பஞ்ச கவ்யம் ரெண்டும் அப்பப்ப தேவைப்படுற அளவுக்குத் தயார் பண்ணிக்குவேன். இப்ப ரெண்டு வருஷமா எங்க காடு முழுவதும் இயற்கை விவசாயம்தான்.

மூணு ஏக்கர்ல வாழை. நிலக்கடலை ஒரு ஏக்கர். மஞ்சள் ஒரு ஏக்கர். நெல்லு ரெண்டு ஏக்கர். மிளகாய் ஒரு ஏக்கர். கால்நடைகளுக்குத் தீனியா சோளத்தட்டை ஒரு ஏக்கர். எல்லாத்துக்கும் இயற்கை உரத்தை மட்டும்தான் பயன்படுத்துறேன். இப்ப மண்ணும் நல்லா இருக்கு. விளையுற பொருளும் நல்லா இருக்கு. ரெண்டு வருஷமா என்னைய வந்து திட்டினவங்க எல்லாம், இப்ப என்கிட்ட வந்து தித்திக்கிற மாதிரி பேசி, 'எப்படி இது?'ன்னு கேட்டுட்டுப் போறாங்க.


பொள்ளாச்சியில பகளை அங்காடி வெச்சு நடத்துறவரு, எங்ககிட்டே வாழைக்காய் எடுத்துப் போய் பரிசோதிக்கப் பார்த்தாரு. இயற்கை உரம் மூலமா விளைந்ததுன்னு நிரூபணம் ஆகியிருக்குன்னு எனக்கு போன்ல சொன்னாரு. என்னோட தோட்டத்துல கதளி அப்பிடிங்கற வாழை பயிரிட்டிருக்கேன். உடலுக்குக் குளிர்ச்சியானது. பழமும் அம்புட்டு ருசி!

இப்ப கடனெல்லாம் குறைஞ்சாச்சு. மனசுக்கு ரொம்பத் தெம்பா இருக்கு. எந்த ஒரு நல்ல விஷயத்தையும் செய்யும்போது விமர்சனம் வரத்தான் செய்யும். ஆனா, நம்ம உழைப்புல தீவிரமாவும் ஆர்வமாவும் இருந்தா, சாதிச்சுக் காட்டுறது ஒண்ணும் பெரிய விஷயம் இல்லீங்க.''

செய்திச் சித்திரம் :

ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

''முன்னாடி எல்லாம் நெஃப்ராலஜிஸ்ட்னு சொன்னா ரொம்பவே மதிப்பும் மரியாதையும் இருந்துச்சு. ஆனா, இன்னைக்குச் சூழல்ல அப்படிச் சொல்றதுக்கு கொஞ்சம் தயக்கமா இருக்கு!'' என்று சிரிக்கிறார் விஜயா சுகாதார மைய சிறுநீரக மருத்துவப் பிரிவின் இயக்குனர் டாக்டர் இராஜன் ரவிச்சந்திரன். அமெரிக்காவின் வாஷிங்டன் ஃபெலோஷிப் விருதும், ஸ்காட்லாண்டின் 'ஃபெலோஷிப்' விருதும் இவருக்கு இவ்வாண்டு அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அந்த மகிழ்ச்சியைக்கூட மறந்து கவலையுடன் பேசுகிறார்.



கிட்னி திருட்டு : மெடிக்கல் டூரிஸம்


''பத்திரிகையைப் புரட்டினா, கிட்னி திருட்டுப் பத்தி பரவலா செய்தி அடிபடுது. வேதனையா இருக்கு. பத்திரிகைச் செய்தியில வர்ற மாதிரி, திடீர்னு ஒருத்தர்கிட்டேயிருந்து கிட்னி எடுக்கறதுங்கறதெல்லாம் முடியாது. அதுக்கான செக்கப் எல்லாம் நெறைய பண்ண வேண்டியிருக்கும். ஆனா, கிட்னி திருட்டு கேஸ்ல சில டாக்டர்களும், பெரிய பெரிய ஆஸ்பிடல்களும் ஈடுபடுவது ரொம்பவே வருத்தமான தண்டிக்கத்தக்க விஷயம் தான்'' என்கிறார்.

'சட்டரீதியா இப்பிரச்னைக்கு என்ன தான் தீர்வு?' என்றால், ''ஒருவருக்குச் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்யணும்னா, அவருக்கு கிட்னி தானம் தர்றவங்க இரத்த சம்பந்த உறவா இருக்கணும்னு சட்டம் சொல்லுது. அதேசமயம் எமோஷனல் ரிலேஷன்னு சொல்லக்கூடிய நண்பர்கள், நல விரும்பிகள் லிஸ்ட்ல உள்ளவங்களும் தானம் செய்யலாம்னு சட்டத்துல இடம் இருக்கு. இந்த கேப்லதான் கிட்னி திருட்டு கேஸ்ங்க நெறைய நடக்குது'' என்கிறார்.

''சிறுநீரகம் செயலிழந்து உயிருக்குப் போராடற நோயாளி ஒரு பக்கம், வறுமைக்குப் பயந்து வகை தெரியாம பணத்துக்கு ஆசைப்பட்டு, கிட்னி தானம் தர வர்ற ஏழை ஒரு பக்கம், நோயாளியையும் காப்பாத்தணும்! ஏழையும் வாழணும்ங்கிற நோக்கத்துலதான் சில டாக்டர்கள் சட்டத்துக்குப்புறம்பா அந்தக் காரியத்துல இறங்கிடறாங்க. ஆனா, இந்த விஷயத்துல காசு பார்த்துடறது என்னமோ மீடியேட்டர்கள்னு சொல்ற இடைத்தரகர்கள்தான்!''

'வசதியான வாழ்க்கை நடத்தற டாக்டர்களுக்கு அப்படி என்ன அவசியம் இருக்கு இந்த மோசடியைச் செய்யறதுக்கு?' என்றால், ''பெரிய அளவிலே ஆஸ்பிடல் கட்டிடறாங்க. அதை மெயின்டெய்ன் பண்ணணும்னா காசு வேணுமே! சுகாதாரமான ஆஸ்பிடலா இருக்கணும்ங்

வளர்க்கும் மோசடி!



கறதைவிடவும், ஆடம்பரமான ஆஸ்பிடலா இருக்கணும்னு நெனைக்கிறாங்களோ என்னவோ! சில டாக்டர்களும், பெரிய பெரிய ஆஸ்பிடல்களும் இது மாதிரியான குறுக்கு வழியில இறங்கி பணம் பண்ணிடறதும் நடக்குது'' என்று வருந்துகிறார்.

''இப்போல்லாம் மக்கள் மனோபாவமும் மாறிப் போயிருக்கு. சின்னத் தலைவலின்னாகூட ஏகப்பட்ட டெஸ்ட் எடுத்துப் பார்த்துடணும்னு நெனைக்கிறாங்க. டெஸ்ட் எடுக்கற விஷயத்துல அமெரிக்கர்கள்கூட யோசிக்க ஆரம்பிச்சிட்டாங்க. ஆனா, நாமதான் சின்ன விஷயத்துக்கும் நூறு டெஸ்ட் எடுத்துக்கிட்டு உட்கார்ந்திருக்கோம்! பல வியாதிகளுக்கு பேஷன்டுகிட்டே உட்கார்ந்து பேசினாலே என்ன பிரச்னைன்னு கண்டுபிடிச்சிடலாம்; தீர்வும் சொல்லிடலாம். ஆனா, கிட்னி ஃபெயிலியர் கேஸ் மட்டும் சிக்கலானது.

ஒவ்வொரு கிட்னியிலயும் சுமார் பத்து லட்சம் நெஃப்ரான்கள் இருக்கின்றன. இந்த நெஃப்ரான்கள்தான் நம்ம உடம்போட கழிவுகள் வெளியேற்றத்தையும், சுத்திகரிப்பு வேலையையும் செஞ்சு உடம்பைக் கட்டுக்குள் வெச்சிருக்கு. ஒரு கிட்னி ஃபெயிலியரானாலும் மறு கிட்னி வேலையைக் கவனிச்சுக்கும். அதுவும் செயலிழந்து போச்சுன்னா, மனுஷன் ஏறக்குறைய நடைப்பிணம்தான். இந்தச் சமயத்துலேதான் அவனுக்கு டாக்டர்கள் அவசியமாகறாங்க.

பொதுவா, கிட்னி ஃபெயிலியர் ஆகறது டயாபடீஸ், இரத்தக் கொதிப்பு உள்ளவங்களுக்கும், அதிகமா ஆன்டிபயாடிக்ஸ், பெயின் கில்லர் மாத்திரைகள் சாப்பிடறவங்களுக்கும்தான். பிறப்பிலேயே சில குறைபாடு உள்ளவங்களுக்கும் கிட்னி ஃபெயிலியர் ஆவதுண்டு.


'மெடிக்கல் டூரிஸம்'னு சொல்லக் கூடிய, வெளிநாட்டிலிருந்து வரும் பேஷன்டுகளால பெரிய வருமானத்தை எதிர்பார்க்கிற மருத்துவமனைகளாலதான், பெரும்பாலும் இந்தச் சிறுநீரக மோசடிகள் அரங்கேற்றப்படுகின்றன. வெளிநாட்டினர் வருகையால மருத்துவமனைகளும் டாக்டர்களும் சம்பாதிச்சு, சட்டத்துக்குப் புறம்பா காசும் சேர்த்துடறாங்க.

இதனால, உள்ளூர் பேஷன்டுகளுக்கும் மருத்துவச் செலவுகள் கூடிப் போகுது. ஆக, மெடிக்கல் டூரிஸம் என்பது அவ்வளவா வரவேற்கத்தக்க விஷயமல்ல'' என்றவர்,

முறையான உடற்பயிற்சி, சரியான ஆகாரம், சுத்தமான தண்ணீர் இருந்தா போதும்! கிட்னி ஃபெயிலியர் ஆகாது. அப்புறம் திருட்டுக்கு என்ன அவசியம் வரப்போகுது!'' என்கிறார்.

''திருடனாய் பார்த்துத் திருந்தாவிட்டால், திருட்டை ஒழிக்க முடியாதுன்னு சொல்வாங்க. புனிதமான டாக்டர் தொழில்ல இருக்கற சிலர், தங்களோட கடமையை உணர்ந்துட்டா போதும். இதுபோலக் குற்றம் நடக்காது'' என்று சொல்கிறார் டாக்டர் இராஜன் ரவிச்சந்திரன்.

■ இராஜன் ரவிச்சந்திரன்



– எம்.ஆர்.இராஜேந்திரன்



* 'முரட்டுக் காளை'

ரிப்போர்ட்டர்

''எனக்குப் பதிலாக இந்த ஸ்டன்ட் காட்சியில் டூப்பாக நடிப்பவரும் மனிதர் தானே? அவருக்கு மட்டும் ரிஸ்க் இல்லையா?'' என்று ரஜினி கேட்டதும் ஒட்டு மொத்த படக்குழுவும் ஸ்டன்னாகிவிட்டோம். ரஜினியிடமிருந்து இப்படி ஒரு கேள்வியை சற்றும் எதிர்பார்க்காத நான், பதில் சொல்லத் திணறிப் போனேன். வேறு வழியில்லாமல், ரஜினியை வைத்தே 'முரட்டுக் காளை' ரயில் சண்டைக் காட்சியை எடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

எந்தவிதமான அசம்பாவிதமும் இல்லாமல் எடுக்க வேண்டும் என்று ரொம்பவே டென்ஷனாக இருந்தது. ரஜினி ரிஸ்க் எடுத்து நடித்தார். ஆங்கிலப் படங்களுக்குச் சவால்விடும் விதமாக அந்தக் காட்சியைப் படம் பிடித்தார் கேமராமேன் பாபு. அந்தச் சண்டைக் காட்சியை உருவாக்கியவர்



ஜூடோ ரத்னம். எங்கள் யூனிட்டின் ஆஸ்தான ஸ்டன்ட் மாஸ்டர். சூப்பர் சுப்பராயன், விக்ரம் தர்மா, குன்றத்தூர் பாபு போன்றோருக்கு அவர்தான் குரு. சரவணன் சாரிடம், 'இந்த சண்டைக் காட்சிக்குச் செலவு அதிகமாகும். ஒரு முழு ரயிலையே மூன்று நாட்களுக்கு வாடகைக்கு எடுக்க வேண்டியிருக்கும்' என்று சொன்னேன். ''செலவைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். அந்த ரயில் சண்டை பேசும்படி அமைய வேண்டும்'' என்று கூறிவிட்டார் அவர். சொன்னால் ஆச்சரியப்படுவீர்கள்... காட்சி மிகச் சிறப்பாக அமைந்ததோடு, பட்ஜெட்டில் கணிசமான தொகையும் மிச்சமானது.

படத்தின் இன்னொரு ஹைலைட் மஞ்சு விரட்டு. அந்தக் காலத்தில் உசுப்ரமணியம் என்று ஒரு தலைவர் காங்கிரஸில் இருந்தார். அவர்தான் மஞ்சு விரட்டுக்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்து



கொடுத்தார். பாகனேரி என்ற ஊரில் அந்த பஞ்சு விரட்டுக் காட்சிகளைப் படமாக்கினோம். அவர் குடும்பத்தினர் மட்டுமல்லாது, அந்த ஊரே எங்களுக்குப் பெரும் ஒத்துழைப்புக் கொடுத்தது.

கோவையைச் சேர்ந்த கிருஷ்ணராஜ வானவராயர் சகோதரர்கள் ஒத்துழைப்பு

ரஜினி!

நல்கிட, பொள்ளாச்சிக்குப் பக்கத்தில் 'முரட்டுக் காளை' படத்தின் ரேக்ளா ரேஸ் காட்சியைப் படம் பிடித்தோம். ரஜினியின் சகோதரர்களுள் ஒருவராக ஒய்.ஜி.மகேந்திரன், வில்லனின் கூடவே இருந்து கடைசியில் அவருக்குக் குழிபறிக்கும் ரோலில் நகைச்சுவை நடிகர் சுருளிராஜன் என்று அனைவரும் சிறப்பாக நடித்திருந்தனர். இப்படத்தில் ரஜினி பாடுவதாக வாலி எழுதிய 'பொதுவாக என் மனசு தங்கம்' பாடலை, இன்று கேட்டாலும் ரஜினியின் குணத்துக்குப் பொருத்தமாக இருக்கும். ரஜினி, ஜெய்சங்கர், ஏவி.எம்.மோடு எனக்கும் அப்படம் ஒரு திருப்புமுனையாக அமைந்தது.

இப்போதெல்லாம் படப்பிடிப்பில் கலந்துகொள்கிறபோது, நட்சத்திரங்கள் ஓய்வு எடுப்பதற்கு குளிர்சாதன வசதி செய்யப்பட்ட கேரவன்களைப் பயன்படுத்துகிறார்கள். சமையலறை உள்ளிட்ட சகல வசதிகளும் கொண்ட ஒரு பஸ், படம் நெடுக வரும்படியாக எடுக்கப்பட்ட படம்தான் 'கழுகு'. எங்களுக்குத் தேவையான மாதிரி பஸ் கிடைக்கவில்லை. எனவே, பஞ்சு அருணாசலத்தின் சகோதரர் லட்சுமணனும், ஆர்ட் டைரக்டர் பாபுவும் பெங்களூருக்குச் சென்று ஒரு பஸ்ஸை வாங்கி, அதில் தேவையான அனைத்து வசதிகளையும் உருவாக்கினார்கள். 'கழுகு' படத்தில் அந்த பஸ்கூட ஒரு கேரக்டர்தான்.

இன்றைக்குச் சாமியார்கள் பல்வேறு விதமான தவறுகளைச் செய்துவிட்டு, சட்டத்தின் முன்னே நிறுத்தப்பட்டு, தண்டனை வழங்கப்படுவது மிகவும் சாதாரணமாகிவிட்டது. ஆனால், இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னால், இந்தக் கருத்தை ஒட்டி நான் இயக்கிய படம் கழுகு. கதை, பஞ்சு அருணாசலம். ஒரு பெரிய சாமியார், அரசியல், மீடியா என்று பலவற்றையும் தன் கட்டுப்பாட்டுக்குள்ளே வைத்துக்கொண்டு, ஒரு பெரிய ராஜாங்கமே நடத்திக் கொண்டிருப்பார். அந்தச் சாமியாரின் தில்லுமுல்லுகளைப் புலனாய்வு செய்து, ஆதாரபூர்வமாக வெளிச்சத்துக்குக்கொண்டு வருவார் ஒரு பத்திரிகை நிருபர். அவர்தான் ரஜினி! அந்த நிருபருக்கு எப்படி எல்லாம் ஆபத்துகள் வருகின்றன, சமூகத்தில் ஒரு பத்திரிகையாளருக்கு எந்த அளவுக்குப் பாதுகாப்பற்ற நிலைமை இருக்கிறது என்று செல்லும் கதை. ரஜினி, அதற்கு முன்னால் ஏற்று நடிக்காத பத்திரிகைகாரர் ரோல். பஞ்சு அருணாசலம் கதை சொன்னபோதே இது மாறுபட்ட கதை கொண்ட ஒரு படமாக இருக்கும் என்று தோன்றியது.

எந்த ஒரு படம் எடுத்தாலும், படம் வெளியாகிற நாளன்று, தியேட்டருக்குப் போய், படத்தின் ஒவ்வொரு காட்சிக்கும் ரசிகர்களின் ரியாக்ஷன் என்னவென்று பார்க்க வேண்டும் என்று ஏவி.எம். கூறுவார். ஏவி.எம். பேனர் படங்களை, அப்படி தியேட்டருக்குச் சென்று ரசிகர்களோடு ரசிகர்களாக

எஸ்.பி. முத்துராமன்


அமர்ந்து பார்த்துவிட்டு வந்து, நாங்கள் கவனித்த விஷயங்களை அவரிடம் சொல்வோம். அத்துடன் விடமாட்டார். அவற்றை எல்லாம் ஒரு நோட்டுப் புத்தகத்தில் எழுதிக் கொடுங்கள் என்பார். அது போலவே, பத்திரிகைகளில் வெளிவரும் பட விமர்சனங்களையும் கத்தரித்து ஒரு ஃபைல் போடச் சொல்வார். 'நியாயமான தவறுகள், குறைபாடுகள் சுட்டிக் காட்டப்படும்போது, அவற்றை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் ஒரு டைரக்டருக்கு மிகவும் அவசியம்' என்பது அவர் எங்களுக்குக் கற்றுத்தந்த பாடம்.

விமர்சனங்களில் சுட்டிக் காட்டப்படும் குறைபாடுகளைக் குறித்து வைத்துக்கொண்டு, அந்தப் படத்தை வேறு மொழிகளில் எடுக்கிறபோது, அந்தத் தவறு மறுபடி நிகழாமல் கவனமாக இருக்கும்படிச் சொல்வார்.

பத்திரிகையாளராக ரஜினி நடித்த படம் பெரும் பரபரப்பூட்டும்; ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெறும் என்று எதிர்பார்த்த எங்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. ஒரு ஆர்ட் டைரக்டரை வைத்து அங்குலம் அங்குலமாகத் திட்டமிட்டு உருவாக்கிய அந்த பஸ் கடைசியில் என்ன ஆனது தெரியுமா?


(பயணம் தொடரும்)

எழுத்து வடிவம் : **எஸ்.சந்திரமௌலி**



"ரஜினிய என் வாழ்நாள்ல ஒரே ஒரு முறை சந்திச்சிடணும்ங்க. அது தான் என்னோட நீண்ட நாள் நிறைவேறாத ஆசை'' என்று சொல்லும் சுரேஷ்குமாருக்கு முப்பது வயது. நாகர்கோவிலைச் சேர்ந்தவர் தற்போது வசிப்பது சென்னையில்.

ரசிகர் மன்ற ராஜாக்கள்



''சூப்பர் ஸ்டாரோட படம் ஒண்ணுகூட விட்டதில்ல. காமெடி, சீரியஸ் ஆக்டிங், அடிதடி, அதிரடின்னு வித்தியாசமானவருங்க. எங்க ஊர்ல மன்றமெல்லாம் திறந்து ஒவ்வொரு பட ரிலீசப்பவும் அதகளம் பண்ணுவோம். ஆனா, தப்புத் தப்பா பாலாபிஷேகம், பீர் அபிஷேகம்னு இல்லாம ஆக்கபூர்வமா செயல்படுவோம். தலைவர் பேரைச் சொல்லி உதவிதான் பண்ணணுமே தவிர, உபத்திரவம் பண்ணக் கூடாது. பல முறை அவரைப் பார்க்க போயஸ் தோட்டம் போயிருக்கேன். ஆனா முடியாம வருத்தத்தோடுதான் திரும்பியிருக்கேன். கல்கி மூலமா இதைத் தலைவர் படிக்க நேர்ந்தா, அதுவேகூட எனக்கு அவரைப் பார்த்த திருப்தியைத் தந்துடும்'' என்று உருகும் சுரேஷ்,

''என் திருமணத்தைக்கூட தலைவர் முன்னிலையிலதான் நடத்தணும்னு ஆசை. பார்க்கலாம் கொடுப்பினை இருக்கான்னு'' என்று ரஜினி மாதிரியே மேலே இறைவனை நோக்கிக் கை காட்டுகிறார்.

- மீரா

உதைபடும் மனசு!



பாலுமகேந்திராவின் கதை நேரம் - பாலுமகேந்திரா, வம்சி புக்ஸ், 19, டி.எம். சாரோன், திருவண்ணா மலை - 1. விலை ரூ. 60.

பாலுமகேந்திராவின் கதை நேரத்தின் திரைக்கதை வடிவம் - அந்தந்த கதைகளுடன், கேமரா கண்களோடு சிறுகதையை அணுகி யிருக்கும் வித்தியாசமான முயற்சி. இயக்குநர் கனவுகளோடு இருப்பவர் களுக்கு இது அரிச்சுவடி. பிரபல எழுத்தாளர்களின் நெஞ்சைத் தொடும் படைப்புகள் நமது வாசிப்பனுபவத்தை மேம் படுத்துவதாக உள்ளன. தொடரட்டும் நல் முயற்சி.



இன்றைய இந்தியா - தா.பாண்டியன், குமரன் பதிப்ப கம், 19, கண்ண தாசன் சாலை, தி.நகர், சென்னை - 17. விலை ரூ.70

பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளிலும் நிகழும் ஏற்ற - இறக்கங்களை அலசியிருக்கி றார் ஆசிரியர். கட்டுப்பாடற்ற பொருளியல் உற்பத்தி முறை யால், வளர்ந்து வரும் நாடு களில் ஏற்படப் போகும் தீமை, பின்னடைவு ஆகியவை நடுநிலையோடு ஆராய்ந்து எழுதப் பட்டிருக்கின்றன.

வனப்பேச்சி - தமிழச்சி தங்கபாண்டி யன், உயிர்மை பதிப்பகம், 11/29, சுப்பிரமணியம் தெரு, அபிராமபுரம், சென்னை - 18. விலை ரூ.70

நம்பிக்கை தரும் கவிதைகளோடு கவனத்துக்கு வந்திருக்கிறது, தமிழச்சி தங்கபாண்டியனின் 'வனப்பேச்சி'. யக்கத் துக்கும் யதார்த்தத்துக்கும் இடையே சிக்கித் தவிக்கும் வாழ்வின் கேவலாக, ஒவ்வொரு கவிதையிலும் ஒலிக்கும் குரலைக் கேட்க முடி கிறது. திர்ப்பந்திக்கப் பட்ட வாழ்க்கையின் கால்களில் உதைபடும் மனசின் ரணங்களை யும், ஆற்றாமையை யும் ஆழமாகப் பதிவு செய்திருக்கிறார்.



இந்தியா: மர்மமும் சவாலும் - இ.எம்.ஃபார்ஸ்டர், தமிழாக்கம் : நா.தர்ம ராஜன், அம்ருதா, 5, எஸ்.எஸ், அவென்யூ, சக்தி நகர், போரூர், சென்னை - 116. விலை ரூ.120.

புகழ்பெற்ற ஆங்கில நாவ லாசிரியர் இ.எம்.ஃபார்ஸ்டரின் கடைசி நாவல். இந்தியா வந்த போது அவருக்கு ஏற்பட்ட அனுப வங்கள்தான் நாவலின் மையக் கரு. சாதாரண வாசகனும் புரிந்துகொள் ளும் மொழி பெயர்ப்பு.



- கபிலன்

மகாராஷ்ட்ராவின் புதிய அரசியல் தாதா ராஜ் தாக்கரே! சிவசேனாவின் மூத்த தலைவர் சஜ்ஜன் புஜ்பல் கட்சியைவிட்டு 1991ல் வெளியேறியபோது, கட்சிக்குள் தனது மகன் உத்தவ் தாக்கரே



மற்றும் சகோதரர் மகன் ராஜ் தாக்கரே ஆகியோரை கட்சிக்குள் கொண்டுவந்தார் பால் தாக்கரே. இடையில் உத்தவுக்கும் ராஜுக்கும் மோதல் வரவே, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சிவசேனையில் இருந்து விலகி, மகாராஷ்ட்ரா நவநிர்மாண் சேனாவைத் தொடங்கினார் ராஜ் தாக்கரே. பெரியப்பா பால் தாக்கரே, நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு எடுத்த ஆயுதத்தைக் கொஞ்சம் தூசு தட்டி எடுத்து, பளபளப்பாகக் கூர்தீட்டிப் பயன்படுத்தத் தொடங்கியிருக்கிறார். ஆயுதத்தின் பெயர், 'மராட்டியம் மராட்டியர்களுக்கே'! கொஞ்சம் புரியும்படி சொல்ல வேண்டும் என்றால், 'இது எங்க ஏரியா, உள்ள வராதே!'

பிஹாரிகளும் உத்தரபிரதேசக்காரர்களுமே ராஜ் தாக்கரேவின் பிரதான இலக்குகள். முக்கியமாக, பாலிவுட்டைக் கலக்கும் வெளிமாநில நட்சத்திரங்கள்.

சாதுக்களின் பூமியான மஹாராஷ்ட்ராவில் தேசத்தை உருக்குலைக்கும் உணர்வுகள் கொந்தளிக்கின்றன!

அவரின் நாற்காலிக் கனவுக்காகக் கிடைத்த துருப்புச் சீட்டு அமிதாப்பச்சன்.

ரணகள

எடுத்த எடுப்பிலேயே அவரைக் குறி வைத்து வார்த்தைகளை வீசினார்.

'அமிதாப்புக்கு மும்பையைவிட பிறந்த மண்ணான உத்தரபிரதேசம் மீதுதான் விசுவாசம் அதிகம். அவரை சூப்பர் ஸ்டாராக்கிய மும்பையின் நினைவு அவருக்குத் தேர்தலில் நின்றபோதுகூட வரவில்லை. அலகாபாத்தில்தான் நின்றார். மும்பைக்கு ஒன்றுமே செய்யவில்லை. கல்லூரியைக் கூட உ.பி.யில்தான் கட்டுகிறார்' என்று சீண்டினார்.

பதிலுக்கு, 'யார் இந்த ராஜ் தாக்கரே?' என்று அமிதாப்பின் மனைவி ஜெயாபச்சன் கேட்டு வைக்க, பற்றிக்கொண்டது நெருப்பு.

'பிஹாரிகள் எதற்காக சத்பூஜையை

ராஜ் தாக்கரே!

மகாராஷ்ட்ராவில் வைத்துக்கொண்டாட வேண்டும்? உ.பி.காரர்கள் அவர்களுடைய மாநிலத் தொடக்க விழாவை மும்பையில் கொண்டாடுவது முட்டாள்தனமாக இருக்கிறது. மகாராஷ்ட்ராவுக்கு வருபவர்கள் மராத்திய மொழியில் பேச வேண்டும். அதன் கலாசாரத்தை மதிக்கவில்லை என்றால் பாதிப்பைத் தவிர்க்க முடியாது.'

சீறித் தள்ளினார் ராஜ் தாக்கரே. ஆத்திரமடைந்த சமாஜ்வாதி கட்சியினர் ராஜ் தாக்கரேவை எதிர்த்துப் பேச, அடுத்த ரவுண்ட் வன்முறை அரங்கேறியது!

'மக்கள் மத்தியில் வகுப்புவாதத்தையும் பிராந்திய உணர்வையும் தூண்டிவிட்டு, வன்முறை வழியில் அரசியல் லாபம் பார்க்க நினைக்கிறார் ராஜ் தாக்கரே' என்று வெடித்தார் சமாஜ்வாதி பொதுச் செயலாளரும் அமிதாப்பின் நண்பருமான அமர்சிங்.


'இதோ வருகிறேன்' என்று எழுந்த ராஜ் தாக்கரே, பத்திரிகை ஒன்றுக்குக் கடிதம் எழுதினார்.

'ஃபிரான்ஸில் சீக்கியர்கள் டர்பன் அணிவதற்கு விதிக்கப்பட்ட தடை பற்றி, இந்தியா வந்த ஃபிரான்ஸ் அதிபரிடம் மன்மோகன்சிங் பேசுகிறார். இலங்கைத் தமிழர்களுக்காகவும் ராஜீவ்காந்தியைக் கொன்ற விடுதலைப் புலிகளுக்காகவும் தமிழ்நாட்டில் இருக்கும் பல கட்சிகள் ஆதரவுக்கரம் நீட்டுகின்றன. ஆனால், மராத்திய மக்களின் தார்மீக உணர்வுகள் பற்றி நான் பேசினால் மட்டும் ரெளடி பட்டம் கொடுக்கிறார்கள். ஆம், மராத்தியை அவமதிப்பவர்களுக்கு நான் ரெளடிதான். அவர்களை அடக்கிவிட்டுத்தான் மறுவேலை. மும்பை முதலில் மகாராஷ்ட்ராவின் தலைநகரம். இங்கு நுழைய வேண்டுமானால் மராத்தியர்களின் அனுமதி பெற வேண்டும்.'

இதுதான் கடிதத்தின் சாரம். வார்த்தைக்கு வார்த்தை அனல் பறந்தது. 'ராஜ் தாக்கரேவின் அடியாட்கள் எங்கள் மக்களின் உயிரைப் பறித்துவிடுவர் போலத் தெரிகிறது. எங்கள் உயிரைப் பாதுகாத்துக்கொள்ள மூங்கில் கொம்புகளை விநியோகிக்கப் போகிறோம்' என்று அறிவித்தார் மகாராஷ்ட்ரா மாநில சமாஜ்வாதி தலைவர் அபு ஆஸ்மி. வெகுண்டெழுந்த ராஜ் தாக்கரே, 'நான் மராத்தியர்களுக்கு வாளைக் கொடுக்க நேரிடும்' என்றார்.

ஒரு காலத்தில் உணர்வுபூர்வமாக இந்தியாவை இணைத்த சாதுக்களின் பூமி மஹாராஷ்ட்ரம்... இன்று தேசத்தை உருக்குலைக்கும் உணர்வுகள் அங்கே கொந்தளிக்கின்றன!

– சரவணன்



'தேசியமயமாக்கப்பட்ட வங்கி யொன்றில் சுருக்கெழுத்தாளராகப் பணிபுரிகிறார் டி.மணி' என்ற தகவலில் என்ன விசேஷம் இருந்துவிட முடியும்? அவர் முழுமையாகப் பார்வை இழந்தவர் என்பதுதான் அந்த விசேஷம். ஒரு வயதிலேயே பார்வை பறிபோனது. சிறப்புக் கல்விக் கூடங்களில் படித்து ஆங்கில இலக்கியத்தில் பட்டம் பெற்றிருக்கிறார்.

ப்ரெயில் முறையில் சுருக்கெழுத்து படித்த இவரால், நிமிடத்துக்கு 120



"இந்திய மொழிகளில் இப்படி ஒரு மென்பொருள் இலவசமாக அளிக்கப்படுவது பாராட்டப்பட வேண்டிய விஷயம்..."

வார்த்தைகள்வரை நோட்ஸ் எழுத முடிகிறது.


'எப்படி உங்களால டைப் செய்ய முடியுது?' என்று கேட்பவர்களைப் பார்த்து மணி மனத்துக்குள் நகைத்ததுண்டு. ஏனென்றால், கீபோர்டைப் பார்க்காமல் டைப் செய்வதுதான் எந்தச் சிறந்த டைப்பிஸ்டுக்கும் முதல் தகுதி!

எப்படியோ ஒருவழியாக பணியில் செட்டில் ஆகிவிட்ட மணி, ஒரு பெரிய அதிர்ச்சியைச் சந்திக்க வேண்டி வந்தது. அலுவலகத்தில் எங்கும் கணினி, எதிலும் கணினி என்ற மாற்றம் வந்துவிட, தட்டச்சு இயந்திரத்துக்கு டாட்டா காட்டப்பட்டது.

"1994ல் கணினி இங்கு அறிமுகமான போது விண்டோஸ் சிஸ்டம் கிடையாது. டாஸ் (DOS)தான். எனினும், முடிந்தவரை கணினிப் பயிற்சியைக் கற்றுக்கொண்டேன். கணினி மாற்றத்துக்குத் தயாராகாத பல ஊழியர்களுக்கு என்னைத்தான் உதாரணம் காட்டி உற்சாகப்படுத்தினார்கள்.

ஆனால், இந்திய மொழிகளில் என்னைப் போன்றவர்கள் கணினியைப் பயன்படுத்த முடியாத நிலை. ஒரு கடிதம் எழுத வேண்டும் என்றால்கூட யாருடைய உதவியாவது தேவைப்படும். ப்ரெயில் முறையில் கணினியில் தகவலைச் செலுத்தினாலும் அதைப் பிறரால் படிக்க முடியாதே!

இந்தச் சமயத்தில் ஐ.ஐ.டி.யில் உருவான மென்பொருள் எனக்கு மிகவும் உதவியாக இருந்து வருகிறது. இப்போது என்னால் தமிழிலும் கணினியை இயக்க முடிகிறது. என்னைப்போன்ற பார்வைக் குறைபாடு கொண்ட மற்றொரு பெண்மணிக்கு எம்.ஏ. தேர்வுக்காக நான் உதவுகிறேன். டெல்லியில் உள்ள எழுத்தாளரின் நாவல் ஒன்றை தமிழ், ஆங்கிலம் என்று மாறிமாறி மொழிபெயர்க்கிறோம். இதற்கு மேற்படி மென்பொருள் உதவுகிறது. எனக்கு சைவ சித்தாந்தப் பதிகங்களை மொழிபெயர்க்கவும் ஆசை. அதற்கும் இந்த மென்பொருள் நிச்சயம் உதவும். ஃபார்மெட்டிங் வசதிக்கு மட்டும் எம்.எஸ். வேர்டைத்தான் பயன்படுத்த வேண்டியிருக்கிறது. இதையும் கொண்டுவர முடிந்



ரானியும்
அதே தமிழ் ஃபான்டை டவுன்லோட் செய்து வைத்திருந்தால் போதுமே' எனலாம். ஆனால், இதற்கு அவர் மெனக்கெடத் தயாராக இருக்க வேண்டுமே. தவிர, அதே தமிழ் ஃபான்ட் அடங்கிய மென்பொருள் இலவசமாகக் கிடைக்கும் என்பதும் நிச்சயமில்லை.

இந்தச் சிக்கலின்றி ஒரே ஒரு மென்பொருள் மூலம் உலகின் எந்த வகை கணினிகளிலும் தமிழைப் படிக்க முடிந்தால்? தமிழ் என்றில்லாமல் எந்த இந்திய

ஆதரவு தருமா அரசு?

தால் மேலும் சிறப்பாக இருக்கும். என்றாலும் இந்திய மொழிகளில் இப்படி ஒரு முதல் முயற்சி, அதுவும் இலவசமாக அளிக்கப்படுகிறது எனும் கோணத்தில் இதை மிகவும் பாராட்ட வேண்டும்'' என்கிறார்.

அந்தப் புதிய மென்பொருள்தான் என்ன? அதை அறிந்துகொள்வதற்கு முன், வேறு சில அடிப்படை விஷயங்களை நினைவுகூர்வது பொருத்தமாக இருக்கும்.

கணினியில் ஆங்கிலத்துக்கு இருக்கும் ஒரு வசதி தமிழ் உட்பட வேறு எந்த இந்திய மொழிக்கும் இல்லை. ஆங்கிலத்தில் உங்களிடம் இருக்கும் ஒரு ஃபான்டில், ஒரு தகவலை கணினியில் பதிவு செய்து இ-மெயிலில் யாருக்காவது அனுப்பினால், எந்தச் சிக்கலுமின்றி அவரால் அதைப் பார்க்க முடியும். ஆனால், நம்மிடம் உள்ள தமிழ் ஃபான்டைக் கொண்டு ஒரு தகவலை அனுப்பினால், தகவல் பெறுபவரின் கணினித் திரையில் அது ஏதோ கிரேக்க எழுத்துபோலத் தோற்றம் அளித்துக் குழம்ப வைக்கும். 'அதனாலென்ன, எதி

மொழியையும் படிக்க முடிந்தால்...? 'முடிந்தால்?' என்ன... முடியும் என்று சாதித்துக் காட்டியிருக்கின்றனர் சென்னை ஐ.ஐ.டி. கணினித் துறைப் பேராசிரியர் கல்யாணகிருஷ்ணனின் மாணவர்கள் - அதுவும் 1991-லேயே! உலகிலேயே முதல்முறையாக உச்சரிப்பை அடிப்படையாகக் கொண்ட இந்திய மொழிகளுக்கான கணினி திட்டம் இது.

பிறகென்ன, பிரபல கணினி நிறுவனங்கள் போட்டி போட்டுக்கொண்டு இதன் உரிமையைப் பெற முன்வந்து இருப்பார்களே?

''அங்கேதான் சிக்கல். சமஸ்கிருதத்தை அடிப்படையாகக்கொண்டு இந்தியப் பின்னணியில் யோசித்து இதை வடிவமைத்திருக்கிறேன். வழக்கமான வழிமுறைகளைப் பின்பற்றித்தான் எனது கண்டுபிடிப்பு இருக்க வேண்டும் என்கின்றன பெரும் கணினி நிறுவனங்கள். ஆனால், வழக்கமான வடிவங்களில்



பார்வையற்றோ ருக்கான கல்வி முறையில் பெரும் புரட்சி நிகழ்த்த முடியும்...

– கல்யாணகிருஷ்ணன்

சில குறைபாடுகள் உண்டு. உதாரணமாக, இன்டர்நெட் எக்ஸ்புளோரர் என்பதை இங்கு மிகவும் அடிப்படையான மென் பொருளாகக் கருதுகிறோம். ஆனால், அதிலேயே புதிய, மேம்பட்ட தொழில் நுட்பம் அறிமுகமாகும்போது, பழைய தில் நமக்கிருந்த சில மென் பொருளைப் பயன்படுத்த முடியாமல் போகலாம்.

தவிர, ஐ.ஐ.டி.யில் பல வருடங்களாக ஆசிரியரா கப் பணிபுரிந்து வரும் என் னுடைய கண்டுபிடிப்பு எந்த வணிக நோக்கமும் இல்லாதது. இலவசமாகவே நம் நாட்டு மக்களுக்கு இது பயன்பட வேண்டும் என்று எண்ணு கிறேன்'' என்ற கல்யாண கிருஷ்ணன், ' தங்களது கண்டுபிடிப்பை இயக்கிக் காண்பித்தார்.

'கல்கி' என்று தமிழில் எழுதி 'ஆங்கிலத்தில்' என்ற இடத்தில் க்ளிக் செய்தால், உடனே கல்கி என்பது நொடியில் KALKI என்றாகிறது. இப்படியே ஹிந்தியில், வங் காளத்தில் என்று பல மொழிகளில் அடுத்தடுத்து உத்தரவு கொடுக்க, அந்தந்த மொழிகளில் கல்கி என்ற சொல் திரையில் தோன்றுகிறது. மொழியின் ஒலி வடிவத்தை (phonetics) அடிப்படையாகக்கொண்டு தயாரிக்கப் பட்டதால் இது சாத்தியமாகியிருக்கிறது. இதே மென்பொருளைக் கொண்டு ப்ரெயில் எழுத்துகளிலும் மொழி மாற்றிக் கொள்ளலாம்!

ப்ரெயில் என்பது பார்வை இழந்தவர் களுக்கான ஒரு மொழி. இதில் எழுத்துகள் மேடும் பள்ளமுமாக இருக்கும். அவற்றைத் தடவிப் பார்த்து வார்த்தைகளை அறிய முடி . யும். ஆனால், கணினியில் எப்படி ப்ரெயில் மொழியில் வாசித்தறிய முடியும்?

''இதற்கென்றே தனியான பிரிண்டர் இருக் கிறது. அதில் உள்ள தாள்களில் மேடு பள்ளங் களும் உண்டாவதால், பார்வையற்றோரும் இதைப் படிப்பதில் எந்தச் சிக்கலும் இல்லை'' என்கிறார் டாக்டர் கல்யாணகிருஷ்ணன்.

''பார்வை இழந்தவர்கள் கணினியில் கீபோர்டுகளை இயக்கும்போது தவறுதலான கீயை அழுத்தினாலும் கண்டுபிடிக்க வசதி செய்துள்ளோம். ஒவ்வொரு எழுத்தையும் டைப் செய்யச் செய்ய, இந்த மென்பொருளின் துணையுடன் கம்ப்யூட்டரே உடனுக்குடன் அதை வாசித்துக் காட்டுகிறது! சொற்கள் உருவாக உருவாக அவற்றை உச்சரித்தும் காட்டுகிறது! இந்த மென்பொருளை இன்னும் மெருகேற்றி வருகிறோம்.''

'அரசு மட்டும் காப்புரிமை சட்டத்திலிருந்து விலக்களித்து ஆதரவளித்தால், பார்வையற்றோரின் கல்வி முறையில் மிகப்பெரிய புரட்சி நிகழ்த்த முடியும். கணினியே பாடங்களைப் படித்துக் காட்டும். பள்ளியின் பாட நூல்களைக்கூட ப்ரெயில் முறையில், எங்களது மேற்படி மென்பொருள் மூலம், மாற்றி அளிக்க முடியும்' என்று கருதும் கல்யாணகிருஷ்ணன், ''ஆன் லைன் பத்திரிகை களையும் பார்வையிழந்தவர்களால் படிக்க முடியும். பிறர் உதவியின்றி அவர்களால் வலைத்தளங்களின் மூலமாகப் 'படிக்க' முடிகிறபோது அவர்களுக்கு பட்டறிவும் தன்னம்பிக்கையும் அதிகமாகும். அதற்கு எங்களது முயற்சி உதவும்'' என்கிறார்.

– **ஜி.எஸ்.எஸ்.**

படம் : **ஸ்ரீஹரி**

தராசு

● எம்.ஏழுமலை, குடியாத்தம்

? பொருளாதார சுதந்திரம் இல்லாத அரசியல் சுதந்திரத்தால் பலன் இல்லை என்கிறாரே, யெச்சூரி?

! அரசியல் சுதந்திரம் என்பதே அடிப்படை. அதனைச் சரியாகப் பயன்படுத்தினால் பொருளாதார சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் போன்றவை சிறப்பாகக் கைகூடும்.

● லெ.நா.சிவகுமார், சென்னை-33

? பெனசிர் புட்டோ படுகொலை தொடர்பாக பிரிட்டனின் ஸ்காட்லாந்து யார்ட் போலீஸ் சமர்ப்பித்துள்ள அறிக்கை நம்பகமானது என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது பற்றி...?

! முஷாரஃப் திரித்த கயிறுக்கு, 'யார்டு' வேலி சாட்சி; 'யார்டு' வேலிக்கு அமெரிக்க ஓணான் சாட்சி!

● கே.வி.ராமன், சென்னை - 73

? 'அருணாசல பிரதேசம் இந்தியாவைச் சேர்ந்தது; பிரதமர், இந்தியாவைச் சேர்ந்த எந்த மாநிலத்துக்கும் செல்லலாம்...' என்று பிரணாப் முகர்ஜி சீனாவுக்கு விளக்கம் அளித்துள்ளாரே?

! இந்தியப் பிரதமர் அருணாசல பிரதேசத்துக்குச் சென்று, வளர்ச்சித் திட்டங்கள் அறிவித்தபோது, சீனா தரப்பில் அதற்கு எழுந்த ஆட்சேபணைகளுக்கு பிரணாப் முகர்ஜி இவ்வாறு விளக்கம் அளிக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகியிருப்பது தேசிய அவமானம். இத்தகையவர்களுடன் பேச்சுவார்த்தைகள், உடன்பாடு என்பது மானக்கேடு!

● ஆர்.விஸ்வநாதன், சென்னை - 1


? ஐ.டி. நிறுவனங்கள் ஆட்குறைப்பு செய்யத் தொடங்கக் காரணம் என்ன..?

! அமெரிக்க டாலர் மதிப்பின் வீழ்ச்சி; மென்பொருள் உற்பத்தியில் சீனாவின் வளர்ச்சியால் எழுந்துள்ள போட்டி.

● ஜி.சுந்தரராஜன், சென்னை - 42

? சென்னை மாநகராட்சி 28வது வார்டில் துப்புரவு பணியாளர்கள் பணிக்கு வராததை, வந்ததாகக் காட்டி

பா.விஜய் இப்படிப் பேசலாமா?



(முன்பு நடந்த மஸ்டர் ரோல் ஊழல் போல) சம்பளம் பெறப்பட்ட விஷயத்தை தினமணி செய்தி மூலம் அறிந்து, அவர்களைப் பணிநீக்கம் செய்துள்ளதே மாநகராட்சி நிர்வாகம்?

! தினமணியின் ரோல் வாழ்க!

● இரா.சக்கரபாணி, மதுரை - 7

? நாம் கலந்துகொள்கிற திருமண விழாக்களில், தொண்டர்கள் அணி வகுப்பு மரியாதை அளிக்க வேண்டும் என்று முதல்வர் கூறியுள்ளது பற்றி...?

! இப்படி ஒரு வகை விளம்பரத்துக்கு யோசனை சொல்லிவிட்டு, ஸ்டாலின், அழகிரி பிறந்த நாளையொட்டி ஆடம்பர விளம்பரங்கள் வேண்டாம் என்றும் சொல்கிறார்!

● எஸ்.சண்முகம், திருவண்ணாமலை

? 'மதுரையில் நடப்பவை இரண்டே விழாக்கள் - ஒன்று அழகர் ஆற்றில் இறங்கும் விழா; மற்றது அண்ணன் அழகிரி களத்தில் இறங்கும் விழா' என பா.விஜய் பேசியிருப்பது பற்றி...?

! திருவிழாவையும் தெருவிழாவையும் ஒன்றாகப் பார்க்கும் பா.விஜய்யின் கௌரவம் விழுந்துவிட்டதே!

● வே.சித்ரா, கும்மிடிப்பூண்டி

? தி.மு.க. அரசை எதிர்த்து, பா.ம.க., காங்கிரஸ் போன்ற கூட்டணி கட்சிகளே வெளிநடப்புச் செய்தது எதைக் காட்டுகிறது...?

! தி.மு.க. மைனாரிட்டி ஆட்சி அமைத்தது தவறு எனினும், ஜனநாயகம் கொஞ்சமாவது பாக்கி இருக்கிறது. தி.மு.க. செயல்பாடு திருப்தி அளிக்கவில்லை. சப்போதும், எல்லாவற்றுக்கும் 'ஆமாம் சாமி' போட முடியாதல்லவா!

● வரத சண்முகசுந்தர வடிவேலு, வாழப்பாடி

? டாக்டர் பிரகாஷுக்கு வழங்கப்பட்ட வாழ்நாள் தண்டனை போதுமானது தானா?

! போதுமான தண்டனை என்கிற போதும், மிகத் தாமதமாக, பல வருடங்கள் கழித்து வந்துள்ளது! பரோலில் வந்துவிடாமல் உறுதியாக இருக்க வேண்டும்.

● அ.அப்துல் காதர், சென்னை - 45

? பெண்கள் சபரிமலைக்குச் செல்ல கேரள அரசு அனுமதி அளித்துள்ளதே?

! காலத்துக்கேற்ற, சிறந்த முடிவு. கூட்டத்தில் இடிபடாதிருக்க அவர்களுக்குத் தனியே ஒரு காலகட்டத்தை நிர்ணயிக்கும் யோசனையும் நல்லதுதான்.

● எம்.சம்பத், வேலாயுதம்பாளையம்

? கர்நாடக வனப் பகுதிகளில் தேச விரோத கும்பல், பாகிஸ்தான் ஆதரவு தீவிரவாதிகளுக்குப் பயிற்சி முகாம் நடத்தியிருப்பது பற்றி...?

! ஆச்சர்யமில்லை. அவர்கள் கண்டு பிடிக்கப்பட்டதுதான் வியப்பு! பயங்கரவாதிகள் விஷயத்தில் அவ்வளவு அசிரத்தையாக இருக்கின்றன மத்திய-மாநில அரசுகள். இது போராட்டமல்ல; போர் என்று உணர்தல் வேண்டும்.

● ஆர்.கோபாலன், சென்னை-33 ★

? இருட்டிய மாணவனிடமிருந்து உண்

● வேலை வாய்ப்பு யோசனை





● ஜனநாயகச் சாட்சி!

❑ ரூ.100 பரிசு பெறுபவர் :
ச.நாகரத்தினம், திருப்பூர்

★ ரூ.50 பரிசு பெறுபவர் :
ஆர்.கோபாலன், சென்னை - 33

● 'சுதந்திர'ச் சிந்தனை!



● வெட்கக்கேடு



விளக்கம்!

● பற்றற்ற உயர்நிலை



மையை வரவழைப்பதற்காக, தன்னைத் தானே பிரம்பால் அடித்துக்கொண்ட ஆசிரியர் செய்தது சரியா?

! இது ஏற்கக்கூடிய நல்ல முறையல்ல; தவறான வழிகாட்டலே. சரியான மார்க்கத்தை, திருவாரூர் பாபு எழுதிய கதை உணர்த்தும் (கல்கி 17.2.2008).

● தொ முருகானந்தம், திருவைகாவூர்

? 'ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழிற்சாலைகள் தொடங்கப்படும்' என்ற முதல்வரின் அறிவிப்பு இளைஞர்களுக்குப் பயனுள்ளதாய் இருக்குமா?

! வரிப் பணத்திலிருந்து இலவசங்களையும் மானியங்களையும் வாரி விடுவதைவிட, வேலைவாய்ப்புகளைப் பெருக்குவது நிரந்தரப் பயன் தரும். நஷ்டமின்றி நடக்க ஏற்றவாறு திட்டமிட்டுச் செயல்படுத்த வேண்டும்.

● என்.சண்முகம், சேலம் - 1

? நடிகைகள்தாம் தற்கொலை செய்து கொள்கிறார்கள் என்றால், இப்போது நடிகருமா? குணால் தற்கொலை செய்து கொண்டது பற்றி..?

! ஆண் - பெண் சமத்துவம் விபரீத எல்லைகளில் சஞ்சரிக்கிறது.

● சி.மகேஷ், திருச்சி - 17

? மகரிஷி மகேஷ் யோகி...?

! ''மகரிஷி போன்ற ஓர் ஆழ்ந்த மனிதரை நான் பார்த்ததே இல்லை. சாதனைகள் ஒரு புறமிருக்க, அவர் நாள் முழுவதும் ஓய்வின்றி சின்னச் சின்னக் காரியங்களில்கூட தம்மை ஈடுபடுத்திக் கொண்டாலும், பற்றற்ற நிலையிலேயே இருந்து வந்தார். புகழ்ச்சியையும் இகழ்ச்சியையும் பொருட்படுத்திக்கொண்டதே இல்லை. அவரைக் குறை கூறியவர்களிடம்கூட அன்போடு இருந்தார்'' - இதைச் சொன்னவர், மஹரிஷியிடம் சிறிது காலம் பயிற்சி பெற்ற ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்.

● கே.கணேசன், மறைமலை நகர்


? 'சில ஐ.பி.எஸ். அதிகாரிகள், மாவட்ட காவல்துறை அதிகாரிகள் அரசாணையை மீறி தமிழில் கையெழுத்துப் போடாமல் இருக்கின்றனர். இனி எந்தக் கோப்பிலும் தமிழில்தான் கையெழுத்துப்போட வேண்டும். மீறினால், கடும் நடவடிக்கை' என்று டி.ஜி.பி. அறிவித்துள்ளாரே?

! கையெழுத்துத் தமிழில் இருந்துவிட்டுப் போகட்டும்; நம் தலையெழுத்தை நிர்ணயிக்கும் அரசு உத்தரவுகளை, அதிகாரிகள் தங்களுக்கு நன்கு தெரிந்த பாஷையில் எழுதுவதே நல்லது!

● ச.நாகரத்தினம், திருப்பூர் □

? யானைகள் ரயிலில் அடிபட்டு இறந்து போகும் கொடூரம் இனி நடவாமல் இருக்க என்ன செய்ய வேண்டும்?

! வனங்களை அழிப்பதை நிறுத்த வேண்டும்; அழிக்கப்பட்ட வனப் பிரதேசங்களில் காடு வளர்க்க வேண்டும். இதற்கிடையில் தாற்காலிகமாக, யானை நடமாட்டங்களை உணர்ந்தறியக்கூடிய நிபுணர்கள் உதவியுடன் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். ●



● ‘திருமகள்’ தொடரில்...

கொஞ்சம் அழுகை...

கலைஞர் டி.வி.யில் திங்கள் டு வெள்ளி ஒளிபரப்பாகும் ‘திருமகள்’ சீரியல் பற்றி சில திருமதிகளை விமர்சிக்கச் சொன்னோம். விளாசித் தள்ளிவிட்டார்கள்.

எம்.கமதி: சித்தாரா ஒரு நல்ல ஆர்ட்டிஸ்ட். அவங்க நடிச்ச பல படங்களை நான் விரும்பிப் பார்த்திருக்கேன். இப்போ முதல் முறையா சின்னத் திரையில பார்க்கறப்போ ரொம்ப சந்தோஷமா இருக்கு. சீரியல் பெயருக்கேத்த மாதிரி அவங்க திருமகள்தான். அளவான, அழகான பெர்ஃபார்மென்ஸ். சதா அழுதுக்கிட்டே இல்லாம ஸ்போர்டிவான கேரக்டர். ஒவ்வொரு எபிசோட் முடிவுலயும் வைக்கப்படுற குட்டி சஸ்பென்ஸ் க்யூட்டா இருக்கு. குடும்பக் கதையா ஆரம்பிச்சு, தொழில், போட்டி, சண்டைன்னு மெல்ல மெல்ல கிளை பரப்பிக்கிட்டே போறாங்க. வசனங்கள் இன்னும் கொஞ்சம் ஷார்ப்பா இருக்கலாம். முடிஞ்சா சில இடங்கள்ல டயலாக்கே இல்லாம வெறும் காட்சியோடகூட விட்டுடலாம், இன்னும் அழகா இருக்கும்.

ரொம்ப நாள் இழுக்காம, ஷார்ப்பா எங்க கதை முடியுதோ அங்க முடிச்சிடணும். பாகம் 2, இல்ல வேற பேர்ல திருமகளைத் தொடர்ற பிசினஸெல்லாம் வேண்டாம். பதிலா, இதே டீம் வேறொரு புது சீரியலை ஆரம்பிக்கலாம்.

கிருஷ்ணகுமாரி: ‘திருமகள்’ சீரியலைத் தொடர்ச்சியா பார்க்க மாட்டேன். நேரம் கிடைச்சா உட்காராம இருக்க மாட்டேன். சித்தாரா நல்லா பண்றாங்க. மனோரமா ஆச்சி கேரக்டர் அசத்தல். காமெடி கம்மியாயிருக்கு. கொஞ்சம் கூட்டலாம். குடும்ப சீரியல்ல காமெடி கேக்கறானேன்னு சொல்லக்கூடாது. ஒரு சினிமான்னா காமெடி, செண்டிமெண்ட், ஆக்‌ஷன்னு எல்லாம் கலந்து கட்டித்தானே தர்றீங்க..! சீரியல் மட்டும் என்ன, அழுகைக்கு சாசனம் எழுதிக் கொடுத்திருக்கா? மணிவண்ணனும் இதுல இருக்கார். அவரைக் கொண்டு முயற்சி பண்ணலாம்.

சில நேரங்கள்ல ஒரே காட்சியை ரொம்ப நேரம் இழுத்துட்டுப் போறதைத் தவிர்க்கலாம். காதலையும் ரம்யமா சொல்லலாம். ஆபாவாணன் சீரியல்ல அதிர்ச்சி, சஸ்பென்ஸை ரொம்ப எதிர்பார்க்கறோம். அதுக்காக பேய், பில்லி சூன்யம்னு போயிடாம, குடும்பச் சூழல்லயே தேவையான விஷயங்களை சரியான அளவுல கொடுத்தா ரசிப்போம்.

கொஞ்சம் சிரிப்பு!

வேதா: ரெகுலரா பார்த்துட்டு வர்றேன். ரொம்பவும் மனசைத் தொடல. ரொம்ப மோசமாவும் இல்ல. சித்தாரா கொஞ்சம் அழுகை, கொஞ்சம் சிரிப்புன்னு கலந்து கட்டித் தர்றாங்க. வில்லியா வர்ற பல்லவி, வசனங்களைவிட முகபாவனைகள்ல வில்லித்தனம் செய்யலாம். மணிவண்ணன், மனோரமா ஆச்சி போன்றோர்கிட்டருந்து முதிர்ச்சியான நடிப்பு வெளிப்படுது. இன்னும்கூட கதைல யதார்த்தத்தைக் கொண்டு வரலாம். அப்பப்போ ஒரு எபிசோட் முழுக்க ஒரே ஷாட், திடீர்னு ஒரு பாட்டுன்னு ஏதாச்சும் வித்தியாசமா பண்ணலாம். சலிப்பு ஏற்படுத்தும்படியான காட்சிகளைத் தவிர்க்கணும். நடந்து வர்றதையே நாலு நிமிஷத்துக்குக் காட்டுறது, ஃபேன் சுத்தறதையே ரொம்ப நேரம் உத்துப் பார்த்து யோசிக்கறதுன்னு பொறுமையைச் சோதிக்கக் கூடாது.

ஜெயந்தி: டியூஷன் முடிச்சுட்டு வர்ற என் பசங்களும்கூட திருமகள் பார்க்கறாங்க. அவங்களுக்கும் பிடிச்சிருக்கு. சித்தாரா வாழ்க்கை எப்படி அமையப் போகுது, என்னவெல்லாம் சிக்கல்களைச் சந்திக்கப் போறாங்கன்னு பார்க்க ஆவலா இருக்கு. இதை அப்படியே மெயின்டெய்ன் பண்ணணும். அப்பப்போ போரடிக்கிற மாதிரி காட்சிகளும் இடம் பெறுது. அதைத் தவிர்க்கணும். ஒரே கதையச் சொல்லாம, நாவல் படிக்கறா மாதிரி இரு வேறு கதை சொல்லி, முடிவுல ரெண்டையும் இணைக்கற உத்தி மாதிரி பண்ணலாம். இன்னும் கொஞ்சம் சஸ்பென்ஸ் கூட்டணும். ஒவ்வொரு எபிசோட்லயும் ஏதாச்சும் ஒரு அதிரடி கட்டாயம் இருக்கணும். இருந்தாத்தான் ஆவல் அதிகரிக்கும். திருமகள்ல நடுநடுவுல இது மிஸ்ஸாயிடுது.

பின்னணி இசை பத்தியெல்லாம் சீரியல்ல யாரும் கவலைப் படறதில்ல. ஆனா, அதுதான் ஒரு காட்சியை பளீர்னு மனசுல அறையற மாதிரி பதிய வைக்கும். இந்த சீரியல்ல ரீரிக்கார்டிங் இன்னும் பெட்டரா இருக்கணும். திரைக்கதை வேகமா இருக்கு. குடும்பம் சம்பந்தமான காட்சிகளே தொடர்ந்து வராமப் பார்த்துக்கணும். வெவ்வேறு லொகேஷன் ரொம்ப முக்கியம். அப்பத்தான் கண்ணுக்குச் சலிப்பு வராது.


தொகுப்பு: **மதுமிதா**


● சுமதி


● ஜெயந்தி


● கிருஷ்ணகுமாரி


● வேதா


ஸ்ரீ சிவகாமி அம்மன்,
அத்திப்புலியூர்.

புண்ணிய பூமியில் கலந்தவள்!

தென் திசை நோக்கி அகத்தியர் வந்த போது, விந்தியம் ஆணவத்தோடு தலை தூக்கி நின்றது; அவர் அதைத் தமது காலால் அப்படியே ஓர் அழுத்து அழுத்தினார். உடனே அது கீழே போய்விட்டது. ''எனக்கு எப்போது விமோசனம்?'' என்று கேட்டது. ''கவலையே படாதே! என்றைக்குத் திரும்பி இந்த வழியே வருகிறேனோ, அன்றைக்கு உன்னை மேலே தூக்கிவிட்டுவிட்டுப் போவேன்'' என்றார். ஆனால், அவர் இன்னமும் திரும்பி வரவேயில்லை. தென் திசையில் கல்யாண தீர்த்தத்திலேயே இருக்கிறார் என்று கணக்கு.

இந்த விந்திய மலையில் அம்பாள் வாசம் செய்கிறாள். **விந்தியாசல நிவாஸினி** என்றால், மலையிலே இருப்பவள் என்று மட்டும் பொருள் அல்ல. விந்தியம் என்றால் உயரம். உயரத்தில் இருக்கக்கூடியவள். அண்ட பிரம்மாண்டத்தில் உள்ள எல்லாவற்றையும்விட உயரமாக இருக்கக்கூடியவள்; உயர்ந்த ஸ்தானத்தில் இருக்கக்கூடியவள்; உயர்ந்த கீர்த்தி படைத்தவள் **விந்தியாசல நிவாஸினி.**

- இப்படி இருக்கக்கூடியவள்தான் **வேத ஜனனியாகவும்** இருக்கிறாள். **விஷ்ணு மாயாவாக** இருக்கிறாள்.

மறுபடியும் விஷ்ணு! மாயையையும் கொடுத்து, அதே சமயத்தில் காப்பாற்றவும் வேண்டும்! உலகை நடத்துவதென்றால் மாயை அவசியம். ஜீவன்களுக்கு மாயை இல்லையென்றால், உலகிலே சராசரி விஷயங்கள் நடக்காது. சராசரி விஷயங்களை நடத்தினால்தான் உலகத்தைக் காப்பாற்றவும் முடியும்! ஆகவே, மாயையைத் தரவேண்டிய அவசியமும் இருக்கிறது.

இந்த விஷ்ணு மாயா, விஷ்ணுவினிடத்திலிருந்து வருவதாகக் கணக்கு. அதே விஷ்ணுவின் ஸ்வரூபமாக அம்பாள் இருப்பதால், விஷ்ணுமாயாவாக அவளே இருக்கிறாள்.

விலாஸினி - அனைத்து குணங்களின் விலாஸமாக இருக்கிறாள்.

க்ஷேத்ர ஸ்வரூபா - க்ஷேத்திரங்களின் ஸ்வரூபமாக இருக்கக்கூடியவள். அம்பாளின் நாடுதான் அகண்ட பாரத தேசம். மஹாகவி பாரதி, பெரிய அம்பாள் உபாஸகர். அவர் பாடுகிறபோது, 'இந்த நாட்டை நான் எப்படி வாழ்த்த வேண்டும் தெரியுமா?' என்றார். 'சேதமில்லாத ஹிந்துஸ்தானம் - அதை தெய்வமென்று கும்பிடடி பாப்பா' என்று பாடினார்.

நம் நாடு தெய்வத்திரு நாடு. ஆனால், சாதாரணமாக, எல்லா நாட்டினரும் நினைக்கிற மாதிரியான தெய்வநிலை அல்ல இது; அதைவிட உயர்ந்த ஒரு நிலை. இந்த நாட்டைப் பற்றி நாம் பெருமைப்பட வேண்டும் என்பதற்காகச் சில விஷயங்களைச் சொன்னார் பாரதியார்: 'இது எப்படிப்பட்ட நாடு தெரியுமா? எங்கள் அப்பா - அம்மா வாழ்ந்த நாடு!'

நம் வீடுகளிலேயேகூட சாதாரணமாக என்ன சொல்லுகிறோம் - 'இது எங்க அப்பா - அம்மா பயன்படுத்திய சோஃபா அல்லது கட்டில்' என்கிறோம். 'எங்க அம்மா வைத்துவிட்டுப் போன குடம்' என்கிறோம்! இப்படி அப்பா - அம்மா தொடர்புடைய சின்ன விஷயங்களையே நாம் இவ்வளவு கொண்டாடுகிறபோது, அவர்கள் வாழ்ந்த நாடு குறித்து எப்பேர்ப்பட்ட உணர்வு நமக்கு இருக்க வேண்டும்! அதைத்தான் 'எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே' என்றார் பாரதி.

எங்கள் அப்பா - அம்மா மட்டும் அல்ல; அவர்களுக்கு

முன் இருந்த முன்னோர்கள் - எத்தனை பரம்பரைகளை நீங்கள் சொன்னாலும் சரி, ஏழு பரம்பரைகளானாலும் சரி, 49 பரம்பரைகள் ஆன போதிலும் சரி, எத்தனை தலைமுறை? யார் முன்னோர்? என்பது தெரியாதவரானாலும் சரி... சிலருக்குத் தங்கள் மூத்த முந்தைய தலைமுறையினர் பற்றித் தெரியாமல்கூட இருக்கும் - எப்படியிருந்தாலும் சரி, அவர்கள் அனைவரும் வாழ்ந்த நாடு இது -

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே - அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே - அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
செழித்ததும் இந்நாடே....

எங்கள் முன்னோர்கள் வாழ்ந்து முடிந்த இந்த நாட்டில்தான் அவர்களுடைய சிந்தனை செழித்தது. அவர்கள் வாழ்ந்ததுகூட பெரிதல்ல; அவர்களுடைய சிந்தனையில் எத்தனை எண்ணங்கள் உதித்தன! அந்தச் சிந்தனைகளெல்லாம் தோன்றிய மண் இந்த மண்! 'இந்த மண்ணுக்கு வந்தனை கூறி மனதில் இருத்தி என் வாயுற வாழ்த்தேனோ' என்கிறார் பாரதியார்.

வந்தே மாதரத்தின் வேர்

இந்த 'வந்தே மாதரம்' என்கிற வணக்கம் எங்கிருந்து வந்தது என்றால், 'வந்தே மாதரம் அம்பிகாம் பகவதி' என்று சௌந்தர்ய லஹரியிலே ஆரம்பித்து வைத்தாரே ஆதி சங்கரர், அங்கேயிருந்து வந்த 'வந்தே மாதரம்'தான். அங்கேயிருந்து ஆனந்த மடத்துக்குப் போய் இப்படி சுதந்திர இயக்கத்துக்குள் வந்தது.

இந்த நாடுதான் என்னுடைய தாய்நாடு என்று பாரதி நினைத்ததற்கு ஒரு காரணம் உண்டு - பாரதிக்கு இந்நாட்டின் மரபும் பாரம்பரியமும் புராணங்களும் நன்றாகத் தெரியும். அதில் ஆழங்கால் பட்டவர். இந்த அகண்ட பாரத தேசம் அம்பாளுடைய பிரதேசம்!

ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமத்தில், பின்னால் ஒரு திருநாமம் வரும் - ஜாலந்தர ரூபமாக அவள் இருக்கிறாள் என்று. அம்பாளுக்கு நாமாவளி சொல்கிறபோது, ஜாலந்தராயை நம: என்று வரும்; நேபாளாயை நம:, காஷ்மீராயை நம: என்றெல்லாம் வரும்.

ஜலந்தர் என்று ஒரு ஊர் இருக்கிறது. அந்தப் பகுதி எப்படி வந்தது என்றால், ஜாலந்தராயையாக இருக்கக்கூடியவளின் ஊர் அது.

சண்டிகர், சண்டிகா தேவியினுடைய ஊர். சிம்லா, சியாமளா தேவியினுடைய ஊர்; சென்னை, சென்னம்மா தேவியினுடைய ஊர்; கல்கத்தா, காளி தேவியினுடைய ஊர்; பாட்னா, படன் தேவியினுடைய ஊர்.

சண்டிகர், சண்டிகா தேவியினுடைய ஊர்;
சிம்லா, சியாமளா தேவியினுடைய ஊர்;
சென்னை, சென்னம்மா தேவியினுடைய ஊர்;
கல்கத்தா, காளி தேவியினுடைய ஊர்;
பாட்னா, படன் தேவியினுடைய ஊர்.

இப்படி, இந்த தேசத்தில் இருக்கக்கூடிய பல ஊர்கள் அம்பாளுடைய திருநாமத்தினால் பெயர் உண்டான ஊர்கள். இதற்கு ஒரு கதை உண்டு.

தக்ஷன் கதை

தாக்ஷாயணியாக இருந்தபோது, அம்பாள், தக்ஷனுடைய யாகத்துக்குப் போனாள். தக்ஷன் அவமரியாதை செய்

தான். அதே சமயத்தில், சிவன் வீரபத்திர ராக அவதாரம் எடுத்தார். காளியோடு போரிட வீரபத்திரர் கையில் தனுஸோடு வந்தார். அதே சமயத்தில், தக்ஷனுடைய மகள் என்ற ஸ்தானத்தினால் ஏற்பட்ட தாக்ஷாயனி என்கிற ரூபமே வேண்டாம் என்று அம்பிகை கருதினாள். நெருப்புக்குள் விழப் போனாள். அப்படி விழுந்த நேரத்தில், அவளுடைய ஆன்மா பறந்தது. பரமேசுவரனுடைய அம்சம்தானே அவள்! அந்த அம்சம் உடலிலிருந்து விடுபட, அந்த உடல் மட்டும் இருந்தது. அந்த ஸ்வரூபத் தைத் தன்னுடைய தோளில் தூக்கிப் போட்டுக்கொண்டு, சிவன் கோபாவேசத் தோடு தக்ஷனிடம் போனார் - தன்னுடைய மனைவி இறந்துபோனதற்கு தக்ஷன்தான் காரணம் என்கிற கோபம். இங்கேயும் அங்கேயும் நடந்தார் அவர். அவருடைய கோபத்தை எப்



படித் தணிப்பது என்று பத்மநாப சகோதரியின் சகோதரர் பார்த்தார்... 'இந்த உருவம் இருப்பதனால்தானே கோபம் வருகிறது? பிரச்னையே இந்த உருவத்தினிடத்தில்தானே ஆரம்பிக்கிறது?' என்று அந்த ஸ்வரூபமே வேண்டாம் என்று முடிவு செய்தார். தமது சக்ராயுதத்தினால் அந்த உடலைத் துண்டாட, அம்பாளுடைய திருவுடலின் பாகங்கள் எங்கெல்லாம் விழுந்தனவோ, அந்த இடங்களெல்லாம் சக்தி பீடங்களாக மாத்ருகா பீடங்களாக மாறின.

- இது இந்த தேசத்தினுடைய வரலாறு! இந்த வரலாற்றுப் பின்னணியிலேதான் பாரதியார் பாடியிருக்கிறார். இதை நன்கு அறிந்து, அனுபவித்துப் பாடியிருக்கிறார். இது எந்த தேசம் தெரியுமா? எங்கள் அகண்ட பாரத தேசம் - இது அம்பிகையினுடைய தேசம், அவளுடைய பிரதேசம் என்பதால் இதை **'வந்தே மாதரம்'** என்று வாழ்த்த வேண்டும் என்கிறார்.

அம்பிகை இவ்வாறு இந்த தேசத்தில், அதன் மண்ணில் தன்னுடைய அம்சத்தை வியாபகம் செய்திருக்கிறாள். அதனால்தான் அவளுக்கு **க்ஷேத்திர ஸ்வரூபா** என்ற திருநாமம். ஒவ்வொரு க்ஷேத்திரத்திலேயும் அதனுடைய ஸ்வரூபமாக இருக்கக்கூடியவள்; அவளையும் க்ஷேத்திரத்தையும் தனியாகப் பிரித்துவிட முடியாது.

(வளரும்)

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57 Registered No.TN/CC(S)DN/144/06-08 Licensed to post without prepayment under PMG's Licence No.WPP TN/CC(S)DN/70/06-08 Registered as a Newspaper in Srilanka Supplement to the Kalki Issue Dated 4.3.2007